
உதயன்
வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30
UTHAYAN - A Lively National Tamil Daily
பக்கம் 28 சுடர்: 28 கதிர்: 295 வள்ளுவர் ஆண்டு: 2044 | புரட்டாதி 01, செவ்வாய் 17.09.2013



# நீதிமன்றை ஏமாற்றினார் நேற்று அமைச்சர் டக்ளஸ்

## உடல் நலக் குறைவால் வழக்குக்கு சமுகமளிக்கவில்லை என அறிவித்துவிட்டு தொழில்நுட்பக் கல்லூரியில் அடிக்கல் நட்டார்

யாழ்ப்பாணம், செப்.17
உடல் நலக் குறைவு காரணமாக நீதிமன்றத்தில் முற்பட முடியவில்லை என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் சட்டத்தரணி யாழ்.மாவட்ட நீதிமன்றில் நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் தெரிவித்துக்கொண்டிருந்த அதே நேரத்தில் யாழ்ப்பாணம் தொழில்நுட்பக் கல்லூரியில் யாழ்.பல்கலைக்கழகக் கல்லூரிக்கான அடிக்கல்லை நட்டார் அமைச்சர் டக்ளஸ்.
அமைச்சர் டலஸ் அழகப் பெரும, வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோரும் நூற்றுக்கணக்கான மக்களும் சாட்சியாக இருந்து அமைச்சர் டக்ளஸ் ஆரோக்கியமாக இருந்ததைக் காணுகையில், அமைச்சர் டக்ளஸ் உடல் நலக் குறைவால் நீதிமன்றுக்கு வரமுடியவில்லை என்றும் அவரது சட்டத்தரணி அப்துல் மஜீத் நீதிமன்றில் சமர்ப்பணம் செய்தார்.
விக்கிலீக்ஸ் வெளியிட்ட அமெரிக்க ராஜதந்திரிகளின் ஆவணங்களில் அமைச்சர் டக்ளஸ் பற்றிக் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களை பிரசுரித்தமைக்காக உதயன் பத்திரிகைக்கு எதிராக அவர் யாழ்.மாவட்ட நீதிமன்றில் மான நஷ்ட வழக்குத் தொடர்ந் 25

## தபால் மூலம் வாக்களிப்பு நாளையும்

கொழும்பு,செப் 17
வடக்கு, வடமேல் மற்றும் மத்திய மாகாண சபைத் தேர்தலில் தபால் மூலம் வாக்களிக்கத் தவறியோருக்கு மற்றுமொரு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.
நாளை புதன்கிழமை காலை 8.30 தொடக்கம் நண்பகல் 12 மணிவரை வாக்களிக்க முடியும் எனத் தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.
மாவட்டத் தேர்தல்கள் தெரிவத்தாட்சி அலுவலகம் மற்றும் தேர்தல்கள் செயலகம் என்பவற்றில் தபால் மூல வாக்காளர்கள் தங்கள் வாக்குகளைப் பதிவு செய்ய முடியும்.
தபால்மூலவாக்களிப்பு 9ஆம், 10ஆம் திகதி 25

## கூட்டமைப்பே வடக்கில் வென்று ஆட்சியமைக்கும்

### நெதர்லாந்து தூதுவரிடம் யாழ்.ஆயர்



யாழ்ப்பாணம், செப்.17
வடக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே வெற்றி பெற்று ஆட்சியமைக்கும் என்று நெதர்லாந்து தூதுவரிடம் அடித்துக் கூறினார் யாழ்.மறை மாவட்ட ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை.
"முன்னரும் தமிழ் மக்களின் கட்சியே வெற்றி பெற்றது. இந்த முறையும் தமிழ் மக்களின் கட்சிதான் வெல்ல வேண்டும் என்று மக்கள் நினைக்கின்றார்கள்" என்று அவர் மேலும் கூறினார்.
வட மாகாணத்துக்கான பயணத்தை மேற்கொண்டுள்ள நெதர்லாந்துத் தூதுவர் லூயிஸ் பியர் 25

## தமிழ்த் தேசியத்துக்காக வாக்குகளை அளியுங்கள்

### யாழ்.பல்கலை மாணவர் ஒன்றியம் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், செப்.17
தமிழ் பேசும் மக்களின் தனித்துவமான இறைமையை நிலைநாட்டக் கூடிய - தமிழ்த் தேசியத்துக்காகப் போராடுவோரையே தமிழ் மக்கள் தெரிவு செய்ய வேண்டும் என்று யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.
இது தொடர்பில் யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிக்கை ஒன்றை விடுத்துள் 25

## வேட்பாளர் கைது

மாங்குளம், செப்.17
தேர்தல் பரப்புரை நடவடிக்கைகளில் ஈடுபட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வவுனியா மாவட்ட வேட்பாளர் சந்திரகுலசிங்கம் உட்பட 5 பேரை வவுனியாப் பொலிஸார் நேற்று மாலை கைது செய்தனர்.
வவுனியா நகர்ப்புறப் பகுதியில் பரப்புரை நடவடிக்கையில் ஈடு 25

## வேட்பாளர் அலுவலகம் முன்பாக குடும்பஸ்தர் அடித்துக் கொலை

### புதுக்குடியிருப்பில் நேற்றிரவு சம்பவம்

புதுக்குடியிருப்பு, செப்.17
புதுக்குடியிருப்பு வள்ளிபுனம் பகுதியில் உள்ள ஆளுங்கட்சி வேட்பாளர் ஒருவரின் தேர்தல் அலுவலகத்துக்கு முன்பாக இளம் குடும்பஸ்தர் ஒருவர் நேற்று இரவு 7 மணியளவில் அடித்துக் கொலை செய்யப்பட்டுள்ளார்.
இந்தக் கொலையைப் புரிந்த கட்சி ஒன்றின் ஆதரவாளர்கள் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.
வள்ளிபுனம் பகுதியைச் சேர்ந்த இராசையா - சுரேன் (வயது 34) 25

## அரச ஊழியர், அதிகாரிகள் பரப்புரையில்; கண்டறிந்தால் ஒழுக்காற்று நடவடிக்கை


### அச்சுறுத்தலுக்கு அஞ்சாதீர் என்கிறார் பிரதித் தேர்தல்கள் ஆணையாளர்

யாழ்ப்பாணம், செப். 17
கடமை நேரங்களில் அரச ஊழியர்கள், அதிகாரிகள் அலுவலகங்களை விட்டு வெளியில் சென்று எந்த வகையிலான மக்கள் சந்திப்புக்களிலும் பங்கு கொள்வதும், தேர்தல் பரப்புரை நடவடிக்கைகளில் ஈடுபடுவதும் இனங்காணப்பட்டால் உடனடியாக ஒழுக்காற்று நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் எனத் தெரிவித்த வட மாகாண பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் சிவன்சுதன் அச்சுதன், பொதுமக்களுக்கு வழங்கப்பட்டுவருகின்ற அரச உதவிகளை எந்தச் சந்தர்ப்பத்திலும் எவ 25






ஐக்கிய தேசியக் கட்சி
தியாகராஜா துவாரகேஸ்வரன்
வடமாகாண சபை முதலமைச்சர் வேட்பாளரும் முதன்மை வேட்பாளரும்




(சீ-11268)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டமைப்பின் விஞ்ஞாபனத்தை ஆட்சேபித்து உயர்நீதிமன்றில் மனு

## வடக்குத் தேர்தலுக்கு இடைக்கால தடை விதிக்கவும் கோரிக்கை

தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தை ஆட்சேபித்து உயர் நீதிமன்றில் நேற்று தாக்கல் செய்யப்பட்ட மனுவில், தீர்ப்பு வெளியாகும் வரை வடமாகாண சபைத் தேர்தலுக்கு இடைக்கால தடை உத்தரவு விதிக்குமாறு கோரப் பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தை தென்னிலங்கை அரசியல் கட்சிகள் கடுமையாக விமர்சித்து வந்த நிலையில், நேற்று அந்த விஞ்ஞாபனத்துக்கு எதிராக உயர்நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

அரசமைப்புக்கு முரணான சில விடயங்கள் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன என்று சுட்டிக்காட்டி, அரசமைப் பின் 157/7அ(4) என்ற பிரிவின் கீழ் மேற்படி மனுவை தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் தாக்கல் செய்துள்ளது.

மனுவில் பிரதிவாதிகளாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், பொதுச் செயலாளர் மாவை சேனாதிராசா, தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய ஆகியோரின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

"தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சிகளோ அமைப்புகளோ நாட்டை பிரிவினைக்குட்படுத்தும் விடயங்களை முன்வைக்கக்கூடாது. இதனடிப்படையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சட்டத்தை மீறியுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, பல கட்சிகளைச் சேர்ந்த ஒரு கூட்டணிக் கட்சியாகும். அத்துடன், கூட்டமைப்பு அங்கீகரிக்கப்பட்ட ஒரு அரசியல் கட்சியல்ல. அக்கூட்டமைப்பு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்திலேயே போட்டியிடுகிறது. அரசமைப்பின் 157ஆவது பிரிவின் படி தனிநாட்டுக்கான முனைப்புகளை மேற்கொள்வது சட்டவிரோதமானது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேரடியாகவோ மறைமுகமாகவோ தனிநாட்டுக்கான கோரிக்கையையே முன்வைத்துள்ளது" என அந்த மனுவில் குறிப்பிடப் பட்டுள்ளது.

எனவே, இது விடயம் தொடர்பில் வழக்குத் தீர்ப்பு வெளியாகும் வரையில் வடக்குத் தேர்தலுக்கு தடை உத்தரவு பிறப்பிக்குமாறு தாம் மனுவில் கோரியுள்ளனர் என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர நேற்று உதயனிடம் தெரிவித்தார்.

இன்று வழக்கு விசாரணை இலக்கம் தமக்கு வழங்கப்படும் என்றும், அதன்பின்னர் எதிர்வரும் 18 ஆம் திகதியள வில் வழக்கு விசாரணை இடம் பெறும் என்றும் குறித்த அமைப்பின் பொதுச்செயலாளர் வசந்த பண்டார கூறினார். (த-சி)

# கூட்டமைப்பை அடக்க அரசிடம் நல்ல மருந்து

### இருக்கிறது என்கிறார் அமைச்சர் நிமல்

தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு எல்லை மீறிச் செயற் பட்டால் அதை அடக்குவதற்குரிய மருந்து தம்மிடம் இருக்கிறது என அரசு நேற்று தெரிவித்தது.

நாட்டைப் பிளவுபடுத்தும் எண்ணம் தமக்கில்லை எனக் கூட்டமைப்பு பகிரங்கமாக அறிவித்துள்ள நிலையில், தனிநாட்டுக்கான பயணத்தின் ஆரம்பமே கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் என்று அரசு மீண்டும் சுட்டிக்காட்டியது.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செய்தியாளர் மாநாடு நேற்று முற்பகல் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலை மையகத்தில் நடைபெற்றது. சு.கவின் சிரேஷ்ட உப தலைவரும், சபை முதல்வருமான அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, பொதுச் செயலாளர் மைத் திரிபால சிறிசேன ஆகியோர் இதில் கலந்துகொண்டனர்.

அரசின் தேர்தல் பரப்புரை நடவடிக்கைகள், அதன் வெற்றி வாய்ப்பு உள்ளிட்ட மாகாண சபைத் தேர்தல் சம்பந்தமான விவரங்களை அமைச்சர் கள் ஆரம்பத்தில் தெளிவுபடுத்தினர்.

அதன் பின்னர், கேள்வி நேரத்தின் போது ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கையி லேயே அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா இவ்வாறு தெரிவித்தார்.

"நினைக்கும் அளவுக்கு பிசாசு கறுப்பல்ல" என ஜனாதிபதி கூறினா லும், கூட்டமைப்பின் அறிவிப்புகள் பாரதூரமானவையாகவே இருக்கின் றன. அதன் முதலமைச்சர் வேட்பாளர், பிரபாகரனை வீரன் என்று கூறுகின்றார். இவற்றுக்கு எதிராக அரசு எடுக்கவுள்ள நடவடிக்கை என்னவென்று ஊடக வியலாளரொருவர் கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர்



நிமல் சிறிபால டி சில்வா,

"நாட்டின் ஒருமைப்பாட்டைப் பாது காப்பதற்காக அரசு அர்ப் பணிப்புடன் செயற்படும். நாட்டைப் பிளவுபடுத்துவதற்கு ஒரு போதும் இடமளிக்கமாட்டோம். வடக்கில் மட்டுமல்ல, தெற்கிலும் மக்களின் உணர்வுகளைத் தூண்டும் வகையில் வீர வசனங்களைப் பேசி வாக்குகளைப் பெறுகின்றனர். இது அன்று தொட்டு இன்றுவரை ஒரு வழமையாக இருந்து வருகின்றது. இதை அரசால் தடுக்கமுடியாது. ஏனெனில், நாம் அனைவருக்கும் கருத்துச் சுதந்திரத்தை வழங்கியுள்ளோம். இதனை மக்கள்தான் உணரவேண்டும்- என்றார். (த-சி)

# வாக்கு எண்ணும் பணி யாழ்.மத்திய கல்லூரியில்


## வாக்குப் பெட்டிகளும் அங்கிருந்தே செல்லும்

வாக்கெண்ணும் நிலையமாகச் செயற்படவுள்ள யாழ். மத்திய கல்லூரியிலிருந்து வெள்ளிக்கிழமை காலை வாக்குப்பெட்டிகள் வாக்களிப்பு நிலையத்துக்கு எடுத்துச் செல்லப்படும் என்று யாழ்.மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் சிவன்சுதன் அச்சுதன் தெரிவித்தார்.

வடமாகாண சபைத் தேர்தல் எதிர்வரும் 21ஆம் திகதி இடம் பெறவுள்ளது. இந்தத் தேர்தலுக்குரிய சகல ஏற்பாடுகளும் யாழ்.மாவட்டத்தில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

முதன்முறையாகத் தேர்தல் வாக்கெண்ணும் பணிகள் யாழ்.மாவட்டச் செயலகத்துக்கு வெளியே யாழ்.மத்திய கல்லூரியில் இடம்பெறவுள்ளன.

அத்துடன் இந்தத் தேர்தலின் போது முதன்முறையாக 43 வாக்களிப்பு நிலையங்களில்



"முதன்முறையாகத் தேர்தல் வாக்கெண்ணும் பணிகள் யாழ்.மாவட்டச் செயலகத்துக்கு வெளியே யாழ்.மத்திய கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

பிளாஸ்ரிக் பெட்டிகள் பயன்படுத்தப்படவுள்ளன.

வாக்குப் பெட்டிகள், யாழ். மத்திய கல்லூரியிலிருந்து எதிர் வரும் 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7 மணி முதல் வாக்களிப்பு நிலையங்களுக்குச் சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்களால் எடுத்துச் செல்லப்படவுள்ளன.

526 வாக்களிப்பு நிலையங்களுக்கும் பஸ்களின் மூலம் வாக்களிப்பு பெட்டிகள் பொலிஸ் பாதுகாப்புடனேயே எடுத்துச் செல்லப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-5)

# வடக்கில் தேர்தல் விதிகள் மோசமாக மீறப்படுகின்றன

### கோபாலசுவாமியிடம் கூட்டமைப்பு சுட்டிக்காட்டு

கொழும்பு,செப் 17

வடக்கில் தேர்தல் வன்முறைகள் மோசமாக மீறப்படுகின்றமை குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இலங்கை வந்துள்ள இந்திய முன்னாள் தேர்தல் ஆணையாளரிடம் முறைப்பாடு செய்துள்ளது.

இந்தியாவின் முன்னாள் தேர்தல் ஆணையாளர் கோபாலசுவாமிக்கும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பிரதிநிதி களுக்கும் இடையில் சந்திப்பொன்று நேற்று இடம்பெற்றுள்ளது.


இதன்போதே கூட்டமைப்பு இந்த விடயத்தைச் சுட்டிக்காட்டியுள்ளது.

மாகாண சபைத் தேர்தல்களின் கண்காணிப்பு நடவடிக்கைகளில் இந்தியாவின் முன்னாள் தலைமைத் தேர்தல் ஆணையாளர் கோபாலசுவாமி தலைமையில் தெற்காசிய தேர்தல்கள் கண்காணிப்பு மையத்தின் சார்பாக 21 கண்காணிப்பாளர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்தக் குழுவினர் மாகாண சபைத் தேர்தல்களில் போட்டியிடும் கட்சிகளின் முக்கியஸ்தர்களை நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளனர். இதன் ஒரு அங்கமாகவே இந்தியாவின் முன்னாள் தலைமை தேர்தல் ஆணையாளருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளுக்கும் இடையில் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பாக அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனும் தமிழரசுக் கட்சியின் கொழும்புக் கிளைத் தலைவர் கே.வி.தவராசாவும் கலந்துகொண்டனர்

இதன்போது வடமாகாணத்தில் நடைபெறும் தேர்தல் வன்முறைகளையும் தேர்தல் சட்டங்கள் மீறப்படுவதையும் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தேர்தல்கள் கண்காணிப்பாளர்களுக்குத் தெளிவாக எடுத்துரைத்தார். (த)



தேர்தல் சுவரொட்டிகளை ஒட்டுவது தேர்தல் விதி மீறல், இப்படியிருக்க தேர்தல் அலுவலகமாகச் செயற்பட்டுக்கொண்டிருக்கும் யாழ்.மாவட்டச் செயலகச் சுவரிலேயே ஆளுங் கட்சியினர் சுவரொட்டிகளை ஒட்டியுள்ளனர். இது என்ன நியாயமப்பா? (5-20)

### விக்கிரமபாகு மீது தாக்குதல்

கொழும்பு,செப் 17

புத்தளம், நுரைச்சோலையில், நவசமசமாசக் கட்சியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரத்ன, நேற்றுமுன்தினம் இரவு அடையாளம் தெரியாத ஆயுதக் குழுவொன்றினால் தாக்கப்பட்டுள்ளார்.

வடமேல் மாகாணசபைத் தேர்தலில், தேசிய ஐக்கிய முன்னணியின் கீழ் போட்டியிடும் தமது கட்சியின் வேட்பாளருக்கு ஆதரவாக, துண்டுப்பிர சுரங்களை விநியோகித்துக் கொண்டிருந்தபோதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தில், புத்தளம் மாவட்ட தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் மருத்துவர் பெரொஸ் காயமடைந்துள்ளார்.

# பல்கலைக்கழக கல்லூரிக்கு நேற்று அடிக்கல் நடுகை

யாழ்ப்பாணம், செப். 17

யாழ். பல்கலைக்கழக கல்லூரிக்கான அடிக்கல் நேற்றுதிங்கட்கிழமை தொழில் நுட்பக்கல்லூரியில் நாட்டப்பட்டது.

இளைஞர் விவகார அமைச்சர் டலஸ் அழகப்பெரும, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மற்றும் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோர் இணைந்து பல்கலைக்கழக கல்லூரிக்கான அடிக்கல்லை நட்டனர்.

கல்லூரிக்கான நினைவுக் கல்லை இளைஞர் விவகார அமைச்சர் டலஸ் அழகப் பெருமவும், அமைச்சர் டக்ளஸும் இணைந்து திரைநீக்கம் செய்து வைத்தனர்.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான மொஹான் லால் க்ரேரோ, மு.சந்திரகுமார் உட்பட பலரும் உரையாற்றினர். (த-7-400)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகாணசபைத் தேர்தல் - 2013
யாழ் மாவட்டம்



15
தர்மலிங்கம் சித்தார்த்தன்
(முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்)
தமிழ் தேசியக் கூட்டமைப்பு (TNA)

# மாகாண சபை தேர்தல்

உதயன் சிறப்புக் கண்ணோட்டம்

வடமாகாண சபைத் தேர்தல் - 2013
இலங்கைத் தமிழரசுக்கட்சி



10 Like
க.வி.விக்னேஸ்வரன்
facebook.com/wigneswaran.cv



# ஜனாதிபதி மஹிந்தவும் என்றோ ஒருநாள் போர்க் குற்ற விசாரணைக்கு உட்படுவார்

## ஏழாலையில் கூட்டமைப்பு எம்.பி சரவணபவன்

யாழ்ப்பாணம், செப். 17
மனிதப் படுகொலைகளுக்கு காரணமானவர்கள் எவரும் சர்வதேச விசாரணையில் இருந்து தப்பியதில்லை. இதன்படி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் என்றோ ஒருநாள் சர்வதேச போர்க்குற்ற விசாரணையின் முன்நிற்கவேண்டி வரலாம்.

இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன்.

நேற்று முன்தினம் ஏழாலை வடக்கில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும் போது அவர் மேலும் தெரிவித்ததாவது;

வட மாகாணத்தில் இராணுவத்தினரின் அட்டகாசமும் கெடுபிடிகளும் அதிகரித்த வண்ணம் இருக்கின்றன. இன்று (நேற்று முன்தினம்) கொல்லங்கலட்டிபிள்ளையார்கோயில் திடலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் பரப்புரைக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

கூட்டத்தில் கலந்து கொள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் மாகாண சபை வேட்பாளருமான சித்தார்த்தன்- மற்றும் கஜதீபன் ஆகியோர் அங்கு சென்றபோது கூட்டத்துக்கு வந்த மக்களை இராணுவத்தினர் துப்பாக்கியை காட்டி மிரட்டி வீடுகளுக்குச் செல்லுமாறு கலைத்துள்ளனர். இதுதான் இராணுவத்தின் வேலை.

இந்த விடயம் உடனடியாக தேர்தல் ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டது. தேர்தல் திணைக்கள அதிகாரிகள் வந்த போது இராணுவத்தினர் மறைந்து விட்டனர்.

இன்று தென்னிலங்கை அரசியல்வாதிகள் அரசியல் பிரச்சினையை தெருச்சண்டை போலாக்கிவிட்டனர். ஜனாதிபதியின் அனுசரணையுடன் இயங்கும் ஜாதிக ஹெல உறுமய, பொது பல சேனா போன்ற அமைப்புக்கள் துவேசத்தைக் கக்குகின்றன.

தென்பகுதி மக்களை குழப்புபவர்கள் இவர்கள் தான்; நாமல்ல. எமது இளைஞர்களின் போராட்டத்தை தனித்து நின்று இவர்களால் வெற்றிகொள்ள முடியவில்லை. இதனால் இலங்கையில்பயங்கரவாதத்தை ஒழிக்க வேண்டும் என்று சர்வதேச நாடுகளிடம் உதவி பெற்றனர். விசேடமாக போர் முடிந்தவுடன் தமிழர்களின் பிரச்சினைகளுக்கு நியாயமான தீர்வை ஏற்படுத்துவேன். 13 ஆம் திருத்தத்துக்கு மேலான அதிகாரங்களை வழங்குவேன் என்று வாக்குறுதி அளித்தே- சர்வதேச உதவிகளைப் பெற்று போராட்டத்தை மௌனிக்கச் செய்தனர். பின்னர் சர்வதேசத்தையே ஏமாற்றும் அளவுக்கு மஹிந்த அரசு செயற்படுகின்றது.

இலங்கை அரசின் ஏமாற்று நடவடிக்கைகளை இப்போது சர்வதேசம் புரிந்து கொண்டுள்ளது. சர்வதேச சமூகம் வட மாகாணத்தில் இருந்து இராணுவம் அகற்றப்பட வேண்டும். அத்துடன் முகாம்களுக்குள் முடக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது.

ஆனால் இராணுவத்தின் அடக்குமுறைகளும் அட்டகாசமும் ஓயவில்லை. ஜனாதிபதியோ தேர்தல் ஆணையாளரோ எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை.

மனிதப்படுகொலைகள் செய்பவர்கள் எவரும் சர்வதேச விசா'ரணையில் இருந்து தப்ப முடியாது. சர்வதேசத்தின் முன் பதில் சொல்லியே ஆக வேண்டும். இந்த நிலை நமது ஜனாதிபதிக்கும் ஏற்படலாம்.



சர்வ்தேசத்துக்கு எமது உறுதியான நிலைப்பாட்டை வெளிப்படுத்தும் ஓர் அரிய சந்தர்ப்பம் இந்த வடமாகாண சபைத் தேர்தல். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கோ எங்களுக்கோ வாக்கு அளிப்பதல்ல. இது நமக்கு நாமே வாக்களிப்பது. நமது ஏகோபித்த தீர்ப்புத் தான் இந்தச் சிங்கள இராணுவத்தை நமது மண்ணில் இருந்து வெளியேற்ற உதவும்-என்றார். (ஐ-02)

# றெமீடியஸ் எனக்குத் துரோகம் செய்துவிட்டார்

## விந்தன் கனகரத்தினம் கவலை

யாழ்ப்பாணம், செப்.17
தமிழினத்தைக் காட்டிக் கொடுத்து துரோக அரசியல் புரிவோர் குறித்து மக்கள் விழிப்பாயிருந்து அவர்களை எதிர்வரும் 21 ஆம் திகதி நிராகரித்து தகுந்த பாடம் புகட்ட வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் விந்தன் கனகரத்தினம்.

பாஷையூரில் நடைபெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

எதிரணியில் இணைந்து எமக்கு எதிராகப் போட்டியிடும் றெமிடியஸ் எனது நண்பராவார். கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் அவரை வேட்பாளராக நிறுத்துமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேசி வேட்பாளர் பட்டியலில் இடம்பெற வைப்பதில் பெரும்பங்காற்றினேன்.

பிரசுரங்களைத் தயாரித்து ஒட்டுவது, பிரசாரம் செய்வது போன்ற வேலைகளில் தோளோடு தோள் நின்று உதவினேன். ஆனால் சிறிய அளவு வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறும் வாய்ப்பு அவருக்கு நழுவியது. அவருக்காக நான் போட்டியிடுகிறேன் என்ற உணர்வுடன் உழைத்தேன்.

மீண்டும் யாழ்.மாநகர சபைத் தேர்தலில் முதன்மை வேட்பாளராக போட்டியிட்டு வெற்றிபெற்று எதிரணித் தலைவராக விளங்கினார் றெமிடியஸ். ஆனால் நாளடைவில் கட்சிக்கும் தமது பொறுப்புக்கும் விசுவாசமின்றி ஆளும் தரப்புக்குத் துணை போகத் தொடங்கிவிட்டார். பின்னர் கட்சியை விட்டு விலகினார். அவரை நான் சமரசம் செய்ய முற்பட்டபோது அதை உதாசீனம் செய்தார். தற்போது வெற்றிலைச் சின்னத்தில் இணைந்து வளர்த்த கடா மார்பில் பாய்ந்தது போல் செயற்படுகின்றார்.

அரசியலுக்கு வழிசமைத்துக் கொடுத்த எனக்கே இன்று றெமீடியஸ் துரோகம் இழைக்கிறார். எனது சுவரொட்டிகளின் மேல் தனது சுவரொட்டிகளை ஒட்டும் அளவுக்கு நன்றி மறந்த செயல்களில் ஈடுபடுகின்றார்.

சுயநலம் நிறைந்த றெமீடியஸ் போன்றவர்கள் அதிகாரத்துக்கு வந்தால் நீதி. நேர்மையான, மக்கள் சேவையை எதிர்பார்க்க முடியுமா? துரோக அரசியலை ஓட விரட்டி உரிமை அரசியலை ஆட்சியில் ஏற்றும் பொறுப்பு ஒவ்வொரு தமிழ் மக்களையும் சார்ந்ததாகும்- என்றார். (ஐ-135)

**தேர்தல் கண்காணிப்பு அலுவலகங்கள் பவ்ரல்**

**யாழ்ப்பாணம்:**
இல.81, குருசோ றோட்,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 0724 965396

**கிளிநொச்சி:**
இல.01, அம்பாள்குளம்,
கிளிநொச்சி.
தொ.பே: 077 391 3970

**மன்னார்:**
இல.78/1, எஸ்பிளானட் றோட்,
மன்னார்.
தொ.பே: 077 692 4547

**முல்லைத்தீவு:**
சென் மத்தியூஸ் தேவாலய வீதி,
தண்ணீருற்று
தொ.பே: 077 3297604

**வவுனியா:**
இல. 73D, 2ஆம் குறுக்குத் தெரு,
வவுனியா.
தொ.பே: 077 603 4650

**இலங்கைத் தாய்மாரும், மகள்களும்**
வடமாகாண சபை தேர்தல் கண்காணிப்பு

உங்கள் ஜனநாயக உரிமையை பெண்கள் பாதுகாப்பார்கள்.

தேர்தல் வன்முறைகள், தேர்தல் சட்ட மீறல்கள் மற்றும் துன்புறுத்தல்களுக்கு எதிராகக் கிளர்ந்தெழுவோம்.

இந்த நோக்கத்துக்காக உருவாக்கப் பட்டுள்ள எமது விசேட கருமபீடத்துக்கு பெண் வேட்பாளர்களும், பெண் வாக்காளர்களும் தமது முறைப்பாடுகளைத் தெரிவிக்கலாம்.

பெண்கள் முறைப்பாட்டுப் பிரிவு:
தொ.பே: 0777 298 387 (லோகேஸ்வரி)
0773 442 895 (நளினி)
தொலைநகல்: 0094112822375/
0094112231152.

பத்மினி வீரசூரிய
ஆளுநர்

**Mothers and Daughters of Lanka**

**Provincial Council Election Monitoring**

Women , protect your democratic rights.


Rise up against election violence,violation of election laws and harassments.

We invite women candidates and voters to send your complaints to our special unit dedicated for this purpose.

MDL Women's Complaint Unit :
Mobile numbers.
0777298387 Logeswary
0773442895 Nalini
Fax. 094 112 822 375 / 2231 152

Padmini Weerasooriya -
Convenor MDL

**மாகாணசபைத் தேர்தல் - 2013**
**முல்லைத்தீவு மாவட்டம்**





**கந்தையா சிவநேசன் (பவன்),J.P**
**என்றும் மண்காத்து மக்களின் நலன்காத்து நிற்கும் முல்லை மைந்தனை ஆதரிப்போம்...**
- முல்லை வாழ் மக்கள்
**தமிழ் தேசியக் கூட்டமைப்பு (TNA)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடமாகாண சபைத் தேர்தல் 2013

கிளிநொச்சி மாவட்டம்



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

அகிம்சையையும் சகிப்புத் தன்மையையும் மேம்படுத்தும் 'யுனெஸ்கோ' விருதுபெற்ற இலங்கையின் ஒரேயொரு அரசியல்வாதி

**வீ.ஆனந்தசங்கரி**

தமிழரசுக் கட்சி | X 2

## "ஊரை விட்டு ஓட மாட்டேன்"

நான் தேர்தலில் போட்டியிடுவது அறிக்கை விடுவ தற்கோ அல்லது தேர்தல் முடிந்தவு டன் ஊரைவிட்டு ஓடிவிடுவதற்கோ அல்ல.

இவ்வாறு தெரி வித்தார் ஜனநா யக ஐக்கிய முன் னணி வேட்பாளர் அருள்ஜெயந் திரன். அவர் மேலும் தெரி விக்கையில்:

எமக்கு ஆட்சிய மைக்கமக்கள் அங் கீகாரம் வழங்கி னால் எமது ஆட் சிக் காலத்தில் நாம் கூறியவை அனைத்தையும் நிறைவேற்றுவோம். இல்லையேல் எம் மைத் தட்டிக் கேட் கும் பூரணஉரிமை உங்களுக்குஉண்டு - என்றார். (ஐ)

## வடமாகாண சபைத் தேர்தல் 2013

முல்லைத்தீவு மாவட்டம்



வாக்குகளால் தாக்குவோம்! வரலாறு படைப்போம்!!

2

X 2 துரைராசா ரவிகரன்

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு (இலங்கைத் தமிழரசுக் கட்சி)

## வடமாகாண சபைத் தேர்தல் 2013

கிளிநொச்சி மாவட்டம்



வீடு எங்கள் சின்னம்
கல்வி எங்கள் கண்கள்

**தம்பிராசா குருகுலராசா**

X 5

(இலங்கைத் தமிழரசுக் கட்சி)

## வடமாகாண சபைத் தேர்தல் 2013

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு
கிளிநொச்சி மாவட்டத்தின்



ஒரேயொரு பிரதான பெண் வேட்பாளர்
வடக்கில் உள்ள ஒவ்வொரு பெண்ணுக்கும் உரிமைக்கும் சலுகைக்கும் வித்தியாசம் தெரியும்.
பெண் தலைமைத்துவ மேம்பாட்டுக்காக எனது குரல் தொடர்ந்து ஒங்கி ஒலித்துக் கொண்டிருக்கும்

X 4

**கே. வினுபானந்தகுமாரி** (ஆசிரியை)

(இலங்கைத் தமிழரசுக் கட்சி)

## வடமாகாண சபைத்தேர்தல் 2013
யாழ்.மாவட்டம்



எங்களதும், உங்களதும் காணாமல் போன உறவுகளுக்காக.... விடுதலையின்றி சிறைகளில் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் அரசியல் கைதிகளுக்காக குரல் எழுப்பி வரும் திருமதி அனந்தி சசிதரனை ஆதரியுங்கள்.

X 1

**திருமதி அனந்தி சசிதரன்**
(எழிலன்)

## வடமாகாண சபைத் தேர்தல் 2013

யாழ் மாவட்டம்

சுதந்திரம் எமது பிறப்புரிமை!
சுயாட்சி எமது கோரிக்கை!!



தமிழ் இனப் படுகொலைகளுக்காக வெளிப்படையான சர்வதேச நீதி விசாரணை தேவை என முக்கிய தமிழர் எம்.கே.சிவாஜி லிங்கம் பகிரங்கமாக வலியுறுத்தும் ஒரே ஆளாக இருப்பதாக அமெரிக்கத் தூதுவர் தனது நாட்டின் வாஷிங்டன் நகருக்கு 15.01.2010 இல் அனுப்பி வைத்த செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்ததாக விக்கி லீக்ஸ் இணையத்தளம் செய்தி வெளியிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

X 9

**எம்.கே.சிவாஜிலிங்கம்**

(முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்)
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்.

| இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி | | | | | | | | X | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | |

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைமையிலான ஐந்து கட்சிகளின் கூட்டணியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வெற்றி பெறச் செய்வோம்

* தேசியம் * தாயகம் * சுயநிர்ணய உரிமை

## வடமாகாண சபைத் தேர்தல் 2013

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்
யாழ் மாவட்டம் (இலங்கை தமிழரசுக் கட்சி)



**சீ.வீ.கே. சிவஞானம்**

துணைப் பொதுச் செயலாளர்
(இலங்கைத் தமிழரசுக் கட்சி)
ஓய்வு நிலை மாநகர ஆணையாளர்
பட்டயச் செயலாளர்

X 8

உங்களுக்குத் தெரிந்தவர்
உங்களைத் தெரிந்தவர்
உங்களோடு வாழ்பவர்

சலுகைக்கு முடிவும் உரிமைக்கு விடிவும்!!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டமைப்பு ஆட்சி அமைப்பதைத் தடுக்க பௌத்த துறவிக்கு அதிகாரம் வழங்குவது யார்?

## அவரைக் கைது செய்து சிறை வைக்க வேண்டும் என்கிறார் செல்வராசா எம்.பி.



யாழ்ப்பாணம், செப்.17
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றி பெற்றாலும் அவர்களை ஆட்சி அமைக்க விடக் கூடாது எனக் கூறுகிறார் பௌத்தத் துறவி ஒருவர். இவருக்கு இப்படிப் பேசும் அதிகாரத்தைக் கொடுத்தது யார்?
இவ்வாறு கேள்வி எழுப்பினார் மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் பொன்.செல்வராசா.
நேற்றுமுன்தினம் மாலை உடுத்துறையில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:
ஜனநாயக சோசலிச குடியரசின் அரசியல் யாப்புக்கு அமைய நடைபெறும் தேர்தலில் வெற்றி பெறுபவர்களை ஆட்சி அமைக்க விடமாட்டோம் எனக் கூறுவது அரசமைப்பையே அவமதிப்பது மட்டுமன்றி அதி உச்ச அடிப்படை மனித உரிமை மீறலாகவும் கொள்ளத்தக்கது. எனவே இந்தத் துறவியை உடனடியாக கைது செய்து சிறையில்அடைக்கவேண்டும்.

**எந்தக் கொம்பனாலும் முடியாது**

இந்தத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வெற்றியை எந்தக் கொம்பனாலும் தடுத்துவிட முடியாது. இதனால் கொதிப்படைந்துள்ள ஹெல உறுமய கட்சித் தலைவரான இந்தத் துறவி வெற்றி பெற்றாலும் ஆட்சி அமைக்க விடமாட்டோம். சிங்களவர்களின் பொறுமையை சோதிக்க வேண்டாம் என்று கூறியதுடன் நமது தேர்தல் விஞ்ஞாபனத்தை தேர்தல் ஆணையாளரிடம் கொண்டு சென்று தடை செய்ய வேண்டும் என முறைப்பாடு செய்துள்ளார்.
கூட்டமைப்பின் விஞ்ஞாபனம் நாட்டின் இறைமைக்கு குந்தகம் ஏற்படுத்தாத வகையில் எமது உணர்வுகளை வெளிப்படுத்தி உள்ளது.
இது ஒரு ஜனநாயக நாடு. இங்கே சகலருக்கும் அரசியல் சுதந்திரம் உண்டு ஆனால் இந்தப் பௌத்த துறவி தென் பகுதியில் இனவாதம் பேசி குழப்பம் விளைவிக்க முனைகின்றார். இவர்தான் நாட்டின் அமைதியைச் சீரழிக்கப் பார்க்கின்றார். எனவே தேசிய நலன் கருதி இந்தத் துறவியையே கைது செய்ய ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும்.
தென்பகுதியில் உள்ள எட்டு மாகாண சபைகளின் தலைவர்களும் வடமாகாணசபைக்கு நீதியரசர் விக்னேஸ்வரன் முதலமைச்சராக வரவேண்டும் என எதிர்பார்க்கின்றனர். மாகாண சபைக்கு அதிகாரங்கள் இருந்தும் அவற்றை அவர்களில் நடைமுறைப் படுத்த முடியவில்லை. மத்திய அரசின் தலையாட்டிப் பொம்மைகளாகவே அவர்கள் இருக்கின்றனர்.
வடமாகாண சபைக்கு முன்னாள் உயர்நீதிமன்ற நீதியரசர் விக்னேஸ்வரன் முதலமைச்சராகிவிட்டால் அவர் சட்ட ரீதியாக மாகாண சபைகளுக்கான அதிகாரங்களைவிட்டுக்கொடுக்கமாட்டார். அவர் மூலமாக தமக்கும் அதிகாரங்கள் கிடைத்து விடும் என எதிர் பார்க்கின்றனர். அதுதான் யதார்த்தம்.
ஜனாதிபதி கூறுவது போன்ற விக்னேஸ் வரன் வடக்கில் போட்டியிட முடியாது என்றால் அம்பாந்தோட்டையில் பிறந்த சபா நாயகரின் மகன் எப்படி குருநாகலில் முதலமைச்சராவது? இரத்தினபுரியில் பிறந்த சுஸந்த புஞ்சி நிலமே எப்படி அம்பாறையில் வாக்கு கேட்க முடியும்? கொழும்பில் பிறந்த சஜித் பிரேமதாச எப்படி அம்பாந்தோட்டையில் போட்டியிட்டு நாடாளுமன்றுக்கு வர முடியும்?
இவர்களால் முடியும் என்றால் ஏன் நீதியரசர் விக்னேஸ்வரன் வடமாகாண சபைக்கு முதலமைச்சராக வர முடியாது. இந்தக் கோமாளிகளின் பேச்சுக்கும் அறியாமைக்கும் நான் அனுதாபம் தெரிவிக்கின்றேன்.
வடக்குதேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்து தமிழ் மக்கள் இவர்களுக்கு நல்ல பாடம் புகட்டுவர்- என்றார். (ஐ-2)

# அரசையும் கூலிப்படையையும் தமிழ் மக்கள் ஏற்கமாட்டார்கள்

**கூட்டமைப்பு வேட்பாளர் ஜெயசேகரன்**


யாழ்ப்பாணம், செப்.17
நியாயமான அரசியல் தீர்வை உள்ளடக்கிய தேர்தல் விஞ்ஞாபனத்தை ஏற்றுக்கொள்ள மறுக்கும் இந்த அரசையும் அதன் கூலிப்படைகளையும் எமது மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடாது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் இ.ஜெயசேகரன் கேட்டுக்கொண்டுள்ளார்.
நல்லூர் பகுதியில் இடம் பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
நாங்கள் எமது மக்களின் நியாயமான அரசியல் அபிலாசைகளை முன்வைத்த தேர்தல் விஞ்ஞாபனத்தை தயாரித்துள்ளோம் தமிழ் மக்களுக்கான தீர்வைப் பெற்றுத் தருவோம் என்று. தேர்தல் விஞ்ஞாபனத்தை முன்வைக்க முடியாதவர்கள் எங்கள் தேர்தல் விஞ்ஞாபனத்தை விமர்சிக்கின்றனர்,
தமிழீழ விடுதலைப் புலிகள் இருந்தபோது ஏற்றுக் கொள்ளப்பட்ட சமஷ்டித் தீர்வையே நாம் தற்போதும் முன் வைத்துள்ளோம். குறிப்பாக மக்களின் பிரச்சினையையே முன்வைத்துள்ளோம்.
இதனை ஏற்றுக்கொள்ள மறுக்கும் அரசைத் தமிழ் மக்கள் ஏன் ஆதரிக்க வேண்டும். எங்களது அடிப்படை அபிலாசைகளையே நிராகரிக்கும் இவர்களை எமது மக்கள் நிராகரிக்க வேண்டும்-என்றார். (ஐ-5)

தமிழீழ விடுதலைப் புலிகள் இருந்தபோது ஏற்றுக் கொள்ளப்பட்ட சமஷ்டித் தீர்வையே நாம் தற்போதும் முன் வைத் துள்ளோம். குறிப்பாக மக்களின் பிரச்சினையையே முன் வைத்துள்ளோம்.


# வடக்கில் வசிக்கும் வாக்காளப் பெருமக்களே!

- ஜனநாயகத்தை முதன்மைப்படுத்தி சகல இனத்தவர்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு அரசியல் தீர்வை முன்வைத்தல்
- சகல இன மக்களும் சம உரிமையுடனும் சம அந்தஸ்த்துடனும் வாழக்கூடிய சூழலை உருவாக்குதல்.
- நாட்டை பொருளாதார ரீதியில் அபிவிருத்தியடையச் செய்யக் கூடிய வல்லமை கொண்ட தலைவர் ரணில் விக்கிரமசிங்க என்பது நீங்கள் அறிந்த உண்மையாகும்.
- இந்த இனவாத அரசாங்கம் ஆட்சியில் இருக்கும்வரை நீதியையோ, நியாயத்தையோ எதிர்பார்க்க முடியாது.
- யுத்தத்தினால் இழந்த செல்வங்களையும், சொத்துக்களையும் மீண்டும் பெற்றுக்கொள்வதற்கான ஒரு பொறிமுறையை உருவாக்கி சகலருக்கும் நியாயம் கிட்டக்கூடிய வழிமுறையை ஐக்கிய தேசிய கட்சி முன்னெடுக்கும்.
- ஆட்சி மாற்றத்திற்கான ஒரு ஆரம்பம்.
- சிறுபான்மை மக்களுக்கான பாதுகாப்பதை உறுதிசெய்தல்

**ஐக்கிய தேசியக் கட்சியை**
வெற்றிபெறச் செய்வோம்.



ஐக்கிய தேசியக் கட்சி - நாட்டுக்காக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடமாகாண சபைத்தேர்தல் - 2013
### முல்லைத்தீவு மாவட்டம்

சோரம் போகாத எங்கள் மண்ணின் மைந்தன்.......

முதன்மை வேட்பாளர் முல்லைத்தீவு மாவட்டம்

**திரு. ம.அன்ரனி ஜெயநாதன்**

(ஓய்வு நிலை அதிபர் கோட்டக்கல்வி அதிகாரி)
( உப செயலாளர் இலங்கை தமிழரசுக்கட்சி, மத்தியகுழு உறுப்பினர் )

அன்றும் இன்றும் என்றும்
எங்களுடன் எங்களுக்காக
முல்லையின் விடி வெள்ளியாய்
அடக்கு முறையினை என்றும் எதிர்ப்பவனே
எங்கள் வாக்கு என்றும் உனக்கே.
-முல்லை மக்கள்-



இலங்கை தமிழ் அரசுக்கட்சி X 5

## வடமாகாண சபைத் தேர்தல் 2013

யாழ்ப்பாண மாவட்டம்

ஒரு இளைஞனின் தெரிவு

இளைஞர்களுக்காகவும் இருக்கட்டும் X 14



**சந்திரலிங்கம் சுகிர்தன்** (B.Com)

(தமிழரசுக் கட்சி வேட்பாளர்) தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு



ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின்
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வேட்பாளர்

**சுந்தரம் டிவகலாலா**



முன்னாள் செயலாளர், கல்வி,பண்பாட்டு,விளையாட்டுத்துறை அமைச்சு, வடக்கு கிழக்கு மாகாணம்.

அவர்களை ஆதரிப்போம்

X 19

(சீ/11220)

கல்வியின் ஊடாக அரசியல், சமூக பொருளாதார மேம்பாடு

## வட மாகாண சபைத்தேர்தல் 2013

யாழ் மாவட்டம்



பேரினவாதத்துக்கும் தமிழினவாதத்துக்கும் நடுவே உங்கள் தேவைகளை நிறைவேற்றும் வல்லமை கொண்டவர்கள் நாம்!

**ஜயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன்** (ரங்கன்)
(பருத்தித்துறை பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவர்)

X 5

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி

## வடமாகாண சபைத் தேர்தல் -2013
### மன்னார் மாவட்டம்



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு (இலங்கைத் தமிழரசுக் கட்சி)

நாளை நமது பிள்ளைகளின் சுதந்திரம்
இன்று- நமது கைகளில் உள்ள வாக்குகளே தீர்மானிக்கும்

**இ.சாள்ஸ் நிர்மலநாதன்**
[தொழில் அதிபர்]

X 3

## வடமாகாண சபைத் தேர்தல் 2013

யாழ்மாவட்டம்



சமூக சமத்துவத்துக்காகவும்,
பெண்களின்
உரிமைகளுக்காகவும்

**ஞானசக்தி ஸ்ரீதரன்**

(முன்னாள் வடக்கு கிழக்கு மாகாண சபை உறுப்பினர்)

X 13

## வடக்கு மாகாணசபைத் தேர்தல் - யாழ். மாவட்டம்



தேசியம்... சூழலியம்... சுய நிர்ணயம்

எமது தேசியச் சூழலை நல்லாட்சி செய்யும் அரசியல் அதிகாரம் எம்மிடமே இருக்க வேண்டும்!

நம்பிக்கைக்குரிய தெரிவு

**பொ.ஐங்கரநேசன்**
M.Sc,PGDJMC

இலங்கைத் தமிழரசுக் கட்சி X 2

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

## வட மாகாண சபைத் தேர்தல் 2013

யாழ் மாவட்டம்



தாயகம், தேசியம்,
தன்னாட்சி உரிமை
பெற்றுவாழ
அபிவிருத்தி நோக்கி நகர
நலிவுற்றோர் நலன்கள்பெற
ஒடுக்கப்பட்ட மக்களின்
உரிமைக்குரல்

தமிழரசுக் கட்சியின்
கோப்பாய் கிளை செயலாளர்

அரியகுட்டி பரஞ்சோதிக்கே
வாக்களிப்போம்

**அரியகுட்டி பரஞ்சோதி**
(மாநகரசபை உறுப்பினர்)

X 3

இலங்கை தமிழரசுக் கட்சி
(தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு)

## வடக்கு மாகாண சபைத் தேர்தல் 2013
### யாழ்மாவட்டம்

(இலங்கைத் தமிழரசுக் கட்சி)

தேசியம் - சுயநிர்ணயம் - தன்னாட்சி

வடக்கு மாகாண
உட்கட்டுமான அபிவிருத்திக்கு
நம்பிக்கைக்குரிய தெரிவு



X 18

**வே.சிவயோகன்**

அனுபவம் மிகுந்த பொறியியலாளர்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

(31178)(10,6,3)

## புலம் பெயர்ந்த தமிழர்களின் அன்பான வேண்டுகோள் :

ஆதரியுங்கள் திருமதி. அனந்தி சசிதரன் (எழிலன்) இலக்கம் :1



அனந்தி தமிழ் இனத்தின் உரிமைக்குரல்!
அனந்தி பாதிக்கப்பட்டோரின் உணர்ச்சிக்குரல்!!
அனந்தி தாய்க்குலத்தின் வீரக்குரல்!!!

யாழ் மாவட்டம்

X 1

முப்பது வருடகால போராட்டத்தின் தியாகங்கள் வீண் போகக் கூடாது !

## எம்மண், எம்மக்கள், எம்முரிமை
## உங்கள் தெரிவு

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி; தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

X 10



**க.வி.விக்னேஸ்வரன்**

ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்ற நீதியரசர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பாக கிளிநொச்சி மண்டபத்தில் போட்டியிடும் கீதாஞ்சலிக்கு ஆதரவாக ஜனாதிபதி தேர்தல் பரப்புரை செய்தபோது.... (ஜ-21)

# சர்வதேசம் தந்த சந்தர்ப்பத்தை சரியாகப் பயன்படுத்துங்கள்

## கிளிநொச்சியில் கூட்டமைப்பு வேட்பாளர் குருகுலராஜா

தமிழ் மக்கள் சுதந்திரமாகவும் நிம்மதியாகவும் வாழ்வதற்கான சந்தர்ப்பத்தை சர்வதேசம் எமக்குத் தந்திருக்கிறது. அதனைத் தகுந்த முறையில் பயன்படுத்தி பயன் பெற்றுக் கொள்வது எங்கள் கைகளிலேயே உள்ளது. இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிளிநொச்சி மாவட்ட வேட்பாளர் த.குருகுலராஜா.

கிளிநொச்சி அக்கராயனில் நடை பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட் டத்தில் கலந்து கொண்டு உரை யாற்றும் போது அவர் மேலும் தெரிவித்தா வது:

வன்னியில் மீள் குடியேற்றம் நடை பெறுவதற்கு முன்னரே தமிழ் மக்க ளது நினைவிடங்களும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களும் சிதைக்கப்பட்டு விட்டன. குறிப்பாக விடுதலைப் போராட்டத்தில் உயிர் நீத்த போராளிகளது கல்லறைகள் முழுவதும் இடித்துத்



தரைமட்டம் ஆக் கப்பட்டன.

திட்டமிட்ட இந்த அழிப்பு நடவடிக்கைகளின் பின்னர் இப்போது அரச தரப்பினரே அதனை மீளக் கட்டியெழுப்புவதாகவும், வணங்குவதற்குஏற்பாடுசெய்வதாகவும் திருகுதாளம் போடுகின்றனர். மாவீரர்களுக்கு வணக்கம் செலுத்துவதற்காக தமிழ் மக்கள் யாரிடமும் அனுமதி பெற்றத் தருமாறு கோரவில்லை. தாங்கள் வணங்கும் போது இடையூறு செய்யாமல் இருந்தாலே போதும் என்றுதான் கேட்கின்றனர்.

வன்னியில் இப்போது திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களும் இராணுவத் தலையீடுகளும் அதிகரித்துக்கொண்டே செல்கின்றன. இவற்றைக் கண்டுகொள்ளாத அரசியல் வாதிகள் அரசுக்குப் பலம் சேர்க்கக் கங்கணம் கட்டி நிற்கின்றனர்.

தமிழ் மக்கள் படும் துன்பங்களை யாரும் கண்டுகொள்வதில்லை. போரால் பாதிக்கப்பட்டு மீள்குடியேற்றப்பட்ட நிலையில் எந்த உதவிகளும் கிடைக்கப் பெறாத நிலையில் எத்தனை குடும்பங்கள் உள்ளன. ஆனால் கிளிநொச்சி மாவட்டத்தில் தாமே அபிவிருத்தியாளர்கள் என்று வீதியோரங்களில் விளம்பரப் பலகைகளைக் காட்சிப் படுத்தியுள்ள சிலர் தமிழ் மக்கள் பிரச்சினைகளை வெளியில் தெரியாது மறைக்க முற்படுகின்றனர். இது மக்களுக்கு நன்கு தெரியும். நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றி பெறுவது உறுதி யாகிவிட்டது. அது முழுமையான வெற்றியாக அமைய வேண்டும். ஒரு வாக்குக் கூட வீணாகிவிடக் கூடாது. இந்த உணர்வோடு வீட்டுச் சின்னத்துக்கு நீங்கள் வாக்களிக்க வேண்டும் - [illegible] (ஜ-18)

















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வட மாகாண சபைத் தேர்தல் - 2013

இலங்கை தமிழரசுக் கட்சி, தமிழ் தேசிய கூட்டமைப்பில் வீட்டுச் சின்னத்தில் போட்டியிடும் வெற்றி இலக்கம் 5 இனைத் தாங்கிய **இம்மானுவல் ஆனல்ட்** என்பவரை நீங்கள் தெரிவு செய்து வெற்றியை உறுதிப்படுத்துங்கள்

## பொங்கு தமிழ் நாயகன்


# இம்மானுவல் ஆனல்ட்

[B.A (Phil) Hons,

பிராந்திய முகாமையாளர் ஜனசக்தி காப்புறுதி நிறுவனம்-யாழ்ப்பாணம்,

இலங்கை தமிழரசுக் கட்சி யாழ். தொகுதிக் கிளைச் செயலாளர்,

(அகில இலங்கை சமாதான நீதிவான், மொழிப் பற்றாளன்]




## இவரை ஏன் நீங்கள் தெரிவு செய்ய வேண்டும்?

1. BA (Phil) Hons
2. MSS Limra international (USA)
3. AMTC Limra international (USA)
4. யாழ் பரியோவான் கல்லூரியின் பழைய மாணவன்
5. யாழ் பரியோவான் கல்லூரியின் சகலதுறை விளையாட்டு வீரர்
6. யாழ் பல்கலைக்கழகத்தின் மாணவர் ஒன்றிய தலைவராகவும், மாணவர் விளையாட்டு பேரவைத் தலைவராகவும் 2000, 2001 ஆகிய ஆண்டுகளில் (சமகாலத்தில்) செயற்பட்டவர்
7. யாழ் பல்கலைக்கழகக் கலைப்பீடத்தால் வழங்கப்படும் கலைத்துறையில் சகல துறை விற்பனருக்கான முன்னாள் பேராசிரியர் அ.துரைராஜா ஞாபகார்த்த தங்க விருதை வென்றவர்.
8. இலங்கை பல்கலைக் கழகங்களுக்கிடையிலான **“மினி ஒலிம்பிக்”** உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் 1998-2001ஆம் ஆண்டுக்கான தங்கப்பதக்கம் வென்றவர்.
9. **தலைமைத்துவத்தில் இவரது சுவடுகள்**
   1. இலங்கை உதைப்பந்தாட்ட தேசிய முதல்தர மத்தியஸ்தர் Grade - I
   2. யாழ் உதைப்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்க தலைவர் (**JFRA**)
   3. யாழ் உதைப்பந்தாட்ட லீக்கின் உப தலைவர் (**JFL**)
   4. ஆசிய உதைப்பந்தாட்ட சம்மேளனத்தின் “C” தர உதைபந்து பயிற்றுவிப்பாளர்
   5. பாடசாலை மட்டத்தின் உதைபந்தாட்டம், கரப்பந்தாட்ட முதன்மை அணித்தலைவராகவும் (Coloursman) செயற்பட்டவர்.
   6. யாழ் உதைப்பந்தாட்ட லீக் அணித்தலைவராகவும், யாழ் மாவட்ட அணித் தலைவராகவும் செயற்பட்டதுடன் பல ஆட்ட நாயகன் விருதுகளையும் வென்றவர்.
   7. யாழ் பல்கலைக்கழகத்தின் உதைபந்தாட்ட அணித்தலைவராகச் செயற்பட்டதுடன், தொடர்ச்சியாக 4 வருடங்கள் (Coloursman) கலர் விருதுகளையும் வென்றவர்.
   8. இலங்கை பல்கலைக்கழகங்களுக்கிடையிலான மினி ஒலிம்பிக் போட்டியில் இவரது தலைமையின் கீழ் செயற்பட்ட யாழ். பல்கலைக்கழக அணி சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது (2001) என்பது குறிப்பிடத்தக்கது.
   9. பாசையூர் புனித அந்தோனியார் விளையாட்டுக் கழகத்தின் தற்போதைய செயலாளர் ஆவார்.
   10. இவரது அயராத முயற்சியினால் யாழ்ப்பாண வட்ட லயன்ஸ் கழகம் உருவாக்கப்பெற்றதுடன் அக் கழகத்தின் தலைவரும், ஸ்தாபகரும் இவரே.

(C/11205)(10,6,3)

**நீதியின் தேசத்தை ஏந்திய கைகளின் இலட்சிய பயணமிது. இதில் சத்திய சோதனை எத்தனை நேரிடும் தாங்கிடும் இதயமிது. மாறினால் மாறட்டும் இல்லையேல் மாற்றுவோம். தர்மமே கொள்கையாய் வாழ்வெல்லாம் ஏற்றுவோம்.**

**இவரின் வெற்றியை அனைவரும் உறுதிப்படுத்துவோம். பல்கலைக்கழக நண்பர்கள், ஆதரவாளர்கள், ஊழியர்கள்**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# எந்தக் கட்சியில் இருக்கிறேன் என்பதல்ல மக்களுக்கு என்ன செய்தேன் என்பதே முக்கியம்

## அரச தரப்பு வேட்பாளர் அங்கஜன் இராமநாதனுடன் ஒரு நேர்காணல்

நேர்காணல்: ஔரீஷ்- தட்சா.ஜோ

*கே: வடமாகாண சபைத் தேர்தலில் நீங்கள் போட்டியிடக் காரணம் என்ன?*

ப : 2010ஆம் ஆண்டு நாடா ளுமன்றத் தேர்தலூடாகவே நான் அரசியலுக்கு வந்தேன். அரசியல் எனக்கு புதிதென்பதால் சொற்ப வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வியடைய நேரிட்டது. ஆனா லும் மற்றவர்களைப் போன்று தோற்ற வுடன் அரசியலை விட்டுஓடிப்போகா மல் ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளராக கடந்த 4 வருடங் களாக மக்களுக்கு என்னாலான சேவை களைப் புரிந்து வருகின்றேன். ஏரா ளமா னோருக்கு சுய தொழில் அபி விருத்தி. அரச தொழில் போன்ற வற்றை வழங்க முடிந்தது. வட மாகாண சபையின் ஊடாக பிரதேச அபிவிருத்தியை மக்களுக்கு கொடுக்க முடியும். வேலை வாய்ப்பற்ற இளைஞர்கள் தான் கலாசார சீரழிவுக்குள் அகப்படு கின்றனர். வேலை வாய்ப் பினை கொடுக்கும் போது கலாசாரம் பேணப் படும். இளைஞர்கள் வழிநடத் தப் படுவார்கள். ஒழுங்கான வேலை வாய்ப்பை இலவசமாக கொடுக்கும் போது தமது முன்னேற்றத்துக்காக பாடுபடுவார்கள். எனவே என் சக்திக்கு உட்பட்ட வகையில் ஏராளமான இளை ஞர்களுக்கு வேலைவாய்ப்புக்களை பெற்றுக் கொடுத்தேன்.

*கே: ஆனால் வேலை வாய்ப்பு என்ற பெயரில் நீங்கள் உங்களுடைய அரசியல் நடவடிக்கை களுக்காகவேபடித்த இளைஞர்களைப்பயன்படுத்து கிறீர்கள் என்று கூறப்படுவது பற்றி உங்கள் கருத்து என்ன?*

ப: இதுவரைக்கும் நான் 2,200 பேருக்கு வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்துள் ளேன். இவர்கள் அனைவரையும் எனக்கு பணிகள் செய்ய வேண்டும் என்று நான் பணித்திருந்தால் அவர்களின் பரப்புரைகளின் உதவியுடன் அதிகப் படியான வாக்குகளைப் பெற்றவனாக நான் மாற முடியும். நான் உதவி செய்தவர்களில் சிலர் எனக்கு தாமாகவே முன் வந்து உதவுகின்றனர். ஒரு போதும் அவர்களை நான் வற்புறுத்தி எனக்கான அரசியல் பணிகளில் ஈடு படுத்தியது கிடையாது. என்னுடைய நோக்க மெல்லாம் மக்களுக்கு எப்போதும் பணி செய்வதே.

*கே: ஆனால் நீங்கள் இந்தப் பணி களை ஏன் ஒரு தமிழ்க் கட்சியில் இணைந்து செய்யாமல் ஆளும் கட்சியில் இணைந்து செய்கிறீர்கள்?*

ப: அரசியலில் தனியே பேசிக்கொண் டிருப்பது எனக்குப் பிடிக்காது. பேசுவதை விடவும் செயலே மக்களுக்குச் சிறந்தது. என்னுடைய நோக்கமெல் லாம் மக்களுக்கு ஏதாவது நன்மை செய்ய வேண் டும் என்பதுதான். அதை எங்கிருந்து செய்தாலும் ஒன்றுதான். அரசுதான் மக்க ளுக்கு எல்லாமே செய்கிறது என்பது அனை வருக்கும் தெரியும்.

*கே: வடமாகாண சபைத் தேர்தல் பற்றிய அறிவிப்பு வந்தவுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் வேட்பாளர் தெரிவின் போது குழப்பம் இருந்தது. ஆனால் இப்போது கூட்ட மைப்பு மிக ஒற்றுமையோடு பரப்புரைகளை முன்னெடுத்து தேர்தலைச் சந்திக்கி றது. ஆனால் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி யின் வேட்பாளர்கள் தமக் குள்ளே முரண்பட்டு துப்பாக்கிச் சூடு வரை சென்றதோடு மட்டுமல் லாமல் பிரிந்து நின்றே அரசியல் பணிகளை முன்னெடுக்கிறார்களே?*

ப: எமது கட்சிக்குள்ளும் வேட்பாளர் தெரிவில் குழப்பம் இருக்கவே செய்தது. வழமையாகவே தேர்தல் காலங் களில் வேட்பாளர் தெரிவில் கட்சிக்குள் சலசலப்புத் தோன்றுவதும் பின்னர் ஒன்றாக இணைந்து பணியாற்று வதும் இயல்புதான். நான் ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்.மாவட்ட பிரதான அமைப்பாளர் என்ற ரீதியில் சகலருடனும் இணைந்து பணியாற் றவே விரும்புகின்றேன்.ஆனால் அதற் குச் சிலர் உடன்பட மறுக்கிறார்கள். இந்த நிலைக்கு நான் பொறுப்பாளியல்ல. ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சி யினூடாக நன்மைகள் மக்களை அடைய வேண்டும் என்பதே எனது நோக்கம்.

வடமாகாண சபைத் தேர்தல்-2013
யாழ் மாவட்டம்
இலங்கைத் தமிழரசுக் கட்சி
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்



சீ.வீ.கே.சிவஞானம்
பட்டயச் செயலாளர்,
ஓய்வுநிலை யாழ் மாநகர ஆணையாளர்,
துணைப் பொதுச் செயலாளர்,
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி.

X 8

அன்பான வாக்காளப் பெருமக்களே!-

எதிர்வரும் 21.09.2013ஆம் திகதி நடைபெறவுள்ள வடமாகாண சபைத் தேர்தலில் நானும் ஒரு வேட்பாளராகப் போட்டியிடுகி றேன் என்பதை தாங்கள் அறிவீர்கள்.

தேர்தல் விதிமுறைகளின் தடை, பரந்த பிரதேசம், மட்டுப் படுத்தப்பட்ட காலம் போன்ற காரணங்களால் நான் பெரிதும் விரும்பினாலும் தங்களில் சிலரை நேரடியாகச் சந்திக்க முடிய வில்லை என்பது கவலையான விடயம்.

எவ்வாறாயினும் அன்றாட வாழ்கையில் உங்களை நானும் என்னை நீங்களும் அறிந்து கொண்டவர்கள் என்ற வகையில் நான் சந்திக்காதவர்கள் அதைப் பொருட்படுத்தாது இந்த வடமாகாண சபைத் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் சின்னமான வீட்டுக்கு நேரே புள்ளடியிட்டு எனது விருப்பு வாக்கு இலக்கமான எட்டுக்கு (8) மேலேயும் புள்ளடியிட்டு என்னையும் ஒரு மாகாண சபை உறுப்பினராகத் தெரிவு செய்யும் வண்ணம் பணிவன்புடன் வேண்டி நிற்கின்றேன்.

என்றென்றும் மக்கள் சேவையில்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | |

வடமாகாண சபைத் தேர்தல் 2013
யாழ்மாவட்டம்







எமது வணிகர் கழக தலைவர் மக்களோடு மக்களாக முன்நின்று மக்களுக்கு ஆற்றிய பணிகள்

1. போரினால் பாதிக்கப்பட்ட மக்களை அரவணைத்து அவர்களுக்கு வாழ்வாதார உதவித்திட்டங்களைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றமை.
2. போர்க்காலகட்டத்தில் உணவுப்பொருள்களுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவியபோது பொருள்களைத் தருவித்து குடாநாட்டு மக்களை பட்டினிச் சாவிலிருந்து மீட்டமை.
3. பாடசாலை விட்டு விலகிய மாணவர்களை திரும்பப் பாடசாலைக்கு இணைத்து அவர்களது கல்வியைத் தொடர எம்மைப் போன்ற வர்த்தகர் மூலமாக பல உதவித் திட்டங்களை வழங்கி மிகவும் உத்வேகமாக செயற்படுத்தி வருகின்றமை.

இப்படிப் பல்வேறுபட்ட மக்கள் நலத்திட்டங்களைச் செய்து வரும் எமது வணிகர் கழகத் தலைவரின் பணி இனிவரும் காலங்களில் மாகாண சபை ஊடாக உத்வேகத்துடன் செயற்படுத்துவதற்கும் எமது தமிழ் மக்களின் தனித்துவத்தை பேணிட, தமிழ் மக்களின் வளமான வாழ்க்கையை ஏற்படுத்திக் கொடுக்க உணர்வுள்ள தமிழனான எமது வணிகர் கழக தலைவர் இ.ஜெயசேகரன் அவர்களை ஆதரித்து வீட்டுச் சின்னத்துக்கு நேரே புள்ளடியிட்டு இலக்கம் 6 இற்கு மேலே புள்ளடியிட்டு பெரும்பான்மை விருப்பு வாக்குகளைப் பெற்று பெரு வெற்றியடையச் செய்வோமாக.

—யாழ் மாவட்ட வர்த்தக சமூகமும், யாழ் மாவட்ட மக்களும்-

தமிழன் என்ற "தேசிய இனத்தின் சுயகௌரவம் கிடைக்க வாக்களியுங்கள்"

இலங்கைத் தமிழரசுக் கட்சி வேட்பாளர்

இ. ஜெயசேகரன்
(சமூக சேவையாளன்)
தலைவர் - யாழ் மாவட்ட வர்த்தக சங்கம்

6

X 6

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

(C/11262)(10.6.3)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வடமாகாண சபைத் தேர்தல் 2013

## அழைக்கிறோம் நாம் தமிழரே வாருங்கள்


## வீட்டுக்கே வாக்களிப்போம்

## எங்கள் நிலம் எமக்கு வேண்டும்

போர் என்று தமிழர் நிலமெல்லாம்
பாதுகாப்பு வலயங்கள்- இன்றும்
அதனால் பல லட்சம் தமிழ் மக்கள்
நிலம் இழந்து சொத்திழந்து, உயிரழிந்து நிற்கின்றார்
போர் முடிந்தும் எங்கள் நிலத்தில் இராணுவம்
குடியிருக்கிறது,
முகாம் அமைத்து குடியேற்றம் நடக்கிறது
அரசே எங்கள் நிலத்தை எங்களிடம் விட்டுவிடு,
வாழ விடு என்று கேட்கும் தமிழ்க்குலம்!
தெருவில் தமிழர் நிற்க அவர் நிலமெல்லாம்
தெற்குச் சிங்களவர் குடிபுகுந்து நெல் விளைக்கின்றார்
நம் தமிழ் மீனவர் கரையிழந்து கடல் இழந்து நிற்க
தென்னிலங்கைச் சிங்களவர் சங்கும்
கடலட்டையும் இறாலும், மீனும் பிடித்து
வளமான வணிகம் செய்கின்றார்
கையிற் குழந்தையுடன் நீதி கேட்டு நிற்கும் தமிழ்த்தாய்,
அரசே என் கணவனை உன்னிடம் ஒப்படைத்தோம்,
உயிருடன் இருக்கிறானா? என்று ஆயிரம்
ஆயிரம் குரல்கள்
விடுதலை செய் என்று கேட்கும் தமிழ்த்தாய்!
இத்தனை ஆண்டுகளாய் பல லட்சம் தமிழர்
தம்மை பலிகொடுத்தும், இனியும் எம் நிலத்தில்
எம்மை ஆள நம் உரிமை வேண்டாமா?
இன்னும் பல ஆயிரம் தமிழ்ப் பெண்கள், இளைஞர்
சிங்களத்துச் சிறைகளில் வாடுகின்றார்
விடுதலையில்லை, விடிவுமில்லை தமிழினத்துக்கு!
நாம் நம் மண்ணில் வீடு கட்டி வாழ்வோம்
எம் காணி திருத்தி எம் மண்ணில் பயிர் வளர்ப்போம்
நம் மண்ணில் தன்னாட்சி செய்வோம்.

நம் உரிமை மனிதர்க்கு என்று நாம் ஆட்சி செய்வோம்
அரசே விலகிப் போ எம்மை வாழவிடு!
புத்தம் சரணம் கச்சாமி என்று நாம் சொல்லவா?
புத்தரில்லா இடமெல்லாம் புத்தர் சிலைகள் ஏன்?
இது பௌத்த ஆதிக்கத்தின் சின்னமல்லவா?

ஜனநாயகப் போராட்டம் அறவழிப் போராட்டம் அதையும்
வன்முறையில் அடக்கியது அரசுகள்
அடக்குமுறைக்கு எதிராய் எழுந்தது
ஆயுதப் போராட்டம் ஒடுக்குமுறை ஒழிக என்றே!
அதுவும் முடிந்தது என்கிறது அரசு.
முடிந்ததோ லட்சக் கணக்கில் தமிழர்தான்
தமிழனுக்கோ விடிவுமில்லை விடுதலையுமில்லை
இன்னமும் ஏன் எம் தமிழர் பூமியில் சிங்களவர்
இராணுவம்
எம்மை வாழ விடு எம் நிலத்தில்
இன்று நடப்பதோ இராஜதந்திரப் போர்
தமிழர் வடித்த கண்ணீர் இன்று உலமெலாம்
அதனால் இலங்கை அரசை அழுத்துகிறது உலகம்!
புலம் பெயர்ந்த எம் உறவுகள் எமக்காய் நிற்கின்றார்
தமிழர் தன்னாட்சி செய்ய இராஜதந்திரப் போர்
இத்தனை நாளும் செய்த தியாகங்கள் வீண்போகாது
நம் இனத்துக்கு விடிவு வேண்டும் எம்மை நாம் ஆள
ஒரு சந்தர்ப்பம் இதனை நாம் இழக்கலாமா?
ஒட்டுமொத்தத் தமிழர்
நாம் ஒன்றாக நின்று
வாக்களிப்போம் அது
நம் கடமை செப்ரெம்பர்
21 இல் தோற்கடிப்போம்
பேரினவாதத்தை
வெற்றிபெறுவோம்
நாம் தமிழர் எம்
மண்ணில்
மாகாண சபையில்
தமிழராட்சி செய்வோம்
வாருங்கள்...



## இலங்கை தமிழரசுக் கட்சி

X

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளியல் ஆசிரியர்

# S. வரதராஜன்

அவர்களிடமிருந்து

## ஓர் அவசர வேண்டுகோள்!

இலங்கை - இந்திய ஒப்பந்தமும் அதனால் உருவான மாகாண சபையும் தமிழ்மக்கள் மீது திணிக்கப்பட்டவை என்ற எனது நிலைப்பாட்டிலும், மாகாண சபை முறைமையால் தமிழ்மக்களின் அரசியல் அபிலாசைகளை எவ்வகையிலும் பூர்த்தி செய்ய முடியாது என்ற எனது நிலைப்பாட்டிலும் நான் இப்போதும் உறுதியாக உள்ளேன்.

இருந்தபோதும், தமிழ்மக்கள் நடைபெறவுள்ள வடக்கு மாகாண சபைத் தேர்தலில் பங்கேற்றுத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்து அதனை அமோக வெற்றி பெறச் செய்ய வேண்டியது ஒரு வரலாற்றுக் கடமையாக ஆகிவிட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வெற்றி மூலம் மத்திய அரசாங்கத்தைக் கேள்விகளுக்கு உட்படுத்தக் கூடியதும், கூடுதல் அதிகாரங்களைக் கோரக் கூடியதுமான வல்லமையுடன் ஒரு மாகாண சபை உருவாகும் சரித்திர நிகழ்வு இடம்பெறப்போகிறது.

இந்த ஒரு காரணத்துக்காகவேனும் தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்து, வடக்கு மாகாண சபையைக் கூட்டமைப்பு கைப்பற்றுகின்ற ஒரு சூழலை உருவாக்க வேண்டும்.

அதே போன்றே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்களில் ஒருவரான திரு **பொ. ஐங்கரநேசன்** அவர்களையும் பெரு வெற்றிபெற வைக்குமாறு வேண்டுகிறேன்.

இவர் தேர்தலுக்காக அரசியல் மேடைகளில் தமிழ்த் தேசியம் பேசுபவர் அல்லர்; அன்றும் தமிழ்த் தேசியத்தோடு இருந்தவர் - இன்றும் இருப்பவர் - என்றும் இருப்பார்.

இவர் இந்த மண்ணின் அபிவிருத்தி என்பது இன்றைய சந்ததிக்கு மட்டும் நன்மை தருவதாக அமையாது, எமது எதிர் காலச் சந்ததிகளும் பயன் பெறக்கூடிய நிலைத்த அபிவிருத்தியாக அமைய வேண்டும் என்று சிந்திக்கின்ற ஒரு சூழலியலாளர்.

1990களில் இருந்து நாம் இருவரும் இணைந்து தமிழ்த் தேசியச் செயற்பாடுகளில் ஈடுபட்டவர்கள் என்றவகையில், அவர் அடுத்த தேர்தலைப் பற்றிச் சிந்திக்கின்ற அரசியல்வாதி அல்லர்; அடுத்த தலைமுறையைப் பற்றிச் சிந்திக்கின்ற ஓர் அரசியற் போராளி என்று நான் அழுத்திச் சொல்லுவேன்.



**என் இனிய மாணவர்களே! அவர்களின் பெற்றோர்களே! உறவுகளே!**

முதற்புள்ளடியை **வீட்டுச் சின்னத்துக்கு** நேரேயும் இரண்டாவது புள்ளடியைத் திரு **பொ. ஐங்கரநேசன்** அவர்களின் விருப்புவாக்கு இலக்கமான **2** இன் மேலேயும் இட்டு அமோக வெற்றிபெறச் செய்யுமாறு வேண்டுகிறேன்.

சுதந்திரத்துடன் கூடிய அபிவிருத்திக்காக நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவோம்.

அன்புரிமையுடன்
**S. வரதராஜன்,**
பொருளியல் ஆசிரியர்,
முன்னாள் விரிவுரையாளர்,
பேராதனைப் பல்கலைக்கழகம்.

**முதற்புள்ளடி வீட்டுக்கு**
**இரண்டாவது புள்ளடி இரண்டுக்கு**

### அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் - வடமாகாண வாக்காளர் பெருமக்களுக்கு பணிவன்பான அத்துடன் உரிமையுடன் கூடியதுமான அவசர வேண்டுகோள்!

கொள்கை முரண் காரணத்தால், தேர்தல்களில் பங்குகொள்ளாது பாழாகியதை மறந்தோமா? பாரிய வெற்றியின் பங்கினை சந்ததி சொல்லி மகிழுற வேண்டாமா?

கட்சி, கொள்கை, பேதம் மறந்து பொதுவேட்பாளராக துணிவுடன் களம் இறங்கி உள்ளவரின் இல.10 இக்கு மட்டுமே புள்ளடியிடுவதில் என்ன கௌரவ குறைவு? இட்டபுள்ளடி செல்லுபடியாக, கட்டியெழுப்ப விளையும் தேசியத்தின் சின்னமான வீட்டிற்கும் புள்ளடியிடுவதில் தவறேது? வெற்றிவாக்குகள் அதிகமாய் பெருக்கிடவுதவி, வெற்றியுடன் சங்கமமாகுங்கள். தனித்து தத்தளிக்காதீர். அகப்பைக்கு வர பானையில் இருக்கவேண்டாமா? யாழில் உதயமாகிய கட்சி அம்மண்ணிலேயே மங்கவேண்டாம். மூன்று தலைமுறைத் தலைவர்களுடனும், (என் தந்தையுடன் சேர்ந்து) பணியாற்றிய உரிமையுடன் விடுக்கும் பகிரங்க ஆனாலும் பணிவன்பான எச்சரிக்கை வேண்டுகோளே இதுவாகும்.

மூத்த ஜி.ஜியின் இறுதித் தேர்தல் கூட்டங்களை முற்றவெளி மைதானத்தில் தலைமை வகித்து சொற்பொழிவாற்றி முடிக்கும் பணியினைச் சிரமேற் கொண்டவர் என் தந்தை அண்ணாவியார் தீயோ இராஜேந்திரம் அவர்கள். உள்ளூர் தேர்தல்களையும் சேர்த்துப் பார்த்து அவர் ஓர் King Maker என்பர். அன்னாரின் சேவைக்கு உபகாரமாக, கொலைஞரால் மவுனிக்கப்பட்ட மாமனிதர், மறக்க வொணா தலைவர் குமார் பொன்னம்பலம், 1989 பொதுத் தேர்தலில், யாழ் கத்தோலிக்க மக்களை பிரதிநிதித்துவப்படுத்தவென, IPKF கெடுபிடியுள்ளும் எனையுமோர் அபேட்சகராக நியமித்தார். 2004 பொதுத் தேர்தலுக்கான தமிழ் வேட்பாளர் பட்டியலில், கட்சியின் ஒரேயொரு அபேட்சகராகத் தெரியப்பட்ட தற் போதைய தலைவருக்கு, நாவலர் அரங்கு மேடை ஏறி பாராட்டியவேளை, ''**தமிழன் என்று சொல்லடா தலைநிமிர்ந்து நில்லடா**'' எனும் தாரக மந்திரத்தை தரணிக்களித்த அவரது பாட்டனாருக்கு, என்தந்தை எனைத் தூக்கிப் பிடிக்க மாலையிட்டது மனத்திரையிற் தோன்றியது.

கட்சியில் பின்னர் சேர்ந்த, சேர்த்துக் கொள்ளப்பட்ட பிரபலங்களுக்கும் இவ் வேண்டுதல் பொருத்தமானதே. மறுதலித்தோரே பாவமன்னிப்புடன் கூட்ட ணியில் பொங்கு பானை உலை ஏற்றியோரே! துளையிடத் துணைபோகாதீர் ''நீ காண்பது என்ன? எனக்கர்த்ர் கேட்டார்'' ''பொங்குகிற பானையைக் காண்கிறேன், அதன்வாய் வடக்கேயிருந்து நோக்குகிறது என்றேன்'' (பழைய ஏற்பாடு - பரிசுத்த வேதாகமம் - எரேமியா 1:13)

தான் அரசியலுக்கு அறிமுகப்படுத்திய தந்தை செல்வாவுடன் மூத்த ஜிஜியும் சேர்ந்தே வட்டுக்கோட்டை தீர்மானம். தேர்தல் தோல்வியினால் மனமொடிந்து சுகவீனமுற்று மலேசியாவில் ஓய்விலிருந்தவர் SJV யின் SOS சுக்கு ஓடிவந்து ''Trial-at-Bar'' எனும் புதுக்கொடுஞ் சட்டத்தை சுக்கு நூறாக்கி த.அ. MP க்களை விடுவித்த காட்சி இன்றும் கண்முன். "I'm really sick" எனக் கூறிக்கொண்டே செல்வரவும், திருச்செல்வமும் இருபக்கமும் புடைசூழ Hulfstop படியேறினார்.

ஏன் வேண்டும் இளைப்பாறிய நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் யாழ்.மாவட்ட முதல் அமைச்சராக? ''தமிழ் மக்களை இனிமேல் கடவுள்தான் காக்க வேண்டும்'' கூறிச் சென்றார் SJV. அதன் எதிரொலிதான் CVW .

இன்று நேற்றல்ல. 2004இல் தான் இளைப்பாறும் பிரியாவிடைப் பேச்சின்போதும் ''...தமிழர்கள் வேண்டுவது பிச்சையல்ல, இழந்த தம் உரிமைகளையே...'' என்றார். மறுநாள் இது போன்றதொரு நீதிச்சபையிலா இவற்றைக் கூறுவது என நாடாளுமண்றிலே ஓலமும் ஒப்பாரியும்.

யுத்தம் நடந்து கொண்டிருக்கையில் தந்தை செல்வாவின் நினைவுநாள் உரையொன்றில் ''புலிகளை அழித்துவிட்டால் தமிழரின் உரிமைகளையும் சேர்த்தே அழித்து விடலாமென அரசு எண்ணுகிறதோ'' எனத் தன்னந்தனியனாக நின்று கேள்வி எழுப்பியவர்.

யுத்தத்தில் இறந்தவர்களுக்கு இருநிமிட மௌன அஞ்சலிக்குக் அங்கீகாரம் கிடைக்காத காரணத்தால் கம்பன் கழக தலைவர் பதவியையும் துறந்து விலகியவராவார். இன்று எண்திசையுமிருந்து சொல்லடி. காய்த்த மரமே கல்லடிபடும். தீவுகளினதும் கல்வெட்டு மதகுகளின் எண்ணிக்கை தெரியா விட்டாலும், யாழ்மாவட்ட முட்பட உலகெங்கிலுமுள்ள தமிழ் நெஞ்சங்களின் எண்ணக்கருத்துக்களை பூரணமாக அறிந்தவர்.

''நான் வடக்கிலிருந்து ஒருவனை எழும்பச் செய்தேன் குயவன் களிமண்ணை மிதிப்பது போலும் அவன் ஆளுநர்களை நடத்துவான். (பரிசுத்த வேதாகமம் - பழைய ஏற்பாடு - கி.மு.8ஆம் நூற். எசாயா 41:25)

''ஏனென்றால். வடக்கே இருந்து புகைக்காடாய் வருகிறான் அவன் கூட்டங்களில் தனித்தவனில்லை. (பரிசுத்த வேதாகமம் பழையஏற்பாடு - கி.மு.8ஆம் நூற் ஏசையா 14:31)

13பிளஸ் அங்கீகாரத்தை விட, வெற்றி பெற்றுத்தந்த களிப்பு மிகுதியால் கூடு தலாக இரண்டு மைல் நடந்தே சென்று சந்திப்பேன் எனக் கூறியது மேலுமோர் அங்கீகாரம் இல்லையா?

நவ நீ. அம்மையாருக்கு அரசிலுள்ள சிறு குழுக்கள்தான் குழப்பம் விளைவிக்கின் றன என்றதனால் அரசிலுள்ள பெரிய குழுவுக்கு மதிப்பில்லை என்றாகிவிட்டதா? பெரும்பான்மைக்கே மதிப்பில்லையென்றால் ஜனநாயகம் எந்த மூலைக்கு? அப் படியானால் அம்மையார் கூறிய எதேச்சதிகாரம் என்பது பொருந்துவதெங்கே? ''யோவான் ஆசியாவிலுள்ள ஏழு திருச்சபைகளுக்கும் எழுதுகிறதாவது: இருக் கிறவரும் இருந்தவரும் வருகிறவராலும் பூமியின் ராஜாக்களுக்கு அதிபதியுமாகிய இயேசு கிறீஸ்துவினாலும் உங்களுக்கு கிருபையும் சமாதானமும் உண்டாவதாக (புதிய ஏற்பாடு யோவானுக்கு வெளிப்படுத்தின சுவிசேசம் 1ஆம் அதி.4ஆம் 5ஆம் வசனங்கள்.

நன்றியுடன்,

**அல்வீன் எம்.ஏ.இராஜேந்திரன்**

**Post. Grad. Dip in Intl. Affrs., SL**
**Secretarial Studies – Legal Ca**
**Poli.Sen.Undergrad. (Major)Concordia Uni.Ca.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் ஒருபோதும் அஞ்சமாட்டார்கள்

## கூட்டமைப்பு வேட்பாளர் சுகிர்தன்

கொத்துக் குண்டுகளையும் பீரங்கி வேட்டுக்களையும் நேரடியாக சந்தித்தவர்கள் எம் மக்கள். இந்த அரசின் அடிவருடிகளின் அடாவடித் தனங்களுக்கும் அச்சுறுத்தல்களுக்கும் அஞ்சமாட்டார்கள். இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வேட்பாளரான சுகிர்தன்.

பருத்தித்துறையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாம் என்றும் செல்வச் செழிப்புடன் வாழ்பவர்கள் அல்ல. இருந்ததை எல்லாம் இழந்துவிட்டு வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்றோம். நான் ஒரு சாதாரண குடும்பத்தில் பிறந்தவன். பெற்றோரின் விடாமுயற்சியால் பட்டதாரியானவன். எனக்கு மக்கள் அன்றாடம் படும் வேதனைகளும், தினசரி எதிர்நோக்கும் அச்சுறுத்தல்களும் நன்கு புரியும்.

இது நமது மண். நமது சொந்த மண். தமிழர்களின் இரத்தம் தோய்ந்த மண். இந்த மண்ணை அற்ப சொற்ப சலுகைகளுக்காகவும் பணத்திற்காகவும் சிங்களப் பேரினவாதிகளிடம் அடைவு வைக்க முடியாது.

வடமாகாணத்தில் போட்டியிடும் ஒரே ஒரு தமிழ்க் கட்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே. தமிழர்களின் தன்மானச்சின்னம் வீடு. இதை நம் மக்கள் மறக்காது வாக்களிக்க வேண்டும்-என்றார். (ஜ-2)

---

வடமாகாண சபைத் தேர்தல் 2013

முல்லை மாவட்டத்தின்
ஒரே ஒரு பெண் வேட்பாளர்
தமிழரசுக் கட்சி வேட்பாளர்



போர் தந்த வலியால்
துவண்டு போயுள்ள
பெண்கள் வாழ்வு
மீண்டு எழ
உடன் உள்ள சகோதரி
வீட்டுச் சின்னத்தில் விருப்பு எண்

X 6

திருமதி மேரிகமலா குணசீலன்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு


---

வடமாகாண சபைத் தேர்தல் 2013

யாழ்மாவட்ட
தமிழரசுக் கட்சி வேட்பாளர்

இரத்தினலிங்கம் ஜெயசேகரன்

(வர்த்தக சங்கத் தலைவரும் சமூக சேவையாளரும்)



X 6

உண்மையான நேர்மையான
மக்கள் சேவையாளனை
தெரிவு செய்து வெற்றிபெற
வையுங்கள்

இல. 6 ஐத் தெரிவுசெய்து வெற்றிபெற வையுங்கள்
வடமராட்சி வர்த்தக சமூகம்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

---

வடமாகாண சபைத் தேர்தல் 2013

யாழ்மாவட்ட
ஜனநாயக ஐக்கிய முன்னணி வேட்பாளர்

"தமிழர்களின் உரிமைகளை படிப்படியாக வென்றெடுக்கக் கூடிய துணிச்சல் மிக்க ஒரே வேட்பாளர்"

அருள்ஜெயந்திரன் (சண்ஜெ)



என்னை நீங்கள் அங்கீகரித்தால்
நான் கூறிய யாவும் உங்களுக்காக
சிரமப்பட்டு நிறைவேற்றுவேன்.
இல்லையேல் தட்டிக்கேட்கவும்
தண்டிக்கவும் உரிமையுண்டு.

X 2

உங்கள் தெரிவு (இரட்டை இலைக்கும்), இல. 2 இற்கும்.

அச்சமில்லாத பிச்சையல்லாத தமிழ்ச் சமூகத்தை உருவாக்க ஒன்றுபடுவோம்

---

வடமாகாண சபைத் தேர்தல் 2013

யாழ் மாவட்டம்

இலங்கைத் தமிழரசுக் கட்சி

சமுதாய சீர்கேட்டை
கவனத்துக்கு கொண்டுவந்து
மீண்டும் சீரமைப்பதற்கு
மிகவும் காத்திரமான
பங்களிப்பை
வழங்குவேன்



X 7

தம்பி க.மு. தம்பிராசா

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

---

வடமாகாண சபைத் தேர்தல் 2013

எதிர்க்கத் துணிந்தால் தமிழ் மீளும்
எதற்கும் துணிந்தால் தமிழ் ஆளும்



X 17

பா.கஜதீபன் (ஆசிரியர்)

அனலைதீவு சதாசிவம் மகாவித்தியாலயம்,
தலைவர் யாழ் மாவட்ட இளைஞர் அணி.

(இலங்கைத் தமிழரசுக் கட்சி)
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

---

வடக்கு மாகாணசபைத் தேர்தல் - 2013

மாணிக்கசோதி
அபிமன்னசிங்கம்



14

(மல்லாகம்ரவி)

சுயேச்சைக் குழு - 6

---

காரைநகர் பிரதேச சபையில் இருந்து
வடமாகாண சபைக்குத் தெரிவுசெய்வோம்

11 X

பாலா

ஐக்கிய தேசியக் கட்சி
செயற்குழு உறுப்பினர்,
காரைநகர்
பிரதேச சபை உறுப்பினர்,
அகில இலங்கை
சமாதான நீதிவான்



X

---

வடமாகாண சபைத் தேர்தல்

யாழ்மாவட்டம்

எம் மக்களுக்காக...
சாத்தியமானவற்றை
சாதிக்கவும் முடியாதவற்றை
முயற்சிக்கவும்

கனகரஞ்சிதன்
பிரணவன்



X 12X

எதிர்கால அரசியலுக்காக
இளைஞர்களுக்கு வாக்களிப்போம்

---

வடமாகாண சபைத்தேர்தல் - 2013

யாழ் மாவட்டம்

தாயக அபிவிருத்திக்காக!
தமிழரின் அபிலாசைகளுக்காக!
இளைஞரின் எதிர்காலத்துக்காக!
தீவகத்தின் உரிமைக் குரலுக்காக!
தீவகத்திலிருந்து மண்கும்பான்

சுவாமிநாதன் பிரகலாதன்

(மண் கண்ணா)

சுயேட்சைக்குழு 7
இளைஞர் அணி

X 19



யாழ் மாவட்ட
இளைஞர் ...
எட்டு மாகாணமும்
பறைசாற்றுவோம்

---

வடக்குமாகாண சபைத் தேர்தல் 2013

யாழ் மாவட்டம்

தன்மானத்துடன்
தலைநிமிர்ந்து வாழ
உறுதியானதும்,
இறுதியானதுமான
தீர்வு



X 16

N.V.சுப்பிரமணியம்
(சுப்பிரமணியம்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

---

வடமாகாணசபைத் தேர்தல் 2013

யாழ் மாவட்டம்

எம் மண்ணில் நாம் வாழ
எம் மண்ணை நாம் ஆள

கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்
சுரேஷ் பிரேமச்சந்திரனின் தெரிவு





அரசியல் சிந்தனையாளர்
கந்தையா
சர்வேஸ்வரன்
B.A Hons (Pol Sc), M.A., Ph.D
விரிவுரையாளர்

இலங்கைத் தமிழரசுக்கட்சி

X 4

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

---

வடமாகாண சபைத் தேர்தல் 2013
(இலங்கைத் தமிழரசுக் கட்சி)

யாழ் மாவட்ட வேட்பாளர்



பா.கஜதீபன் (ஆசிரியர்)

(யாழ் இந்துக் கல்லூரி
பழைய மாணவன்)

X 17

இளையவர்களின்
தலைமைத்துவத்துக்காய்
இளைய தலைமுறையின் தெரிவு

யாழ் இந்துக் கல்லூரி
2001 உயர்தர
பழைய மாணவ நண்பர்கள்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

---

வடமாகாண சபைத் தேர்தல் 2013

யாழ் மாவட்டம்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு
இலங்கைத் தமிழரசுக் கட்சி

X



13

துணிச்சல் மிக்க இளம் சட்டத்தரணி
கே.சஜந்தன்

இருப்பதைக் காப்போம்! இழந்ததை மீட்போம்!
சுயாட்சி வெல்ல வாக்களிப்போம்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நாவுடன் இணைகிறது சிரியா

## இரசாயன ஆயுதத் தடை ஒப்பந்தத்தில் கைச்சாத்திட விண்ணப்பித்தது

> "சிரியாவின் இரசாயன ஆயுதங்களை ஒழிப்பது சிக்கலான காரியம். எனினும் இரசாயன ஆயுதத் தடை ஒப்பந்தத்தில் சிரியா கையெழுத்திடுவது ஒரு முக்கியமான திருப்புமுனையாக அமையும். அபாயகரமான ஆயுதங்களை வைத்திருப்பது, உள்நாட்டிலோ, பக்கத்து நாடுகளுக்கு எதிராகவோ அவற்றைப் பயன்படுத்துவது ஆகியவற்றிலிருந்து சிரியாவைத் தடுக்கும்."
>
> - அமெரிக்காவில் இயங்கிவரும் தன்னார்வ அமைப்பான ஆயுதக் கட்டுப்பாட்டு சங்கம்.

டமாஸ்கஸ், செப்.17

ஐ.நாவின் இரசாயன ஆயுதத் தடை ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கு ஒப்புதல் தெரிவித்து அதற்கான விண்ணப்பத்தை ஐ.நா.சபையிடம் ஒப்படைத்துள்ளது சிரியா. அந்த விண்ணப்பத்தை ஏற்றுக்கொள்வதாக ஐ.நா. பொதுச் செயலர் பான் கீ-மூன் தெரிவித்துள்ளார்.

சிரியா இரசாயன ஆயுதங்களை உள்நாட்டுப் போரில் பிரயோகின்றது என்று தெரிவித்து அமெரிக்காவும் அதன் நட்பு நாடுகளும் அந்நாட்டின் மீது இராணுவ நடவடிக்கை தேவை என்று வலியுறுத்தின. எனினும் அதற்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்த ரஷ்யா சமரச முயற்சிகளின் மூலம் இந்தப் பிரச்சினையை தீர்க்க முடியும் என்று வலியுறுத்தி வந்தது.

ரஷ்யாவின் ஆலோசனைகளின்படி தம்மிடமுள்ள இரசாயன ஆயுதங்களை சர்வதேச சமூகத்தின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர இணக்கம் தெரிவித்தது சிரியா. தற்போது ஐ.நாவின் இரசாயன ஆயுதத் தடைச் சட்டத்திலும் கைச்சாத்திட ஒப்புதல் தெரிவித்துள்ளது.

### ஐ.நா. வரவேற்பு

சிரியாவின் இந்த நிலைப்பாட்டை வரவேற்றுள்ள ஐ.நா. சபை, அந்நாட்டின் விண்ணப்பத்தை ஏற்றுக்கொள்வதாக அறிவித்துள்ளது.

இதுகுறித்து ஐ.நா. சபையின் செய்தித் தொடர்பாளர் கருத்துத் தெரிவிக்கும்போது;

"ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ-மூன், சிரியாவின் விண்ணப்பத்தை வரவேற்றுள்ளார். இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதன்மூலம், சிரியாவில் எதிர்காலத்தில் இரசாயனத் தாக்குதல் நடைபெறுவது தடுக்கப்படும். சிரியாவில் நிலவி வரும் பிரச்சினைகளுக்கு அரசியல் தீர்வைப் பெறுவதற்காக வழி திறக்கும் என்று பான் கீ-மூன் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்"- என்று தெரிவித்துள்ளார்.

### கலக்கத்தில் இஸ்ரேல்

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினின் காய்நகர்த்தலால் கலக்கத்தில் உள்ளது இஸ்ரேல்.

"சிரியாவில் இரசாயன ஆயுதங்கள் இருக்கின்றன என்பது உண்மை. ஆனால் அவை இஸ்ரேலின் இராணுவ பலத்தை ஈடுசெய்வதற்கான ஒரு செயற்பாடே" என்று தெரிவித்துள்ளார் புடின். சிரியாவை அடுத்து இரசாயன ஆயுதப் பிரச்சினை தன்பக்கம் திரும்பும் என்ற கலக்கம் இப்போது இஸ்ரேலுக்கு ஏற்பட்டுள்ளது.

1993ஆம் ஆண்டு இரசாயன ஆயுதத் தடுப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ள அமெரிக்க நட்பு நாடான இஸ்ரேல், இது வரை அந்த ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தவில்லை. அந்தப் பகுதியிலுள்ள நாடுகள் அனைத்தும் இஸ்ரேலை அங்கீகரிக்கும்வரை, இரசாயன ஆயுதத் தடை ஒப்பந்தத்தை நடைமுறைபடுத்தப் போவதில்லை என்று அந்நாடு பிடிவாதமாகக் கூறிவருகிறது.(ற)

## நிலக்கரிச் சுரங்க விபத்து: ஆப்கனில் 27 பேர் சாவு

காபூல், செப்.17

ஆப்கனில் ஏற்பட்ட நிலக்கரிச் சுரங்க விபத்தில் 27 பேர் உயிரிழந்துள்ளனர். 20 பேர் காயங்களுக்குள்ளாகியுள்ளனர். ருயிடு அப்மாவட்டத்தில் உள்ள அப்கோரக் நிலக்கரி சுரங்கத்திலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதுகுறித்து அந்த ஆளுநரின் செய்தித் தொடர்பாளர் முகமது சித்திக் அஸிஸி கூறும்போது, "விபத்தில் 27 பேர் உயிரிழந்துள்ளனர். 20 பேர் காயங்களுக்குள்ளாகியுள்ளனர். அவர்களில் 4 பேரின் நிலை மோசமாக உள்ளது. சுரங்கத்தின் ஒரு பகுதி சுவர் இடிந்து வீழ்ந்ததாலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது" என்று தெரிவித்தார்.

ஆப்கனில் உள்ள பெரும்பாலான நிலக்கரிச் சுரங்கங்கள் அபாயகரமான நிலையிலேயே காணப்படுகின்றன. மிகப் பழைமையான இந்தச் சுரங்கங்களில் பழைமையான உபகரணங்கள் பயன்படுத்தப்படுவதுடன், காற்றோட்ட வசதிகளும் இல்லாத நிலையிலேயே காணப்படுகின்றன. (ற)

## குண்டுத் தாக்குதல்: பாகிஸ்தானில் மூவர் சாவு

இஸ்லாமாபாத், செப்.17

பாகிஸ்தானில் இருவேறு இடங்களில் நிகழ்ந்த வெடிகுண்டு தாக்குதல்களில் பாதுகாப்புப் படையினர் 3 பேர் உயிரிழந்துள்ளனர். 4 பேர் காயங்களுக்குள்ளாகியுள்ளனர்.

பான்னு மாவட்டத்தில் உள்ள கைபர் பாக்துன்குவா பகுதியில் முதல் தாக்குதல் நடத்தப்பட்டது. இராணுவ வாகனத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் இருவர் உயிரிழந்தனர்.

மற்றைய தாக்குதல் வடக்கு வாசிரிஸ்தான் பகுதியில் நடத்தப்பட்டது. அதில் ஒருவர் உயிரிழந்தார். (ற)


## துருக்கியில் மீண்டும் போராட்டம்

அங்காரா, செப்.17

துருக்கி தலைநகர் அங்காராவில் மீண்டும் வன்முறை வெடித்துள்ளது.

வன்முறைகளை அடுத்து வீதிகளில் வாகனங்கள் தீ வைத்து எரிக்கப்பட்டன. அதையடுத்து ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டவர்களை தண்ணீரைப் பீய்ச்சியடித்தும் கண்ணீர் புகைக் குண்டுகளை வீசியும் விரட்டியடித்தனர்.

அந்த நாட்டிலுள்ள கெஸி பூங்காவை சீரமைப்பது தொடர்பாக எழுந்த மக்கள் எதிர்ப்பு, பிரதமர் தயீப் எர்டோகன் தலைமையிலான அரசிற்கு எதிரான போராட்டமாக மாறியுள்ளது.(ற)



## இராணுவம் அதிரடி: பிலிப்பைன்ஸில் 100 தீவிரவாதிகள் சாவு

ஜம்போங்கா, செப்.17

பிலிப்பைன்ஸின் தெற்குப் பகுதியில் பொதுமக்களை பணயக் கைதிகளாக வைத்திருந்த நூற்றுக்கும் மேற்பட்ட இஸ்லாமியத் தீவிரவாதிகளை அந்நாட்டு இராணுவம் சுட்டுக் கொன்றுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

பிலிப்பைன்ஸின் தெற்குப் பகுதியில் உள்ள ஜம்போங்கா புறநகரில் உள்ள கடலோர பகுதியில் மோரோ தேசிய விடுதலை முன்னணி என்ற இஸ்லாமிய கெரில்லா இயக்கம் பொதுமக்களை பணயக் கைதிகளாக வைத்திருந்தது என்று கூறப்படுகின்றது. அதையடுத்து அந்தப் பகுதி மீது இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு பணயக் கைதிகள் மீட்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. மேலதிக தகவல்களை வெளியிட மறுத்த இராணுவச் செய்தித் தொடர்பாளர் ரமோன் ஜகலா, "தாக்குதலின் போது பொது மக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் பார்த்துக் கொண் டோம்" என்று மட்டும் தெரிவித்தார்.

மோரோ கெரில்லா இயக்கம் 1996 ஆம் ஆண்டு பிலிப்பைன்ஸ் அரசுடன் அமைதி ஒப்பந்தம் செய்து கொண்டது. எனினும் அண்மைக்காலமாக பிலிப்பைன்ஸ் அரசு தென் பகுதியில் உள்ள முஸ்லிம்களை ஒதுக்குகின்றது என்று தெரிவித்து தாக்குதலில் ஈடுபட்டு வருகின்றனர். (ற)

## அமெ. செல்ல வேண்டாம்: பிரேஸில் ஜனாதிபதியிடம் கோரிக்கை

பெர்லின், செப்.17

அமெரிக்காவுக்கான பயணத்தை இரத்துச் செய்ய வேண்டும் என்று பிரேஸிலின் உயர்மட்ட அதிகாரிகள் அந்நாட்டு ஜனாதிபதி டில்மா ருசெவ்விடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

பிரேஸில் ஜனாதிபதி மற்றும் அதந்நாட்டின உயர் மட்ட பிரதிநிதிகளை அமெரிக்க உளவு பார்த்தது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. அதையடுத்தே அமெரிக்காவிற்கான பயணத்தை இரத்துச் செய்யுமாறு அதிகாரிகள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

"இது தொடர்பில் டில்மா ருசெவ் எந்தவித தீர்மானங்களையும் எட்டவில்லை. நாளை வெளிவிவகார அமைச்சருடன் நடைபெறவுள்ள கலந்துரையாடலின் பின்னர் இது தொடர்பில் தீர்மானங்கள் எடுக்கப்படும்" என்று அந்நாட்டு ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி டில்மா ருசெவ் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 24ஆம் திகதி அமெரிக்காவிற்கு பயணம் செய்வதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ற)

## குடிபோதையில் குதிரையும் ஓட்டக் கூடாது: விரட்டிப் பிடித்த பொலிஸார் வழக்கு தாக்கல்

நியூயோர்க், செப்.17

குடிபோதையில் குதிரையில் பயணம் செய்தார் என்று கூறி அமெரிக்காவைச் சேர்ந்த இளைஞர் ஒருவரைக் கைது செய்துள்ளனர் பொலிஸார்.

அமெரிக்காவின் கொலராடோ மாகாணத்தை சேர்ந்தவர் பாட்ரிக் ஷுமேக்கர். இவருடைய சகோதரருக்கு திருமணம் நிச்சயிக்கப்பட்டிருந்தது. அதற்கு 600 கிலோமீற்றர் பயணம் செய்யவேண்டும். ஆனால் ஷுமேக்கருக்கு ஒரு சிக்கல். தன்னுடைய சாரதி அனுமதிப் பத்திரத்தை ஏற்கனவே தொலைத்து விட்டார் அவர். என்ன செய்யலாம் என்று யோசித்த ஷுமேக்கருக்கு யோசனை ஒன்று உதித்தது. அதுதான் குதிரைப் பயணம்.

பயணத்தைத் தொடங்கினார். 600 கிலோமீற்றர் அல்லவா? களைப்புத் தெரியாது இருக்க இடையிடையே கொஞ்சம் 'உற்சாகத்தை' ஏற்றிக் கொண்டார்.

இவ்வாறு பயணம் தொடர்ந்து கொண்டிருக்கையில் திடீரென விரட்டி வந்த பொலிஸ் கார்கள் ஷுமேக்கரைச் சுற்றி வளைத்தன. அப்படியே அவரை குண்டுக்கட்டாகக் கட்டி பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்றனர் பொலிஸார்.

வேறு ஒன்றுமில்லை. கொஞ்சம் போதை ஏறியதும் குதிரையைச செல்லமாக அடித்திருக்கின்றார் ஷுமேக்கர். ஆனால் அது செல்ல அடி இல்லை என்று அவருக்குக் குடிபோதையில் விளங்கவில்லை. அவர் குதிரையைப் போட்டு அடிப்பதைப் பார்த்தவர்கள் பொலிஸாருக்குத் தகவல் தெரிவித்து விட்டனர். அதனால்தான் பொலிஸார் அவரைக் குண்டுக் கட்டாகக் கட்டித் தூக்கிச் சென்றனர்.

இதுகுறித்துப் பொலிஸார் கூறும்போது, "அவரைச் சோதனையிட்ட போது அவர் குதிரையில் ஏகப்பட்ட 'பியர்' போத்தல்களை வைத்திருந்தார். ஒரு நாய்க்குட்டியும் இருந்தது. விலங்குகளைப் போதையில் துன்புறுத்தியமைக்காக அவர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

தான் குதிரையை அடிக்கவில்லை என்று கூறுகின்றார். குதிரையின் முகத்தில் ஈ இருந்ததாகவும் அதைக் துரத்தியதாகவுமே திருப்பத் திருப்பக் கூறுகின்றார்." என்று தெரிவித்துள்ளனர்.

இப்படிப்பட்ட வழக்கு பொலிஸாருக்கும் புதுசு. தற்போது ஷுமேக்கருக்கு பிணை வழங்கப்பட்டுள்ளதாம். (ற)

## பாகிஸ்தானுக்கு ஆயுதம் ஒருபோதும் கிடையாது

### சத்தியம் செய்கின்றது இஸ்ரேல்

ஜெருசலேம், செப்.17

எந்தச் சூழ்நிலையிலும் பாகிஸ்தானுக்கு ஆயுதங்களை விநியோகம் செய்யும் திட்டம் எதுவும் இல்லை என்று என்று கூறியுள்ளது இஸ்ரேல்.

கடந்த ஐந்தாண்டுகளாக பாகிஸ்தானுக்கு இஸ்ரேல் ஆயுதங்களை வழங்கி வருகின்றது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. அதுகுறித்து இந்தியாவும் அதிருப்தி தெரிவித்திருந்தது. இது தொடர்பில் விளக்கமளிக்கும்போதே இஸ்ரேல் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

"இஸ்ரேலின் வெளியுறவுக் கொள்கைகள் மிகத் தெளிவானவை. ஆயுத ஏற்றுமதியில் மிகுந்த கவனம் கொண்டுள்ளோம். ஒருபோதும் பாகிஸ்தானுக்கு நாங்கள் ஆயுதங்களை வழக்குவதான திட்டமில்லை. இந்தியாவுடனான உறவில் நாங்கள் பெருமிதமும், திருப்தியும் கொண்டுள்ளோம்.

அதற்கு பாதிப்பு ஏற்படாத வகையிலேயே செயற்படுவோம்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.(ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வருடாந்த இடமாற்றம் முதலமைச்சரால் ரத்து

## அம்பாறை கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கவலை

அம்பாறை.செப்.17

அம்பாறை மாவட்டத்தில் ஒரே சேவை நிலையத்தில் 10 வருடங்களுக்கு மேலாகக் கடமையாற்றிவரும் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் வருடாந்த இடமாற்றம் கிழக்கு மாகாண முதலமைச்சரினால் ரத்துச் செய்யப்பட்டுள்ளமை கண்டிக்கத்தக்கது.

இவ்வாறு பாதிக்கப்பட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கவலை தெரிவித்தனர்.

இதுகுறித்து அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

கிழக்கு மாகாணத்திலுள்ள திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் ஒரே சேவை நிலையத்தில் 10 வருடங்களுக்கு மேலாக சேவையாற்றி வந்த கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்களை கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் கா.அருந்தவராஜா கடந்த 2 ஆம் திகதி நடைமுறைக்கு வரும் வகையில் இடமாற்றம் செய்திருந்தார்.

இந்த இடமாற்றம் கிழக்கு மாகாண முதலமைச்சரின் செயலர் யு.எல்.ஏ.அஸீஸின் அனுமதியுடனேயே செய்யப்பட்டிருந்தது.

திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இடமாற்றத் தினை ஏற்று கடமையைப் பொறுப்பேற்றபோதும், அம்பாறை மாவட்டத்திலுள்ள ஒருசில உத்தியோகத்தர்கள் தங்களது தனிப்பட்ட சுயநல நோக்கத் தினை மையமாகக் கொண்டு அரசியல் அழுத்தங்களின் ஊடாக இட மாற்றத்தினை ரத்துச் செய் வதற்கான முயற்சியில் ஈடுபட்டு அதில் வெற்றியும் கண்டுள்ளனர்.

இந்த உத்தியோகத்தர்கள் கடந்த 30 வருடங்களுக்கு மேலாக ஒரே சேவை நிலையத்தில் கடமையாற்றி வருகின்றனர்.

கடந்த பல வருடங்களாக அம் பாறை மாவட்டத்தில் உள்ள கிராம அபிவிருத்தி உத்தியோ கத்தர்களுக்கான இடமாற்றம் அரசியல் தலையீட்டால் ரத்துச் செய்யப்பட்டு வந்துள்ளது.

உண்மை நிலைமையை அறி யாமல் ஒரு சில உத்தியோகத்தர்களின் தனிப்பட்ட நலன்களுக்காக கிழக்கு மாகாண முதலமைச்சர நஜீப் அப்துல் மஜீத் இந்த இடமாற்றத்தை ரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளார்.

இந்தச் செயலால் இடமாற்றத்தை ஏற்று கடமையை வேறு நிலையங்களில் பொறுப்பேற்ற உத்தியோகத்தர்கள் மன உளைச்சலுக்கு உள்ளாகியுள்ளனர்.

தொடர்ச்சியாக ஒவ்வொரு வருடமும் இடமாற்றம் கிடைப்பதும் அது பின்னர் அரசியல் தலையீட்டால் ரத்துச் செய்யப் படுவதும் கவலையளிக்கிறது.

எனவே, இந்த இடமாற்ற விடயத்தில் நீதியை நிலைநாட்ட, வினைத்திறமையான அரச சேவையினை நடைமுறைப்படுத்த கிழக்கு மாகாண ஆளுநர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.- என்றனர். (ச)

# றிஸானா வீட்டை பார்வையிட்ட குழு



திருகோணமலை.செப்.17

திருகோணமலை.மூதூரில் றிஸானா நபீக்கின் குடும்பத்தினருக்காக அமைக்கப்பட்டு வரும் வீட்டின் நிர்மாணப் பணிகள் பூர்த்தியடையும் நிலையை எட்டியுள்ளன.

இந்த வீட்டின் நிர்மாணப் பணிகளை ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் ரி.என்.எல்.கருணாரத்ன, வர்த்தகப் பொருளாதாரத்துறைத் தலைவர் அநுரமார உதுமான்கே, கேணல் விகும் லியனகே உட்படப் பலர் பார்வையிட்டுள்ளனர்.

றிஸானா நபீக்கிக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டதன் பின்னர் மிகவும் வறுமையில் வாழும் அவரது குடும்பத்தினருக்கு வீடொன்றை அமைத்துக் கொடுப்பதாக பலர் வாக்குறுதியளித்தனர்.

எனினும் அவர்களில் எவரும் முன்வராத நிலையில் ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக சமூகத்தினரும், இலங்கை இராணுவத்தினரும் இணைந்து வீடொன்றை அமைத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

# சட்டவிரோத போதைப் பொருள்கள் மதுவரித் திணைக்களத்திடம்



மட்டக்களப்பு.செப்.17

மட்டக்களப்பு, காத்தான்குடிப் பகுதியில் சட்ட விரோதமான முறையில் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டு விற்பனை செய்யப்பட்ட வெளிநாடொன்றில் தயாரிக்கப்பட்ட போதைப் பொருள் களை மட்டக்களப்பு மாவட்ட மதுவரித் திணைக்களத்தினர் கைப்பற்றியுள்ளனர்.

மத்திய கிழக்கு நாடொன்றில் உற்பத்தி செய்யப்பட்ட நிலையில் சட்ட விரோதமான முறையில் கொண்டுவரப்பட்ட சுமார் 20 பண்டல்களைக் கொண்ட 200 பெட்டிகளை மதுவரித்திணைக்களத்தினர் இவ்வாறு கைப்பற்றியுள்ளனர்.

இந்தப் போதைப்பொருள்கள் காத்தான்குடி பிரதேசத்தில் பாடசாலை மாணவர்களுக்கு விற்பனை செய்யப்படுகிறது என்று கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையிலேயே போதைப் பொருள்கள் கைப் பற்றப்பட்டன என்று மட்டக்களப்பு மாவட்ட மதுவரித் திணைக்கள பொறுப் பதிகாரி எஸ்.தங்கராஜா தெரிவித்தார்.

அந்தப் போதைப் பொருள்களை மதுவரித்திணைக்களத்தின் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட அத்தியட்சர் என்.துசாதரன் தலைமையில் மட்டக்களப்பு மாவட்ட மதுவரித் திணைக்கள பொறுப்பதிகாரி எஸ்.தங்கராஜா, மதுவரி திணைக்களப் பரிசோதகர் டயஸ், சாஜன் மேஜர் எம்.செல்வக்குமார், மது வரித் திணைக்கள உத்தியோகத்தர்களான [illegible] [illegible] கே.ரஜனிக்காந்த ஆகியோர் கொண்ட குழுவினரே கைப் பற்றியுள்ளனர்.

கைப்பற்றப்பட்ட போதைப்பொருள்களை நீதிமன்றில் சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்று மதுவரித்திணைக்கள பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

இவ்வாறான சட்ட விரோத போதைப்பொருள்களை விற்பனை செய்வோர் தொடர்பில் தொடர்ந்து விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என்று அவர் கூறினார். (ச)


## 14 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
04.09.1947

மறைவு
23.09.1999

அமரர் சின்னத்தம்பி கந்தசாமி

திதி:திரயோதசி 17.09.2013

எம்மையெல்லாம் ஆளாக்கிய தெய்வமே
எம்மை விட்டுப் பிரிந்து பதினான்கு ஆண்டு
-ஆனதோ
என்றும் உங்கள் நினைவுகளுடன் வாழும்

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்
எருவன், கொடிகாமம்.

(31542)(3.6.11)

## நன்றி நவிலலும் 31 ஆம் நாள் நினைவு அஞ்சலியும்

தோற்றம்
07.08.1938



மறைவு
19.08.2013

திருமதி றோஸ்மலர் முருகேசு

அன்னாரின் மறைவுச்செய்தி கேட்டு நேரில் வந்து துயரில் பங்கெடுத்த உறவினர்கள், நண்பர்கள், அயலவர்களுக்கும் வெளிநாட்டிலும் உள்நாட்டிலும் இருந்து தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் அஞ்சலி நிகழ்வில் பங்கெடுத்த உடுவில் தமிழ்ஒளி சனசமூக நிலைய இளைஞர் அணியினர்க்கும் கண்ணீர் அஞ்சலிகளை வெளியிட்டவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எமது குடும்பத் தலைவியின் இல்லத்தில் நாளை (18.09.2013) புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக் கொள்ளவும்.

ஆர். சி. சேச் லேன்,
உடுவில், சுன்னாகம்.

செ. முருகேசு
குடும்பத்தினர்.

(31824) (7.6.3)

## 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்
29.06.1934

இறைவன் அடியில்
25.09.2007

அமரர் மாணிக்கம் குமாரசாமி

திதி-திரயோதசி (17.09.2013)

ஆண்டுகள் ஆறு ஆனதுவே அப்பா!
ஆனாலும் உம் நினைவு ஆறாது
நிம்மதி தேடி இறையடி கலந்தீர்கள்
உம் பிரிவால் ஆறாத்துயரடைகின்றோம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
கச்சார் வெளியான் மலர்ப் பாதங்களில்.....

குடும்பத்தினர்.
பெரிய பளை, பளை.

(C2752)(6.7.10)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
08.03.1945

இறப்பு
21.09.2010



அமரர் சிவப்பிரகாசம் முத்துலிங்கம்

திதி : 18.09.2013

என் அன்புக் குல தெய்வமே! தாங்கள் என்னைப் பிரிந்து மூன்றாண்டு ஆகியும் என் மனக் கண்ணில் தாங்கள் உயிருடன் என்னுடன் வாழ்வது போன்று பிரமையில் வாழ்கின்றேன் ஐயா! எனது உயிருள்ள காலம் வரை தங்களை மறந்து வாழ மாட்டேன் ஐயா! எம் உறவுகள் தங்களைப் பிரிந்த வேதனையிலும் என்னைத் தேற்றுவதற்கும், ஆறுதல்படுத்தவும், எவ்வளோ முயற்சி செய்கின்றார்கள். தங்களைப் பிரிந்த வேதனையில் நான் எப்படி ஐயா ஆறுதல் பெறுவேன். எங்கள் குலதெய்வம் வைரவரும் தங்களைப் பிரிந்து வாழத் தண்டனையா தந்தார்? என்று கதறிப் புலம்புகின்றேன் ஐயா! உங்கள் மூன்றாண்டுப் பூர்த்தியிலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் எம் அன்பு உறவுகளைக் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றேன்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

359, பழைய கண்டி வீதி,
இராமநாதபுரம்.

திருமதி மு. கமலாதேவி
(ஓய்வுபெற்ற ஆசிரியை)

(37531) (7.6.3)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இழுவைப்படகு மீன்பிடி

## குருநகரில் மீண்டும் ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப். 17
நீரியல் வளத்துறை அதிகாரிகளால் தடை செய்யப்பட்டிருந்த இழுவைப்படகு (றோலர்) தொழில் கடந்த வாரம் முதல் குருநகர்ப் பகுதியில் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மாகாண சபைத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் குறிப்பிட்ட ஓர் அரசியல் கட்சியினர் தமக்கு ஆதரவு தேடும்முகமாக இழுவைப்படகுத் தொழிலுக்கு அனுமதி வழங்கியுள்ளதாகக் கூறப்படுகின்றது. இது தொடர்பாக கடற்றொழிலாளி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில்;

இது தேர்தல் கால சலுகையாக இருக்கலாம். தேர்தல் முடிவடைந்ததும் மீண்டும் தடை செய்யப்படலாம் எனத் தெரிவித்தார்.

இழுவைப்படகுத் தொழில் தடை செய்யப்பட்டதை அடுத்து கரையேற்றி வைக்கப்பட்டிருந்த இழுவைப் படகுகள் தற்போது ஆழ்கடல் பகுதிகளுக்குச் சென்று மீன்பிடியில் ஈடுபட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (வ-135)

# அடியவர்கள் புடைசூழ தீர்த்தமாடினாள் துர்க்காதேவி




தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலய வருடாந்த தீர்த்தத் திருவிழா நேற்று திங்கட்கிழமை காலையில் புஸ்கரணி தீர்த்தக் கேணியில் அடியவர்களின் அரோகரா கோஷத்தின் மத்தியில் மிகவும் பக்திபூர்வமாக இடம்பெற்றது. குடாநாட்டின் பல பகுதிகளில் இருந்தும் தீர்த்தத் திருவிழாவுக்கு அடியவர்கள் வருகை தந்திருந்தனர். காவடிகள், தூக்குக் காவடிகள் அடியவர்களினால் எடுக்கப்பட்டு நேர்த்திகள் நிறைவு செய்யப்பட்டன. (வ-86)

# மீள்குடியேறியோருக்கு சூரிய மின்கல விளக்கு

வலி.தென்மேற்கு, செப்.17
இயக்கச்சி விநாயகர்புரத்தில் மீள்குடியேறிய மின்சார வசதியின்றி இருளில் வாழ்ந்து வரும் ஏழைக் குடும்பங்களுக்கு கைகொடுத்து உதவ முன்வந் துள்ள கொழும்பு இராம கிருஸ்ண மிஷன். மாணவர் களின் கல்வி வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு 40 குடும் பங்களுக்கு சூரிய மின்கல விளக்குகளை வழங்கியுள்ளது.

இதேவேளை இனங்காணப்பட்ட போசாக்குக் குறைந்த 3 மாதங்களிலிருந்து நான்கு வயது வரையுள்ள குழந்தைகளுக்குத் தொடர்ந்து 6 மாதங்களுக்கு பால்மா வழங்குவதற்கான ஒழுங்குகளையும் மேற்கொண்டுள்ளது.

பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் இயக்கச்சி, விநாயகபுரத்தில் மீள்குடியேற்றப்பட்ட குடும்பங்கள் மின்சார வசதியின்றி பெரும் சிரமத்தின் மத்தியில் இருளில் வாழ்ந்து வருகின்றனர்.

இங்குள்ள மாணவர்கள் மின்சார வசதியில்லாததால் மண்ணெண்ணெய் விளக்கில் கல்வி கற்று வருகின்றனர். (வ-115)

# தேர்தல் பரப்புரையின்போது வாகனச் சாரதி தாக்கப்பட்டார்

தென்மராட்சி, செப். 17
தேர்தல் பரப்புரைப் பணியில் ஈடுபட்ட வாகனத்தின் சாரதியை இனந்தெரியாதோர் போத்தலால் தலையில் அடித்துக் காயப்படுத்தியுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு மானிப்பாயில் இடம்பெற்றது.

வேட்பாளர் கு.சர்வானந்தனின் வாகனச் சாரதியே மோட்டார் சைக்கிளில் வந்தவர்களால் போத்தலால் தாக்கியதில் தலையில் காயமடைந்தார்.

மானிப்பாய் பகுதியில் தேர்தல் பரப்புரை பணியில் வேட்பாளர் சர்வானந்தா தலைமையில் பரப்புரையை மேற்கொண்டிருந்த வேளையில் வீதியோரத்தில் வாகனத்தை நிறுத்திவிட்டு வெளியில் கதைத்திருந்த சாரதி மீதி மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் தாக்குதல் நடத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது.

தலையில் காயத்துக்கு உள்ளான யாழ். கல்வியங்காட்டைச் சேர்ந்த புவனசுந்தரராசா மோகனராசா (வயது-36) என்பவர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். (வ-9)

# பருத்தித்துறை-கொழும்பு பஸ்ஸில் அச்சத்துடன் பயணிக்கும் மக்கள்

மாங்குளம்,செப்.17
பருத்தித்துறையிலிருந்து கொழும்பு நோக்கி செல்லும் இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்கள் மிக வேகத்தில் பயணிப்பதால் மக்கள் அச்சத்துடன் பிரயாணம் செய்ய வேண்டியுள்ளதாக பயணிகள் தெரிவிக்கின்றனர்.



குறித்த சேவையை மேற்கொள்ளும் சாரதிகள் பஸ்ஸை கட்டுப்பாடின்றி மிக வேகமாகச் செலுத்துகின்றனர். இதனால் பயணம் செய்யும் பயணிகளும் வீதியால் போக்குவரத்தை மேற்கொள்ளும் ஏனைய வாகனங்களும் பாதசாரிகளும் அச்சத்துடனேயே செல்ல வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

அண்மையில் கூட ஆனையிறவுப் பகுதியில் ஏற்பட்ட விபத்தின் போது பஸ் புரண்ட போதும் பயணிகள் சிறு காயங்களுடன் உயிர் தப்பினர். இந்த விபத்துக்குப் பின்னரும் சாரதிகள் வேகத்தைக் குறைக்காமல் பஸ்ஸை செலுத்துவது மக்களிடையே பெரும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

கொழும்பிலிருந்து பருத்தித்துறை நோக்கி வந்து தமது சேவையை நிறைவு செய்த பின்னா யாழ்ப்பாணத்துக்கான சேவையில் சாரதிகள் ஈடுபடுகின்றனர்.

இந்தச் சேவையின் போதும் நெல்லியடியில் தற்போது வீதி அபிவிருத்திப் பணிகள் நடைபெறுகின்ற இடங்களிலும் மக்கள் அதிகமாக நடமாடும் இடங்களிலும் வேகத்தைக் கட்டுப்படுத்தாமல் செல்வதாக மக்கள் குறை கூறுகின்றனர்.

எனவே இதனை உரியவர்கள் கவனத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (வ-422)

# வீதிகள் முறையாக அமைக்கப்படவில்லை


## விசனமடையும் மக்கள்

மாங்குளம், செப்.17
வடமராட்சிபகுதியில்வீதிஅகலிப்பு வேலைகள் தற்போது நிறைவடைந்து நீர்வாய்க்கால் வேலைகள் நடைபெற்று வருகின்றன.

இதில் பருத்தித்துறை நகரை அண்டிய பகுதிகளில் பிரதான வீதிகள் உயர்த்தப்பட்ட போதும் அதன் குறுக்கு வீதிகள் முறையாக அமைக்கப்படாததையிட்டு அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

பருத்தித்துறையில் கோழிக்கடைச் சந்தியில் அமைக்கப்பட்ட குறுக்கு வீதியின் சரிவு குறைவாக இருப்பதால் அதனூடாக பயணம் செய்வோரில் சைக்கிளில் வருபவர்கள் மிக வேகமாக வந்தே பிரதான வீதியில் ஏறவேண்டிய சூழ்நிலை உள்ளது.

அத்துடன் அங்கவீனர்கள், நோயாளிகள், முதியவர்களும் பாரத்துடன் சைக்கிள்களில் வருவோரும் பெரும் சிரமப்படுகின்றனர். இதனால் விபத்துக்கள் ஏற்படக் கூடிய நிலையும் ஏற்படுகின்றது. (வ-422)



# கூட்டமைப்பின் விளம்பரத் தட்டி விஷமிகளால் கிழிப்பு

தென்மராட்சி,செப். 17
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் தமிழரசுக் கட்சியின் சாவகச்சேரி அலுவலகத்தில் பொருத்தப்பட்டிருந்த விளம் பரத் தட்டி சனிக்கிழமை இரவு இனந்தெரியாதோரால் கிழிக் கப்பட்டுள்ளது.

மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன் ஆலய முன்றலில் சனிக்கிழமை ஏற்பாடு செய்யப்பட்ட பிரசாரக் கூட்டத்துக்காக அலுவலகத்தை மூடி விட்டுச் சென்றுள்ளனர். காலை யில் வந்து பார்த்தபோது அலுவ லகத்தில் உயரத்தில் வைக்கப்பட்டிருந்த விளம்பரத் தட்டி கிழிக்கப்பட்டு காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

# இந்த வாரம் பத்துக்கும் மேற்பட்ட மருத்துவர்களுக்கு இடமாற்றம்

யாழ்ப்பாணம்,செப். 17
யாழ்.போதனா வைத்தியசாலையில் பணிபுரியும் இடமாற்றம் பெறத் தகுதியுள்ள 10 இற்கும் மேற்பட்ட வைத்தியர்கள் யாழ்.மாவட்டத்திலுள்ள ஏனையவைத்தியசாலைகளுக்கு இந்த வாரம் இடமாற்றம் செய்யப்படவுள்ளனர் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்தது.

சுகாதார அமைச்சும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கமும் இணைந்து இன்று திங்கட்கிழமை தொடக்கம் எதிர் வரும் திங்கட்கிழமை வரையான காலப் பகுதியை வைத்தியர்களின் இடமாற்ற வாரமாகப் பிரகடனப்படுத்தியுள்ளன.

**இன்று திங்கட்கிழமை தொடக்கம் எதிர் வரும் திங்கட்கிழமை வரை யான காலப் பகுதியை வைத்தியர்களின் இடமாற்ற வாரமாகப் பிரகடனப் படுத்தியுள்ளன.**

அதன் அடிப்படையில் இடமாற்றம் பெறத் தகுதியுள்ள, யாழ். போதனா வைத்தியசாலையில் பணிபுரியும் 10 இற்கும் மேற்பட்ட வைத்தியர்கள் யாழ். மாவட்டத்திலுள்ள ஏனைய வைத்தியசாலைகளுக்கு இடமாற்றம் செய்யப்படவுள்ளனர் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்க நிறைவேற்றுக்குழு உறுப்பினரும் இடமாற்றச்சபை உறுப்பினருமான வைத்தியர் சாய் நிரஞ்சன் தெரிவித்தார்.

யாழ்.போதனா வைத்தியசாலையிலிருந்து குறித்த வைத்தியர்கள் யாழ்ப்பாணத்திலுள்ள மாகாண வைத்தியசாலைகளுக்கு இடமாற்றம் பெற்றுச் செல்லும் அதேவேளை பிரதியீடாக மாகாண வைத்திய சாலைகளிலிருந்து யாழ். போதனா வைத்திய சாலைக்கும் வைத்தியர்கள் இடமாற்றம் செய்யப்படுகின்றனர் இந்த இடமாற்றங்கள் இந்த வாரத்தில் செயற்படுத்தப்படும்.

இதுதவிர. இந்த மாத இறுதியில் உள்ளகப் பயிற்சியை நிறைவு செய்து வைத்தியர்களாக வெளியேறுவோர்களில் சுமார் 60 பேர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு நியமனம் செய்யப்படவுள்ளனர்.

அவர்கள் நியமனம் செய் யப்பட்டதும் போதனா வைத்திய சாலையிலுள்ள இடமாற்றம் பெறத் தகுதியுள்ள வைத்தியர்கள் யாழ்.மாவட்டத்திலுள்ள மாகாண வைத்தியசாலைகளுக்கு இடமாற்றம் செய்யப்படவுள்ளனர் என்று சங்கம் மேலும் தெரிவித்தது. (வ-4)

# தீவக வலயத்தில் இடம்பெற்ற சகோதர சங்கமம் நிகழ்வு

யாழ்ப்பாணம், செப்.17
ஜி.ஐ.இசற். அனுசரணையுடன் தீவக கல்வி வலயம் நடத்திய சகோதர சங்கமம் நிகழ்வு புங்குடுதீவிலுள்ள சர்வோதயத்தில் கடந்த வெள்ளிக்கிழமை தொடக்கம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமைவரை மூன்று தினங்கள் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் புங்குடுதீவு மகாவித்தியாலயம், வவுனியா தெற்கு கல்வி வலயத்தைச் சேர்ந்த அலகல்ல சிங்கள வித்தியாலயம்,நயினாதீவுஸ்ரீகணேச வித்தியாலயம் ஆகியவற்றைச் சேர்ந்த தமிழ் சிங்கள முஸ்லிம் மாணவர்கள் நூறு பேர் வரை கலந்து கொண்டனர்.

இறுதி நிகழ்வான நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் விருந்தினர்களாக தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ரி.ஜோண் குயின்ரஸ், ஜி.ஐ.இசற். முகாமையாளர் எஸ்.இராசையா, வவுனியா தெற்கு வலய ஆசிரிய ஆலோசகர் எம்.அகமத், புங்குடுதீவு சர்வோதய பொறுப்பாளர் செல்வி புஸ்பாதேவி ஆகியோர் கலந்து கொண்டனர்.



தீவக வலய முகாமைத்துவப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ச.பாஸ்கரன் தலைமையில் நடைபெற்ற இறுதிநாள் நிகழ்வில் தமிழ், சிங்கள, முஸ்லிம் மாணவர்களின் கலந்துரையாடல், பேச்சுக்கள், இசை நிகழ்வுகள், நடனம், நாடகம் என்பன இடம் பெற்றன.

முன்னதாக விருந்தினர்கள் மலர் மாலை அணிவித்து அரங்குக்கு அழைத்து வரப்பட்டனர். மாணவர்கள், ஆசிரியர் களுடன் பொது மக்களும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

கடந்த இரு தினங்களில் தீவுப் பகுதியின் முக்கிய பகுதிகளுக்கு மாணவர்கள் அழைத்துச் செல்லப்பட்டு இடங்களைப்பார்வையிட்டனர். (வ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## நிர்ப்பந்தம் செய்வோர் குறித்து எச்சரிக்கை தேவை வாக்காளர்களே!

வடக்கு மாகாண சபையின் முதலாவது தேர்தலுக்கு இன்னமும் நான்கு நாள்களே கீழ் இறங்கு வரிசையில் (Count down) உள்ளன. இத் தேர்தலில் போட்டியிடும் கட்சிகள் ஒவ்வொன்றும், தம்மால் சபையின் முப்பத்தாறு ஆசனங்களில் எத்தனையை வென்றெடுக்க இயலும் என்று இப்போதே நாடி பிடித்துப் பார்க்கவும் கணக்குப் போடவும் ஆரம்பித்து விடும் எனக் கொள்ளலாம். அதே போன்று, வேட்பாளர்கள் ஒவ்வொருவரும் தமக்கு அண்ணளவாக எத்தனை வாக்குகள் கிடைக்கும் என்று தமக்குள் கணக்குப் போடுவர்.

கட்சிகளினதும் வேட்பாளர்களினதும் கணக்குகள், உள்ளக மதிப்பீடுகள் சரியாகத் தான் இருந்தனவா என்பது வாக்களிப்பு நாளன்று இரவோ அன்றி இருபத்திரண்டாம் (22 ஆம்) திகதியோ தெரிந்து விடும்.

வாக்களிப்பு நாள் நெருங்க, நெருங்க கட்சித் தலைமைகளினதும், வேட்பாளர்களினதும் மனத்துடிப்பின் வேகம் அதிகரித்து உயரும். ஆனால் வாக்காளர்களில் மிகப் பெரும்பாலானோர் எந்த அரசியல் கட்சிக்கு, அதனைச் சார்ந்த எந்த வேட்பாளருக்கு தமது பொன்னான வாக்குகளைச் செலுத்துவது என்பதனை ஆகக் கூடியது, தேர்தல் நாளுக்கு முதல் நாளன்றே தமது மனங்களில் பதித்து விடுவர்.

ஜனநாயக வழிமுறைகளுக்கும் தேர்தல் விதிகளுக்கும் விரோதமான, குந்தகமான முறைகளில் வாக்காளர்களை வளைத்துப் பிடித்து வெற்றி பெற முனைபவர்கள் அறவே இல்லை அல்லது அருகிவிட்டனர் என்று தப்புக் கணக்குப் போட முடியாது.

அத்தகைய கயமைத்தனங்களைக் கண்டறியவும், அவற்றைக் கூர்மையுடன் உள்வாங்கிச் சிதைக்கவும் அதனை நாடிச் செயற்படவும் வாக்காளப் பெருமக்கள், தமது மனங்களை உறுதியாக்கிப் பற்றி நிற்க வேண்டிய வேளை இது.

வடக்கில் நடைபெறவுள்ள மாகாணசபைத் தேர்தலை, முடிவுகளை அனைத்துலக நாடுகள் அக்கறையுடன் மட்டுமன்றி மிகக் கூர்மையுடனும் அவதானிக்கின்றன. தமிழ் மக்களின்-வடக்கு வாக்காளர்களின்-மனநிலையும் அரசியல் அபிலாசைகளும் மற்றும் வேட்கைகளும் எத்தகைய பரப்புக்குள் (Periphery) அடங்கி உள்ளன என்பதனைக் கண்டறிவதற்கே அவை ஆவலாக உள்ளன.

ஆகையால் எமது மக்கள்-வாக்காளர்கள்-தேர்தல் காலத்தில் மட்டும் கவர்ச்சி காட்டி மேடை பரப்புவோரையும்-

தமது சுயவளர்ச்சிக்கும், உயர்ச்சிக்கும் தேர்தலைத் துஷ்பிரயோகம் செய்யும் தரப்புக்களையும், வேட்பாளர்களை யும்-கூர்மையுடன் இனங்காண்பது மிக மிகப் பிரதானம்.

நீண்ட காலமாக இழப்புக்களையும் இயலாமைகளையும் அனுபவித்த வடக்கு வாழ் மக்கள், அற்ப சலுகைகளுக்கு எடுபட்டு விடாமல், ஏய்க்காட்டும் போக்குள்ள தரப்புக்களையும் தக்க வகையில் கண்டறிந்து, தேர்தலில் குதித்துள்ள தரப்புக்களில் வெளுத்தது எல்லாம் பால் என்று தப்புக்கணக்குப் போட்டுத் தமது முதன்மையான ஜனநாயக உரிமைக்கு, வாக்காளர்கள் தாமே கரி பூசிவிடலாகாது.

ஜனநாயகத்தை வெளிப்படுத்துகிறோம் என்று கூறிக்கொண்டு தேர்தலை நடத்தினால் மட்டும் போதாது. அது சுதந்திரமாகவும் நீதியாகவும் நடத்தப்பட வேண்டும் என்பதில் அரசு உள்ளார்ந்தமாகவும் உண்மையாகவும் நேர்மையாகவும் செயற்பட வேண்டும்.

இது, வடக்கு மாகாண சபைக்கான தேர்தலில் மிக மிகப் பிரதானமானதும் தட்டிக் கழிக்க முடியாத ஒன்றுமாகும்.

வடக்கில் தேர்தல் சுதந்திரமாக நடைபெறும் என்று கருதக்கூடிய வகையில் இங்குள்ள செயற்பாடுகள் சாதகமான நிலையில் இல்லை என்று கோடி காட்டப்பட்டுள்ளது. மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கான புத்திஜீவிகளின் ஒன்றியம் இது குறித்து அபாய மணி அடித்துள்ளமை இங்கு விசேடமாகக் குறிப்பிடத்தக்கதாகும்.

வடக்கில் அரச சொத்துக்கள் பெருமளவில் துஷ்பிரயோகம் செய்யப்படுவதாகவும், அரச அதிகாரிகள் தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகவும், மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கான புத்திஜீவிகள் ஒன்றியம் தெரிவித்துள்ள குற்றச்சாட்டை எமது மாகாண மக்கள் ஊன்றிக் கவனிக்க வேண்டும்.


அவை போன்ற வேறு வகைகளிலான தேர்தல் மீறல்களுக்கு உடந்தையாகாது இருந்து, தமது வாக்குரிமையை தக்கவாறு பயன்படுத்துவது வடக்கு வாக்காளர்களின் தலையாய கடமை என்பதனைச் சிறிதும் மறந்துவிடாதீர்கள்; புறந்தள்ளாதீர்கள்.

வெற்றியதைத் தமதாக்குவதற்கு உங்களை நிர்ப்பந்தம் செய்வோர் குறித்து எச்சரிக்கையோடு செயற்படுங்கள். உங்கள் வாக்குகளின் பெறுமானத்தை உணர்ந்து வடக்கின் கள நிலைமையை மாற்றுவதற்கு மனம் கொள்ளுங்கள்.

# நெருங்கிவிட்டது தேர்தல்; அனைவரும் வாக்களிப்போம்



# புள்ளடி போடுவது எப்படி?



ஒவ்வொரு மாகாண சபைக்கும் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை அந்தந்த மாவட்டங்களின் சனத்தொகை, பரப்பளவு ஆகியவற்றின் அடிப்படையிலேயே தீர்மானிக்கப்படும்.

ஒவ்வொரு நிர்வாக மாவட்டத்திலும் 40,000 குடியிருப்பாளர்கட்கு ஓர் உறுப்பினர் என்ற வீதத்திலும், ஒவ்வொரு 1000 ச.கி.மீற்றர் நிலப் பரப்பிற்கும் ஓர் உறுப்பினர் என்ற அடிப்படையிலும் தேர்வு இடம்பெறும். ஒவ்வொரு மாகாண சபைக்கும் தேர்ந்தெடுக்கப்படுபவர் எண்ணிக்கை சமமானதாக அமையாது. ஒவ்வொரு மாகாண சபையின் நிர்வாக எல்லைக்குட்பட்ட சகல மாவட்டங்களினதும் சனத்தொகை, பரப்பளவு அடிப்படையில் கட்சிகள், சுயேச்சைக் குழுக்கள் பெற்றுக்கொண்ட வாக்குகளின் அடிப்படையில் விகிதாசார முறைப்படி சகல உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்ட பின் குறித்த மாகாண சபை உள்ளடக்கும். மாவட்டங்களிலும் கூடுதலான வாக்குகளைப் பெற்று அரசியற் கட்சி அல்லது சுயேச்சைக் குழுவிற்கு இரண்டு ஆசனங்கள் போனஸ் ஆகக் கிடைக்கும். இவ்வாறு இரு ஆசனங்களும் வேட்பு மனுப் பத்திரத்தில், வேட்பாளர் பட்டியலில் இடம்பெறாத வேறு இருவரின் பெயர்கள் மூலம் தெரிவு செய்யப்படும்.

### மாகாண சபை உறுப்பினர் எண்ணிக்கை

பல காலமாக இழுத்தடிக்கப்பட்ட வட மாகாண சபைத் தேர்தல் நடை பெறவுள்ளது. இந்தத் தேர்தலில் யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து 16 பேரும், மன்னார் மாவட்டத்திலிருந்து 5 பேரும், முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து 5 பேரும், கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து 4 பேரும், வவுனியா மாவட்டத்திலிருந்து 6 பேரும் தெரிவு செய்யப்படுவர்.

மாகாணத்தின் அதிகூடிய வாக்குகளைப் பெறும் அரசியல்கட்சிக்கு மேலதிகமான 2 பிரதிநிதித்துவங்கள் வழங்கப்படும். இலங்கையில் வடமாகாண சபையின் உறுப்பினர் எண்ணிக்கை 38 ஆகும்.

### வாக்களிக்கும் முறை

தேர்தலில் வாக்களிப்பது ஒவ்வொருவரினதும் உரிமையாகும். ஆகவே அளிக்கப்படும் வாக்குகள் ஒவ்வொன்றும் எதுவித பிழைகளுமின்றி சரியாக வாக்களிக்கப்பட வேண்டியது அவசியமாகும். அது எமது பொறுப்புமாகும்.

அளிக்கப்படும் பெறுமதிமிக்க வாக்குகள் வீணடிக்கப்படாது இருத்தல் அவசியம். மாகாண சபைக்கான தேர்தலில் வாக்களிக்கும் முறைமை பற்றிய தெளிவான அறிவை ஒவ்வொருவரும் குறிப்பாக பெண்கள், அறிந்துகொள்ள வேண்டும்.

வாக்களிக்கும் முறைமை பற்றிய தெளிவு, அறிய வேண்டிய ஆர்வம் இன்மையால் பல வாக்குகள் செல்லுபடியற்றதாகிய வரலாறு உண்டு.

### வாக்குச் சீட்டு

வாக்களிப்பதற்காக வாக்குச் சாவடிக்குச் செல்லும் போது உங்கள் ஆள் அடையாளத்தை நிரூபிப்பதற்கான தேசிய அடையாள அட்டை, தற்காலிக அடையாள அட்டை, வாகன ஓட்டுநர் அனுமதிப் பத்திரம் போன்றவற்றைத் தவறாது எடுத்துச் செல்ல வேண்டும்.

உங்கள் ஒவ்வொருவருக்கும் வழங்கப்படும் வாக்குச் சீட்டில் போட்டியிடும் கட்சி அல்லது குழுக்களின் சின்னங்கள் பொறிக்கப்பட்டிருக்கும்.

இப்படியாக வாக்குச் சீட்டில் தேர்தலில் போட்டியிடும் கட்சிகளின் பெயர்கள் "கட்சி" என்று போடப்பட்ட இடத்தில் குறிக்கப்பட்டிருக்கும். அதற்கெதிரே கட்சியின் சின்னம் பொறிக்கப்பட்டிருக்கும். ஆகவே நீங்கள் தெரிவு செய்யும் கட்சிக்கு எதிரே சரியாக புள்ளடி இட வேண்டும். ஒரு வாக்காளர் தான் தெரிவு செய்யும் ஒரு கட்சியின் சின்னத்துக்கு எதிரே மட்டும் புள்ளடி இட வேண்டும்.

அத்துடன் அந்தக் கட்சி சார்பாக போட்டியிடும் மூவரின் இலக்கத்துக்கு மேல் புள்ளடி இட்டு விருப்புத் தேர்வை மேற்கொள்ளலாம். நீங்கள் விருப்பு வாக்கை அளிக்கவுள்ள மூவரின் தெரிவு இலக்கங்களை முன்கூட்டியே தெளிவாக தெரிந்து வைத்திருப்பதன் மூலம், தேர்தல் தினத்தில் ஏற்படும் தடுமாற்றத்தை தவிர்க்க முடியும்.

ஒரு வாக்காளர் ஒரு கட்சியைத் தெரிவு செய்து அக்கட்சிக்குரிய சின்னத்துக்கு எதிரே புள்ளடியிட வேண்டும். இடப்படும் புள்ளடி பெட்டியின் கோடுகளுள் முட்டாதவாறு இடப்பட வேண்டும்.

ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கட்சிகளின் சின்னங்களுக்கு எதிரே புள்ளடி இட்டால் அந்தச் சீட்டு நிராகரிக்கப்படும்.

### விருப்பு வாக்கைப் பதிவு செய்தல்

மாகாண சபைத் தேர்தலில், ஒருவர், ஒரு குறித்த அரசியல் கட்சியிலோ, குழுவிலோ இணைந்து போட்டியிடும் மூவருக்கு தனது விருப்பு வாக்கை அளிக்க முடியும். குறித்த மூன்று விருப்பு வாக்குகளையும் ஒருவருக்கு ஒன்று என்ற ரீதியில் தெரிவு செய்யும் மூவருக்கு வழங்க முடியும்.

அதாவது அரசியல் கட்சியின், ஒரு சின்னத்துக்கு மட்டும் தனது வாக்கைப் புள்ளடியிட்டு பதித்த பின்னர் அடுத்ததாக அதே சின்னத்தில் போட்டியிடும் மூவரைத் தெரிவு செய்து அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட இலக்கங்களின் மேல் புள்ளடி இடவேண்டும்.


நீங்கள் தெரிவு செய்யும் கட்சி, அவர்களது சின்னம், விருப்பு வாக்களிப்பவர்கள் மூவரை தெரிவாக கொள்ளாத விடத்து ஒருவருக்கோ, அல்லது இருவருக்கோ அவர்களது இலக்கத்துக்கு மேலே புள்ளடி இட முடியும். இதுவும் முறையான வாக்களிப்பில் அடங்கும். மூன்று பேரைத் தெரிவு செய்ய வேண்டும் என்பது கட்டாயமல்ல. ஆனால் ஒன்றுக்கு மேற்பட்ட கட்சிச் சின்னங்களுக்குப் புள்ளடியிட்டால் அவ்வாக்கு நிராகரிக்கப்படும்

அதேபோல விருப்பு வாக்கு இலக்கங்கள் மூன்றுக்கு அதிகமாக புள்ளடியிட்டாலும் விருப்பு வாக்குகள் செல்லுபடியற்றதாகி விடும்.

ஆனால் ஒரு சின்னத்துக்கு புள்ளடியிட்டு விருப்பு வாக்கில் மூன்றுக்கு மேற்பட்ட இலக்கங்களுக்கு புள்ளடியிட்டால் கட்சியின் சின்னத்துக்குரிய வாக்கு ஏற்கப்படும். விருப்பு வாக்கு ஏற்கப்படமாட்டாது.



மூன்று பேரைத் தெரிவு செய்ய வேண்டும் என்பது கட்டாயமல்ல. ஆனால் ஒன்றுக்கு மேற்பட்ட கட்சிச் சின்னங்களுக்குப் புள்ளடியிட்டால் அந்த வாக்கு நிராகரிக்கப்படும்.



நன்றி:மகளிர் அபிவிருத்தி நிலையம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களே தலை நிமிர்ந்து வாழ வேண்டுமா? சலுகைகளுக்கு விலை போகாதீர்

## மன்னார் மறை மாவட்ட பொது நிலையினர் ஆணைக்குழு அறிவுறுத்து

வடமாகாணசபைத் தேர்தலுக்கு இன்னமும் சில தினங்களே உள்ளன. மக்கள் தங்களுக்குக் கிடைத்த அருமையான இந்தச் சந்தர்ப்பத்தை வீணாக்கி விடக்கூடாது. அற்ப சொற்ப சலுகைகளுக்காக விலைபோய் விடக் கூடாது.

இவ்வாறு மன்னார் மறை மாவட்ட பொது நிலையினர் ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையின் விவரம் வருமாறு:-

வடமாகாணத்தில் நடைபெற இருக்கும் மாகாண சபைத் தேர்தலில் சிறந்த தலைமைத்துவத்தை, சுயநல மற்ற, பொதுநலன் கருதி செயல்படுபவர்களை எந்தச் சந்தர்ப்பத்திலும் அற்ப சொற்ப சலுகைகளுக்காக விலை போகாத சிறந்த தன்மானமுள்ளவர்களை, எமது மாவட்டம் தெரிவுசெய்ய வேண்டிய பெரும் பொறுப்பில் உள்ளது.

மக்களால் மக்களுக்காக மக்களே ஆளுகின்ற ஆட்சியே ஜனநாயகம். நாம் வாழும் இந்த ஜனநாயக நாட்டில் வாக்குரிமை என்பது குடிமக்கள் ஒவ்வொருவரினதும் அடிப்படை உரிமை ஆகும். வாக்களிப்பது ஒவ்வொருவரினதும் தலையாய கடமையுமாகும்.

"தங்களுக்கிருக்கும் வாக்குரிமையைச் சுதந்திரத்தோடு செயல்படுத்த, எல்லாக் குடிமக்களுக்கும் உரிமை மட்டுமன்று, கடமையும் உண்டு. இதை அவர்கள் நினைவில் கொண்டு, பொதுநலனை மேம்படுத்த முன்வர வேண்டும்". (வத்திக்கான் திருச்சங்கம் - இன்றைய உலகில் திருச்சபை ஏடு இல: 75)

கடந்த சில ஆண்டுகளாக பல தேர்தல்கள் அதாவது ஜனாதிபதி தேர்தல், நாடாளுமன்ற தேர்தல், உள்ளுராட்சி தேர்தல் போன்ற பல்வேறு தேர்தல்கள் நடந்தேறியபோதிலும், வடபகுதி மக்கள் பெருமளவில் அதில் ஆர்வம் காட்டவில்லையென்பதை வாக்களிப்பு எண்ணிக்கை வீதத்தில் இருந்து அறிந்து கொள்ளக்கூடியதாக உள்ளது. நீண்டகால இடைவெளிக்குப்பின் மாகாண சபைத் தேர்தல் ஒன்று வடக்கு மாகாணத்தில் எதிர் வரும் செப்ரெம்பர் 21 ஆம் திகதி நடைபெற இருக்கின்றது. சர்வதேச நாடுகளின் அழுத்தங்களி னால்தான் இந்தத் தேர்தலை நடத்த அரசு முன்வந்துள்ளது என்பதே உண்மையாகும்.

இந்தத் தேர்தல் மூலமாக தமிழினத்துக்கு என்ன தீர்வு கிடைக்கப் போகின்றது என்று நாம் அசட் டையாக இருந்தோமேயானால், நமக்கு நாமே கேடு விளைவிக்கின்றவர்கள் ஆவோம். சர்வதேச சமூகத்தாலும் இந்தத்தேர்தல் உன்னிப்பாக அவதானிக்கப் பட்டு வருகின்றபோது, தமிழர்களாகிய நாம் ஒவ்வொருவரும் எமது வாக்குரிமைகளைத் தகுந்த முறையில் பயன்படுத்த வேண்டிய பெரும் பொறுப்பு எமக்கு உண்டு. தமிழினம் சகல உரிமைகளோடும் வாழவேண்டும். நீதி, சமத்துவம் பேணப்படல் வேண்டும், மனித உரிமைகள், மனித மாண்புகள் மதிக்கப்படல் வேண்டும், "உண்மையான மனிதத் தன்மை வாய்ந்த அரசியல் வாழ்வை நிலை நாட்ட வேண்டுமென்றால் : நீதி, அன்பு மற்றும் பொதுநல ஈடுபாடு பற்றிய உள்ளுணர்வை வளர்க்க வேண்டும். நாட்டு அரசியல் சமூகத்தின் உண்மை இயல்பையும் ஆட்சித்துறை அதிகாரத்தின் குறிக்கோள், முறையான செயற்பாடு, அதிகார வரம்புகள் ஆகியவற்றையும் பற்றிய அடிப்படை நம்பிக்கையை வலுப்படுத்த வேண்டும்". (வத்திக்கான் திருச்சங்கம் - இன்றைய உலகில் திருச்சபை ஏடு இல:73)

எமது கடந்த கால போராட்ட வரலாற்றில் நாம் எமது இனத்துக்காக, தன்மானத்துக்காக செய்த தியாகத்தை ஒரு சிலர் மறந்து விட்டார்கள். தமிழ்த் தேசியத்தின் விடுதலைக்காகப் பல இலட்சம் அப்பாவி உயிர்களை இழந்தோம், உறவுகளை இழந்தோம், பல கோடி சொத்துக்களை இழந்தோம். போரின் வடுக்களும், வேதனைகளும் இன்னும் தீரவில்லை. தடுப்பு முகாம்களில் அடைத்துவைத்து சித்திரவதை, வன்புணர்வு, கொலை செய்தல், காணாமற் போகச்செய்தல் போன்ற எண்ணற்ற செயற்பாடுகளைத் தமிழர் மேல் கட்டவிழ்த்து விட்டிருப்ப வர்களுடன் சிலர் கைகோர்த்து நின்று எம் மக்களின் பெறுமதியான வாக்குகளை விலை பேசுவது வெட்கத்துக்குரிய செயற்பாடாகும்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் வன்னித் தொகுதியில் பல தமிழ் உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான வாக்குகள் எம்மிடம் போதுமான அளவுக்கு இருந்தபோதிலும் எமது தமிழ் மக்கள் மாற்றானுக்கு அளித்த 2000 வாக்குகள் மூலம் எமது தமிழ் பிரதிநிதித்துவம் மூன்றாகக் குறைத்துபோனது. அதன் எதிர் விளைவுகளாக பின் வருவனவற்றை எம் மாவட்டத்தில் காண்கின்றோம்:


* முருங்கன், மடுச்சந்தி, முசலி போன்ற சில பகுதிகளில் முன்பு இல்லாத இடங்களில் அரசின் எல்லா உதவிகளோடும் திட்டமிடப் பட்ட (State Sponsored Colonization) சிங்களக் குடியேற்றங்கள் இடம்பெற்று வருகின்றமை. இது போன்று இன்னும் பல காணிகள் அரசால் திட்டமிட்டு அபகரிக்கப்பட்டு வருவதன் ஊடாக பூர்வீக தமிழ் மக்களின் எண்ணிக்கையை குறைத்து வருகின்றமை.

* முள்ளிக்குளம் கிராமத்தை முழுமையாக அபகரித்து வைத்துக்கொண்டு அங்கு மீள்குடியமரச் சென்ற மக்களின் சொந்தக் காணிகள் பறிமுதல் செய்யப்பட்டு, அவர்களை வேற்றிடத்துக்கு அனுப்பியுள்ளமை.

* தமிழருடைய சொந்த இடங்களிலேயே அவர்கள் இரண்டாம் இடத்துக்குத் தள்ளிவைக்கப்பட்டு தமிழரின் அரசியல் சக்தியை மழுங்கடித்து அவர்களின் இருப்பையும் அடையாளத்தையும் இல்லாதொழித்து வருகின்றமை.

* முருங்கன், தலைமன்னார், திருக்கேதீச்சரம் போன்ற இன்னும் பல பௌத்தர்களே இல்லாத இடங்களிலும் எமது மக்களின் சமய உணர்வுகள் மறுக்கப்பட்டு புத்த சிலைகளும், புத்தகோயில்களும் உருவாக்கப்பட்டு வருகின்றமை.

* தமிழ் மாவட்டங்களில் இன்னமும் இராணுவத்தை அதிக எண்ணிக்கையில் இருத்தி, தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளைச் சுதந்திரமாக நடைமுறைப் படுத்தத் தடையாக இருந்து வருகின்றமை, அரசியலிலும் சிவில் நிர்வாகத்திலும் சட்டத்துக்கு மாறாகத் தலையிடுதல்.





* தகுதியுள்ளோர் என்ற அடிப்படையில் வேலைவாய்ப்புக்களை வழங்காமல் எல்லாவிதமான வேலைவாய்ப்புக்களையும் அரசியல் செல்வாக்குகளைக் கொண்டே வழங்கிவருகின்றமை.

* கட்சி அரசியல்வாதிகளுடைய ஆதரவாளர்களுக்கு மட்டுமே நியாயமற்ற வகையில் சலுகைகள், வீட்டுத்திட்டங்கள், தொழில் உபகரணங்கள் ஆகியவற்றை வழங்கி வருகின்றமை.

இந்தத் தேர்தலில் வடபகுதிமக்கள் வாக்களிக்காமல் இருந்தால் மறைமுகமாக இறுதிப் போரின் போதும், அதன் பின்னர் கடந்த 4 வருட காலமும் நாம் அனுபவித்து வரும் மனித உரிமை மீறல்களும் அவ்வளவு பெரிய விடயங்கள் எல்ல என்ற கருத்தை வெளிப்படுத்துவதாக அமையும். துன்பங்கள் தொடரட்டும் சலுகைகள் தந்தால் போதும், எமக்கு உரிமைகள் வேண்டாம் என்ற கருத்தை அது வெளிப்படுத்துவதாகவே அமையும். வெறுமனே வீதி அபிவிருத்தி, போக்குவரத்துப் பாதை அபிவிருத்திகள் போன்ற செயற்றிட்டங்களோடு நாம் திருப்தி அடைந்து விடமுடியாது. இவற்றையெல்லாம் விட்டு எமது அரசியல் இருப்பையும், சுதந்திரத்தையும் உறுதி செய்கின்ற நோக்கத்துக்காகவே நாம் வாக்களிக்கவேண்டும்.

எனவே மொழியினாலும், கலாசாரத்தினாலும் ஒன்றுபட்டுள்ள தமிழர்களாகிய நாம், எமது ஒருமைப்பாட்டை இந்தத் தேர்தலில் உறுதிப்படுத்த முன்வருவோம். 21 ஆம் திகதி அதிகாலை எழுந்து எமது மனச்சாட்சிக்கும் இனத்துக்கும் துரோகம் செய்யாது சிரமங்களையும் பல்வேறு அழுத்தங்களையும் பாராது எமது இனத்துக்கு சுதந்திரத்தையும், தன்மானத்தையும், விடிவையும் தரக்கூடியதாக வாக்களிக்கச் செல்வோம்.

உங்களுடைய பெறுமதிமிக்க வாக்குகள் நிராகரிக்கப்படாதவாறு சரியாக வாக்களிக்கவும். நீங்கள் ஆதரிக்கும் கட்சியின் சின்னத்தை முதலில் தேர்ந்தெடுத்து அதன் அருகிலுள்ள சதுரக்கோட்டினுள் தர (X) அடையாளம் இடவும். தர அடையாளம் இடும்போது அது சதுரக் கோடுகளை தொடாது அடையாளம் இடவேண்டும். அதனைத் தொடர்ந்து நீங்கள் ஆதரிக்கின்ற அதே கட்சியை சார்ந்த வேட்பாளர்களில் மூன்று நபர்களின் இலக்கங்களுக்கு மேல் தர (X) அடையாளம் சதுரக்கோடுகளைத் தொடாதவாறு இடவேண்டும்.

எமது கிராமத்தைச் சார்ந்த, எமது மதத்தைச் சார்ந்த ஒருவரின் இலக்கத்துக்கு மட்டும் அடையாள மிடும் தவறான சுயநலனுள்ள எண்ணம் எதிர்காலத்தில் பெரும் பல தீமைகளைத் தமிழினத்துக்கு ஏற்படுத்தும் என்பதை உணர்ந்தவர்களாய், சாதி, மதம், சலுகைகள் என்பனவற்றைக் கடந்து, பொதுநலனில் அக்கறையுடன் தமிழ் இனத்தின் விடிவுக்காய் தியாகத்தோடு, சவால்களுக்கு மத்தியிலும் மன உறுதியோடும், தன்மானத் தோடும் செயலாற்றக்கூடிய, நீங்கள் ஆதரிக்கும் கட்சியைச் சார்ந்த மூவ ருக்கு வாக்களிக்கவும்.

மேற்கூறப்பட்ட சிந்தனைகளின் அடிப்படையிலே தமிழ் இனத்தின் நன்மையை மனத்தில் கொண்டவர்களாக தமிழி னத்துக்கு சுதந்திரத்தையும், சம உரிமையும் தரக்கூடியதாக உங்கள் விருப்புடன் சுதந்திரமாக சரியான வகையிலே வாக்களியுங்கள்!

# யார் பேசுவது இனவாதம்?

நாகபரம், நீர்வை.

இலங்கை "ஒரேநாடு, ஒரே மக்கள், ஒரே குரல்" எவரும் இங்கே பிரதேசவாதம், மாகாண வாதம், மதவாதம் பேசக் கூடாது. இதனைக் கூறியவர் யார்? வேறு எவருமல்லர், இந்த நாட்டின் மாட்சிமையுள்ள ஜனாதிபதியே இவ்வாறு கூறுகிறார். ஆனால் இன்று வடமாகாணசபைத் தேர்தலுக்கான பரப்புரையில் அவரும் அவரது அமைச்சர்களும் இதனை மீறுகின்ற வகையில் பரப்புரை செய்கின்றார்கள்.

கொழும்பில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஒருவரை முதன்மை வேட்பாளராக த.தே.கூட்டமைப்பினர் நியமித்துள்ளார்கள். வடமாகாணத்தில் எவரும் கிடைக்கவில்லையா? க.வி.விக்னேஸ்வரன் எந்தத் தொகுதியில் வாக்காளராக உள்ளார் என நான் தேடிப் பார்த்தேன், கடைசியாக கொழும்பைச் சேர்ந்த தேர்தல் வாக்காளர் இடாப்பில் தான் அவரது பெயரைக் கண்டு பிடித்தேன் என்கிறார் பஞ்ச ராஜபக்ஷாக்களில் ஒருவரான பஸில். ஏன் இத்தனை சிரமம்? இதற்காகச் செலவிட்ட நேரத்தை மக்கள் நலனை நாடி ஏதாவது செய்திருக்கலாமே?

நாட்டு மக்களுக்கு ஒரு புறம் அறிவுரை செய்கிறார்கள். மறுபுறம் தாங்களே அதனைமீறி யாழ்ப்பாணம், கொழும்பு, மலையகம் எனப் பிரதேச வாதம் பேசுகிறார்கள். ஏன் என்று கேட்டால் "ஊருக்கு உபதேசம் உனக்கில்லையடி" என்று பசப்பு வார்த்தை பகர்கின்றார்கள்.

க.வி.விக்கினேஸ்வரன் என்ற பெயரைக் கேட்டாலே 'இடியுண்ட நாகம் போல" அச்சமடைகின்றார்கள். பயப் பிராந்தியில் உளறுகிறார்கள். அது ஏன்? அவர் ஒரு பேரறிஞர், சட்ட வல்லுநர், உயர் நீதிமன்றின் முன்னாள் நீதியரசர், சட்ட நுணுக்கங்களை கற்றறிந்த வல்லுநர். இந்த நாட்டின் சர்வாதிகாரப் போக்கை உலக அரங்கில் துலாம்பரமாக எடுத்துச் சொல்லக் கூடிய பேரறிஞர் என்பதால்.

இதுவரை நடந்த தேர்தல் தில்லுமுல்லுகளை எடுத்துப் பார்ப்போமானால் இந்தத் தேர்தல் நீதியான, நேர்மையான தேர்தலாக நடைபெறுமா? என மக்கள் அஞ்சுகிறார்கள். அரச வளங்கள் தவறான விதத்தில் பயன்படுத்தப்படுகின்றன. அரச அதிகாரிகள் தேர்தல் பரப்புரை செய்கின்றார்கள். அரச தரப்புக்கு வாக்களிக்கும்படி அச்சுறுத்துகின்றார்கள். இது பற்றி மனித உரிமை ஆணையாளரும், தேர்தல் ஆணையாளரும் அறிந்துள்ளார்கள். ஆனாலும் அவர்கள் ஏதும் செய்ய முடியாதவர்களாக இருக்கின்றார்கள். வலுவற்ற தன்மை தென்படுகின்றது. சர்வாதிகாரப் போக்குள்ள ஒரு நாட்டில் இதுவெல்லாம் நடைபெறக் கூடியனவே.

வடமாகாணத்திலே தோல்வி நிச்சயம் எனத்தெரிந்தும் எப்படியாவது தேர்தலைக் குழப்பியடிக்க வேண்டுமென்று கங்கணம் கட்டி நிற்கிறார்கள். என்ன நடக்குமோ? ஏது நடக்குமே வென பாமர மக்கள் நெருப்பை மடியிலே கட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் நாட்டைப் பிரிக்கும் செயல் என இனவாதத்துக்கு தூபமிடுகிறார்கள். இன்னுமொரு போருக்கு ஆயத் தமாகுங்கள் எனப் படையினரை உசுப்பிவிடுகின்றார் ஒரு தேரர். பலமுறை இப்படித்தான் ஏதுமறி யாச் சிங்களவர்களையும், காடையர்களையும் உசுப்பேத்தித்தான் இனக்கலவரங்களையும் இரத்தக் களரிகளையும் ஏற்படுத்தினார்கள். தாங்கள் பணம், பதவி ஏனைய சுகபோகங்களையும் அனுபவித்தார்கள்.

*"தன் பங்கு தாவென்ற தம்பியும் - தம்பியோடு*
*இன்புற்று வாழாத் தமையனும்*
*வல்லாண்மை பேசும் மனை*
[illegible]
*சொல்லும் [illegible]"*

என்பது முதுமொழி. ஒரு குடும்பத்திலே பெற்றோரின் பின்னர், குடும்ப பாரத்தை சுமக்க வேண்டிய வன் மூத் தோன். தனது இளைய சகோதரர்களை அன்புடன் அரவணைத்து செல்ல வேண்டியதும் அவனது பொறுப்பு. அதை விடுத்து தன் மனையாளின் சொற்கேட்டு இளைய சகோதரர்களை அடக்கியாண்டு இடர் செய்து, துன்பப்படுத்தினால் பொறுத்துப் பொறுத்துப் பார்த்து இளையவர்கள் கடைசியில் எம்பங்கை தாவென்பார்கள். மூத்தவன் இல்லை என்பான். இது விசாரணை மன்று வரை செல்லும். இதுதான் இன்று இலங்கைத் தீவிலும் நடைபெறுகின்றது.

தமிழர்கள் தனிநாடு கேட்கவில்லை. எங்கள் உரிமைகளையே தாருங்கள் என்கிறார்கள். சுய நிர்ணய உரிமை தமிழர்களின் பிறப்புரிமை. இதனை மாற்றார் தட்டிப் பறிப்பது என்ன நியாயம்? இந்த நாட்டின் சுதந்திரத்துக்காக சிங்களத் தலைவர்களோடு தமிழ்த் தலைவர்களும் சேர்ந்தே போராடினார்கள். இது இன்றைய தலைவர்களுக்குத் தெரியாதா? தெரிந்தும் ஏன் இப்படிச் செய்கிறார்கள்? தமிழர்களுக்கு எதிராக ஏதும் அறியாச் சிங்கள மக்களை ஏவிவிட்டு பேரினவாதிகள் இந்த நாட்டை சீரழித்து தாங்கள் தமது பதவிகளையும் சுகபோகங்களையும் அனுபவிக்கவே எண்ணுகிறார்கள்.

"சமஷ்டி" என்றால் "பிரிவினை வாதம்" என்கிறார்கள் சட்டம் தெரியாத வர்கள். இதனைச் சாதாரண மக்கள் சொன்னால் பரவாயில்லை. சட்டம் தெரிந்த ஆட்சியாளருக்கு இந்தச்சிறு விடயம் கூடவா தெரியவில்லை? பிரிந்த இரு வர்க்கத்தினரை ஒன்று சேர்ப்பதே "சமஷ்டி". "மத்தியிலே கூட்டாட்சி, மாகாண சுயாட்சி" இதனை முதன் முதல் நாடாளுமன்றத்தில் பகிர்ந்தவர் மறைந்த பிரதமர் எஸ். டபியூ. ஆர். டி.பண்டாரநாயக அவர்களாகும்.

இவர் பின்னர் பிரதமராவதற்காக வகுப்புவாதம் பேசத் தலைப்பட்டார். "சிங்களம் மட்டும்" என்ற சட்டத்தைக் கொண்டுவந்தார். அன்றே நாட்டில் பிரிவினைக்கு வித்திட்டார்கள். அது இன்றுவரை தொடர்கின்றது.

வடமாகாண சபைத் தேர்தலிலே தமிழ் மக்கள் இந்த எதேச்சாதிகார ஆட்சியினருக்கு சரியான படிப்பினையைக் கொடுப்பார்கள் என்பது நிச்சயம்.

*"தமிழனென்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா"*

*"தமிழனென்பதாலே வெல்லும் திறம் உண்டு புவி மேலே"*

"எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார், இங்குள்ள தமிழர்கள் ஒன்றாதல் கண்டே" என்பதற்கேற்ப வடமாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு எல்லோருமாக வாக்களித்து, வீட்டுக்கு நேரே புள்ளடி இட்டு அதனை நிரூபிப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரு அபிவிருத்தித் திட்டங்கள் கொழும்பு நகரில் ஆரம்பம்

## கிடைத்தது அமைச்சரவை அனுமதி

கொழும்பு.செப்.17
சூதாட்டங்கள் மற்றும் பந்தயங்களில் ஈடுபடும் வசதிகள், வர்த்தக நிலையத் தொகுதிகள், ஆடம்பர ஹோட்டல்கள் ஆகியவை உள்ளடங்கும் வகையில் இரு அபிவிருத்தித் திட்டங்களை கொழும்பில் ஆரம்பிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இவற்றுள் ஓர் அபிவிருத்தித் திட்டம் வரையறுக்கப்பட்ட 'லேக் லேஷர்' ஹோல்டிங்ஸ் நிறுவனத்தினால் கொழும்பு டி.ஆர்.விஜேவர்த்தன மாவத்தையில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இரண்டாவது திட்டமான ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் அபிவிருத்தித் திட்டம் ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் நிறுவனத்தினால் நீதிபதி அக்பர் மாவத்தையில் ஆரம்பிக்கப் படவுள்ளது.

திட்டமிடப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களின் கீழ் இந்த இரு திட்டங்களுக்கும் சலுகைகளை வழங்க அரசு தீர்மானித்துள்ளது.

இந்தத் திட்டங்கள் தொடர்பாக முதலீடுகள் அபிவிருத்தி அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தனவால் முன் வைக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்துக்கே அமைச்சரவையின் அனுமதி கிடைத்துள்ளது.

கொழும்பு .டி.ஆர்.விஜேவர்த்தன மாவத்தையில் ஆரம்பிக்கப்படும் அபிவிருத்தித் திட்டத்தில் 400 அறைகளைக் கொண்டுள்ள ஹோட்டல் கட்டடத் தொகுதி, கூட்டங்கள் மற்றும் மாநாடுகளை மேற்கொள்ளக் கூடிய மையம், சூது விளையாட்டுக்கள் மற்றும் பந்தயங்களைக் கட்டுவதற்கான வசதிகள் ஆகிய அம்சங்கள் பலவும் உள்ளடங்குகின்றன. அது தொடர்பாக முதலீடு செய்யப்படும் தொகை 350 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும்.

கொழும்பு 02 இல் உள்ள நீதிபதி அக்பர் மாவத்தையில் ஜோன் கீல்ஸ் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தித் திட்டத்தில் ஆடம்பர ஹோட்டல், மாநாட்டு மண்டபம், சூதாட்டங்கள், பந்தயங்களில் ஈடுபடும் வசதிகள், வர்த்தக கட்டடத் தொகுதிகள். ஆடம்பர வீடுகளுடனான கட்டடத் தொகுதி, அலுவலகங்களுக்கான இடவசதிகள் ஆகிய அம்சங்கள் உள்ளடங்குகின்றன.

ஒருங்கிணைந்த உல்லாசப் பயணத் தொழில்துறைகள் செயற்திட்டத்தின் கீழ் இந்த அபிவிருத்தித் திட்டங்கள் ஆரம்பிக்கப்படும் என்று அரசின் ஊடகப் பேச்சாளரான அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (ச-22)

## வெளிநாட்டுப் பல்கலைக்கு அடிக்கல் நடுவார் சாள்ஸ்



கொழும்பு.செப்.17
பொதுநலவாய மாநாட்டுக்காக வருகை தரும் இளவரசர் சாள்ஸ், இலங்கையில் நிறுவப்படவுள்ள முதலாவது வெளிநாட்டுப் பல்கலைக்கழகத்துக்கான அடிக்கல்லை நட்டு வைக்கவுள்ளார்.

இலங்கையில் நிறுவப்படவுள்ள முதல் வெளிநாட்டுப் பல்கலைக்கழகத் திட்டத்துக்கு இலங்கை அரசால் 15 வருட கால வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. மீரிகமையில் உள்ள ஏற்றுமதிகள் திட்ட வலயத்தில் 100 ஏக்கர் நிலப்பரப்பில் அமையும் இப்பல்கலைக் கழகம் இங்கிலாந்து சென்ட்ரல் லன்க்கெஷயர் பல்கலைக் கழகத்தின் கிளையாகும்.

மூலோபாய மார்க்க அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் இந்தப் பல்கலைக்கழகத்தை ஆரம்பிப்பதற்கான ஆயத்தங்களில் அரசு இறங்கியுள்ளது.

இந்த அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 100 மில்லியன் டொலர்கள் வரையில் முதலீடு செய்யப்படவுள்ளதோடு, ஆரம்பிக்கப்படும் இப் பல்கலைக் கழகத்தில் சுமார் 10 ஆயிரம் மாணவர்கள் வரையில் கல்விச் செயற்பாடுகளை மேற்கொள்ள முடியும் என்றும் கூறப்படுகிறது. (ச-22)

## கைதிகளின் பிள்ளைகளுக்கு கிடைத்தது புலமைப்பரிசில்

மட்டக்களப்பு.செப்.17
மட்டக்களப்பு சிறைச்சாலையிலுள்ள கைதிகளின் பிள்ளைகளுக்கு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை புலமைப்பரிசில் வழங் கப்பட்டது.


கைதிகள் தினத்தையொட்டி 'கைதிகளும் மனிதர்களே அவர்களுக்கு உதவியளிப்போம்' என்ற தொனிப் பொருளில் ஒன்றுகூடல் இடம்பெற்றது.

இந்த நிகழ்வு இலங்கை சிறைக் கைதிகள் நலன்புரி சங்கம், சிறைச்சாலைகள் திணைக்களம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

இந்தநிகழ்வில் ஐந்து கைதிகளின் பாடசாலை செல்லும் பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில் வழங்கப்பட்டது. அத்துடன் கைதிகளிடையே நடத்தப்பட்ட கலாசார மற்றும் விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டன.

> கைதிகளிடையே நடத்தப்பட்ட கலாசார மற்றும் விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டன.

மட்டக்களப்பு சிறைச்சாலையின் பிரதம அத்தியட்சகர் ஏ.கித்சிறி பண்டார தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், சிறைச்சாலைகள் மற்றும் புனர்வாழ்வு அமைச்சின் செயலர் ஜி.எஸ்.விதானகே, மட்டக்களப்பு சிறைச்சாலையின் பிரதம ஜெயிலர் இ.மோனராஜ், மட்டக்களப்பு சிறைச்சாலை நலன்புரி சங்கத்தின் தலைவர் எஸ்.அருணகிரிநாதன் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ச)



திருகோணமலை, பெரியகுளம் கோணேஸ்வரா வித்தியாலயத்தில் நிலவி வரும் ஆசிரியர் பற்றாக்குறையைக் கண்டித்துப் பெற்றோர்கள், மாணவர்கள் ஆகியோர் நேற்று திங்கட்கிழமை பாடசாலையின் பிரதான கதவை அடைத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (ச-40)

## அக்கரைப்பற்றில் இராணுவ முகாம்

அம்பாறை.செப்.17
அம்பாறை,அக்கரைப்பற்று, கண்ணகிபுரத்தில் புதிதாக இராணுவ முகாம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இந்த இராணுவ முகாம் அங்குள்ள முருகன் கோயிலுக்கு முன்பாக அமைக்கப்பட்டுள்ளது.

இந்த முகாமை உடனடியாக அகற்றுமாறு அங்குள்ள பிரதேச மக்களும், சமூக ஆர்வலர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பாதுகாப்பு செயலர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு மனு ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஹெரோயின் வைத்திருந்த ஒருவர் கைது



கொழும்பு.செப்.17
நுவரெலிய சாவாஎலிய பிரதேசத்தில் ஹெரோயின் வைத்திருந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மிபிலிமான பொலிஸ் விஷேட அதிரடிப்படையினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புக்களின் போதே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக நுவரெலிய பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார் என்று பொலிஸ் விஷேட அதிரடிப்படையினர் தெரிவித்தனர். (ச)

## சுவாமிமலைப் பகுதிக் காணியும் பௌத்த புனித பூமியாக மாற்றம்

### வர்த்தமானி அறிவித்தல் விரைவில்

திருகோணமலை.செப்.17
திருகோணமலை, தென்னைமரவாடி கிராமத்தின் சுவாமிமலை பகுதியில் உள்ள காணி ஒன்று பௌத்த புனித பூமியாக மாற்றி அமைக்கப்படவுள்ளது

இதற்கான வர்த்தமானி அறிவித்தல் விரைவில் வெளியாகவுள்ளது என்று திருகோணமலை அரச அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதற்காக இந்தப் பகுதியில் இருந்து சுமார் 500 ஏக்கர் காணி அபகரிக் கப்படவுள்ளது.

இந்தக் காணியில் பௌத்த விகாரையும், பௌத்த மத்திய நிலையம் ஒன்றும் அமைக்கப் படவுள்ளன என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. (ச)

## புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறு அடுத்தமாதம்

கொழும்பு.செப்.17
இந்த ஆண்டு நடைபெற்ற 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையின் பெறுபேறுகள் அடுத்த மாதத்தின் முதல் வாரத்தில் வெளியிடப்படும் என்று பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று பரீட்சைகள் ஆணையாளர் டபிள்யூ.எம்.என்.ஜே புஷ்பகுமார தெரிவித்தார்.

இந்த முறை புலமைப்பரிசில் பரீட்சை கடந்த மாதம் 25 ஆம் திகதி நடைபெற்றது. இந்தப் பரீட்சையில் மூன்று லட்சத்து 29 ஆயிரத்து 725 பரீட்சார்த்திகள் தோற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த பரீட்சை இரண்டாயிரத்து 836 பரீட்சை நிலையங்களில் நடைபெற்றது என்று பரீட்சைகள் ஆணையாளர் குறிப்பிட்டார். (ச)

## சிறைக் கைதிகள் தினக் கொடி விநியோகம்

திருகோணமலை.செப்.17
திருகோணமலை சிறைச்சாலையின் ஏற்பாட்டில் திருகோணமலை சிறைச்சாலைக் கைதிகள் நலன்புரி சங்கம் இணைந்து நடத்தும் சிறைக் கைதிகள் தின கொடி விநியோகம் நாளை புதன் கிழமை முற்பகல் 10 மணிக்கு திருகோணமலை நகரசபை குளக்கோட்டன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

திருகோணமலை சிறைச்சாலை அத்தியட்சகர் ஜெ.சி. வீரசிங்க தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பாடசாலை மாணவர்களின் ஆக்கங்கள் மற்றும் சிறைக் கைதிகளின் படைப்புக்கள் காட்சிப்படுத்தப்படும் என்று கூறப்படுகிறது. (ச-40)

## தேசிய அடையாள அட்டைக்கும் காலவரையறை

கொழும்பு.செப்.17
தேசிய அடையாள அட்டைக்கு செல்லுபடியாகும் காலவரையறையொன்றை நிர்ணயிப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

அதற்கமைய 2016 ஆம் ஆண்டில் விநியோகிக்கப்படவுள்ள இலத்திரனியல் ஆள் அடையாள அட்டையில் ஒவ்வொரு வயதுப் பிரிவினருக்கு அமைய செல்லுபடியாகும் காலவரையறையொன்று நிர்ணயிக்கப்படவுள்ளது என்று ஆள்பதிவுத் திணைக்கள




ஆணையாளர் சரத்குமார தெரிவித்தார்.

15 இற்கும் 20 இற்கும் இடைப்பட்ட வயதில் உள்ளோருக்கு அடையாள அட்டையைப் புதுப்பித்துக் கொள்ள வேண்டியுள்ள கால எல்லையைப் 10 ஆண்டுகளாகவும், 25 க்கும் 30 க்கும் இடைப்பட்ட வயதில் உள்ளோருக்கு 15 ஆண்டுகள் என்றவாறும் அடையாள அட்டையைப் புதுப்பித்துக் கொள்வதற்கான கால எல்லை நிர்ணயிக்கப்படவுள்ளது.

45 வயதுக்கு மேற்பட்டோருக்கு செல்லுபடியாகும் கால வரையறையொன்று இல்லாதவாறு அடையாள அட்டையைப் பயன்படுத்திக் கொள்வதற்கு வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது என்று அவர் கூறினார். (ச-22)

## மாணவியின் சடலம் மீட்பு



மட்டக்களப்பு.செப்.17
மட்டக்களப்பு.தன்னாமுனைப் பகுதியிலுள்ள வீடொன்றிலிருந்து பாடசாலை மாணவி ஒருவரின் சடலம் ஞாயிற்றுக் கிழமை மாலை மீட்கப்பட்டுள்ளது என்று ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

மைலம்பாவெளி விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் 10ஆம் தரத்தில் கல்வி கற்கும் யோகநாதன் ரசிகலா (வயது 16) என்பவரின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணையை ஏறாவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனகராயன்குளத்தில் இன்று கூட்டமைப்பின் பரப்புரை

மாங்குளம், செப்.17
வடமாகாண சபைத் தேர்தலுக்கான பரப்புரைக் கூட்டம் இன்று கனகராயன் குளத்தில் நடைபெறவுள்ளது.
வவுனியா வடக்கு பிரதேச சபை உறுப்பினர் ஜெ.ஜெயரூபன் தலைமையில் கனகராயன்குளம் சந்தைக்கு அருகில் பிற்பகல் 2 மணிக்கு கூட்டம் இடம்பெறும்.
கூட்டமைப்பின் முதன்மை வேட்பாளர் க.வி.விக்னேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான ந.சிவசக்தி ஆனந்தன், ஆர்.சம்பந்தன், மாவை. சோ.சேனாதிராசா, க.சுரேஸ் பிரேமச்சந்திரன், அ.செல்வம் அடைக்கல நாதன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான வீ.ஆனந்த சங்கரி, தர்மலிங்கம் சித்தார்த்தன் ஆகியோரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் இதில் கலந்து கொள்ளவுள்ளனர்.
இந்த நிகழ்வில் வவுனியா மாவட்ட பொது அமைப்புக்கள், பொதுமக்கள், தொழிலாளர்கள், புத்திஜீவிகள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு வவுனியா மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் குழு அறிவித்துள்ளது. (வ-422,402)

# சிறுநீரக நோய்க்கான கொடுப்பனவு

வவுனியா, செப். 17
வடமாகாண சமூக சேவைகள் திணைக்களத்தால் வழங்கப்பட்ட கீழ்வரும் பயனாளிகளுக்கான சிறுநீரக நோய்க்குரிய கொடுப்பனவுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. சம்பந்தப்பட்டவர்கள் வவுனியாபிரதேசசெயலக சமூக சேவை உத்தியோகத்தர் திருமதி விமலேந்திரனைத் தொடர்பு கொண்டு உரிய கொடுப்பனவுகளை பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.
இரத்தினகிரி பொன்னம்பலம் (சமய புரம், வவுனியா), கமலா நடராசா (தவசிகுளம், வவுனியா), தாமோதரம்பிள்ளை மகேஸ்வரன் ( அரச முறிப்பு, ஓமந்தை), வேலாயுதம் நவலட்சுமி (சுந்தரபுரம், சாஸ்திரி கூளாங்குளம், வவுனியா), இராமசாமி நாராயணசாமி (மகாறம் பைக்குளம், வவுனியா), சின்னத்தம்பி தங்கராசா (ஆர்.டி. எஸ். வீதி, பட்டைக்காடு, வவுனியா), முனியன் இராமையா (ஆசிகுளம், வவுனியா),சின்னையாகிருஸ்ணபிள்ளை (பூந்தோட்டம், வவுனியா), அந்தோனி மேரியக் கோவாள் (நொச்சிமோட்டை, ஓமந்தை, வவுனியா), திரிலோக சுந்தரம் இராமதாஸ் (பண்டாரிக்குளம் வவுனியா) (க-402)

உயர் நீதிமன்றில் வழக்காடு மொழியாகத் தமிழ்:

# சட்டம் கொண்டு வருமாறு வலியுறுத்தி சென்னை, மதுரை வழக்கறிஞர் உண்ணாநோன்பு

சென்னை, செப்.17
தமிழ் மொழியை உயர் நீதிமன்றத்தில் வழக்காடு மொழியாக சட்டம் கொண்டு வரப்படவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து வழக்கறிஞர்கள் சாகும் வரை உண்ணா விரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.
சென்னை மற்றும் மதுரை உயர்நீதிமன்றத்தில் தமிழ் மொழியை வழக்காடும் மொழியாகப் பயன்படுத்த மறுக்கப்பட்டு வருகிறது. அதை அடுத்து சென்னை, மதுரை நீதிமன்றங்களைச் சேர்ந்த வழக் கறிஞர்கள் நேற்று முதல் சாகும் வரை உண்ணா விரதப் போராட்டத்தில் குதித்துள்ளனர்.
தங்களது கோரிக்கையை ஏற்று அதனை சட்டமுறையாக்கும் வரையில் போராட்டம் நிறுத்தப்பட மாட்டாது என்றும் போராட்டக்காரர்கள் தெரிவித்துள்ளனர். (ஒ-14)

# பளையில் 5 வீடுகளில் திருடர்கள் கைவரிசை



பளை, செப்.17
பளைப் பகுதியில் அடுத்தடுத்து இரு தினங்கள் ஐந்து வீடுகளில் புகுந்த திருடர்கள் 30 பவுண் தங்க நகைகளையும் பெருமளவு பணத்தையும் திருடிச் சென்றுள்ளனர்.
பெரிய பளை, தர்மக்கேணி ஆகிய பிரிவுகளில் திருட்டு இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. கடந்த 12 ஆம் திகதி இரவு பளை, பெரிய பளைப் பகுதியில் மூன்று வீடுகளிலும் 13 ஆம் திகதி இரவு பளை தர்மக் கேணிப் பகுதியில் இரண்டு வீடுகளிலும் திருட்டுக்கள் இடம்பெற்றுள்ளன.
பெரிய பளையில் ஒரு வீட்டில் தாலிக்கொடி, சங்கிலி, காப்பு போன்றவற்றையும் மற்றொரு வீட்டில் 4 பவுண் தங்கச் சங்கிலியையும் மூன்றாவது வீட்டில் 45 ஆயிரம் ரூபா பணமும் திருடப்பட்டுள்ளது. மறுநாள் இரவு தர்மக்கேணிப் பகுதியில் ஒரு வீட்டில் 9 பவுண் தங்க நகைகளும் மற்றொரு வீட்டில் ஆறு பவுண் தங்க நகைகளும் திருட்டுப்போயுள்ளன.
ஜனாதிபதியின் வருகையையொட்டு பளைப் பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள் கிளிநொச்சிக்கு சென்றதால் இரு தினங்களும் இரவு ரோந்துச் சேவை இடம்பெறாததால் இதனைப் பயன்படுத்தி திரு டர்கள் தமது கை வரிசையைக் காட்டியுள்ளதாகவும், திருட்டுக்கள் தொடர்பாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.
பளை, பெரிய பளையில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவங்கள் தொடர்பாக பொலிஸாரால் சந்தேகத்தின் பேரில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், மோப்ப நாய்களின் உதவியுடன் திருடர்களை கைது செய்யும் நடவடிக்கைகளில் பொலிஸார் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவித்தனர். (வ-9)

மத்திய அரசின் அலட்சியப் போக்கை கண்டித்து

# ரயில் மறியல் போராட்டத்தில் குதிக்கின்றனர் தமிழக மீனவர்

இராமநாதபுரம், செப். 17
தமிழக மீனவர்கள் மீது அக்கறை செலுத்தாத தமிழக மத்திய அரசுக்கு எதிராக நாளைமறுதினம் புதன்கிழமை ரயில் மறியல் போராட்டத்தை நடத்த தமிழக மீனவர்கள் முடிவு செய்துள்ளனர்.
இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்ட பாம்பன், இராமேஸ்வரம் மீனவர்கள் இதுவரை விடுவிக்கப்படாத நிலையில் மீனவர்களை விடுவிக்கக்கோரி இராமேஸ்வரம் மீனவர்கள் கடந்த 10 நாள்களாக தொடர் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். மீனவர்களது வேலைநிறுத்தப் போராட்டம் குறித்து மத்திய அரசு கண்டு கொள்ளாததையடுத்து ரயில் மறியலில் ஈடுபட மீனவ அமைப்புக்கள் தீர்மானித்துள்ளன. (ஒ-14)

# கட்டாக்காலி மாடுகளால் விபத்துக்களை எதிர்கொள்ளும் வவுனியா-மன்னார் வீதி

நெளுக்குளம், செப்.17
வவுனியா-மன்னார் வீதியில் இரவு வேளைகளில் கட்டாக் காலிகளாக அலையும் மாடுகள் படுத்துறங்குவதால் விபத்துக்கள் ஏற்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
வவுனியா-மன்னார் வீதியிலுள்ள நான்காம் கட்டையடி, நெளுக்குளம், பூவரசங்குளம் ஆகிய பகுதிகளிலேயே கட்டாக் காலி மாடுகள் வீதிகளில் படுத்து உறங்குவதால் இரவு நேரத்தில் பயணம் செய்பவர்கள் மாடுகளில் மோதுண்டு விபத்துக்கள் ஏற்படுவதாக இந்த வீதியில் பயணிக்கும் பயணிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.
மேலும் மாடுகளின் எச்சங்கள் வீதிகளில் காணப்படுவதால் வாகனங்கள் வேகமாகச் செல்லும்போது அவை சிதறுவதுடன் பாடசாலைக்குச் செல்லும் மாணவர்கள் மற்றும் பொதுமக்களின் உடைகளை அழுக்காக்குவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.
இதனால் மாணவர்கள் இடைநடுவில் வீடு திரும்பும் நிலையும் ஏற்படுகின்றது. அத்துடன் பகல் வேளையில் பஸ் தரிப்பிடங்களிலும் இந்த மாடுகள் தங்கி நிற்பதால் பஸ்ஸை எதிர்பார்த்துக் காத்திருக்கும் பயணிகள் வெளியில் நிற்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.
அண்மையில் வவுனியா நகர சபைப் பகுதியில் இவ்வாறான கட்டாக்காலி மாடுகளைக் கட்டுப்படுத்துவதற்கு நகர சபையினர் நடவடிக்கை எடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (க-402)

# விபத்துக்களில் 8 பேர் படுகாயம்

யாழ்ப்பாணம், செப்.17
யாழ்ப்பாணத்தில் வெவ்வேறு இடங்களில் இடம்பெற்ற விபத்துகளில் 8 பேர் படுகாயமடைந்து சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
மோட்டார் சைக்கிளில் சென்றவர்கள் வேகக் கட்டுப்பாட்டை இழந்தும், வீதியில் பரவப்பட்டிருந்த கற்களின் மீது பயணித்து சறுக்கி விழுந்தும், மது போதையில் சென்று நிலை தடுமாறி விழுந்தும், வாகன விபத்திலுமாக அவர் கள் படுகாயமடைந்துள்ளனர். நாவற்குழியில் மோட்டார் சைக்கிளில் சென்ற நபர் வேகக் கட்டுப்பாட்டை இழந்து நிலை தடுமாறி விபத்துக்குள்ளானார். அதே இடத்தைச் சேர்ந்த அ.றெஜினோல்ட் (வயது-36) என்பவரே இவ்வாறு காயமடைந்தார்.
இதுதவிர சுன்னாகத்தில் 3 பேரும், கோப்பாய் இராச வீதியில் பொலிஸ் நிலையம் முன்பாக ஒருவரும், ஊர்காவற்றுறையில் இருவருமாக 8 பேரும் படுகாயமடைந்துள்ளனர். (வ-4)

# கல்விக் கண்காட்சி

யாழ்ப்பாணம், செப்.17
ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய இடைநிலைப் பிரிவின் கல்விக் கண்காட்சி இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
பாடசாலை அதிபர் ச.சத்தியவரதன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கோப்பாய் வலயக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஏ.எஸ் சற்குணராஜா கலந்து கொள்வார். (ந)

Mega
புலமைப்பரிசில் திட்டத்தில் பங்குபற்றி வெற்றிபெற்ற மாணவர்களின் பதிவுகள் தற்பொழுது நடைபெறுகின்றன. இதுவரை பதிவுகளை மேற்கொள்ளாதவர்கள் குறிப்பிட்ட இட ஒதுக்கீடுகளே உள்ளதால் விரைவாக பதிவுகளை மேற்கொண்டு புதிய பிரிவுகளில் இணையுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

CSC-ASIAN
COMPUTER EDUCATION
AN ISO 9001 : 2008 CERTIFIED TRAINING INSTITUTION

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி |
|---|---|---|
| 021 2225677 | 021 2262399 | 021 2270267 |

| கிளிநொச்சி | வவுனியா |
|---|---|
| 021 2283925 | 024 2226050 |

(c/12464) (3.6)

## தவறிவிட்டது
கச்சேரியடி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சிங்கராஜா மயூரன் என்பவருடைய சாரதி அனுமதிப் பத்திரம், Job Card மற்றும் முக்கிய ஆவணங்கள் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு: 077 627 2190 (31840) (7.6.3)

## வேலையாள்கள் தேவை
யாழ் நகரில் இயங்கிக் கொண்டிருக்கும் பிரபல வர்த்தக நிறுவனத்திற்கு யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் பணிபுரிவதற்கு வேலையாள்கள் தேவை.
* அனுபவமுள்ள சிட்டை எழுதுநர்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு: 077 260 6684 (31843) (7.6.3)

## Personal Class
General and Spoken English
அனுபவம் வாய்ந்த பட்டதாரி ஆசிரியர் இலகுவான, கவர்ச்சிகரமான கற்பித்தல் குறுகிய காலத்தில் நிறைவான அடைவைப் பெற.
தொடர்பு: 077 930 9740 (31838) (7.6.3)

அகில இலங்கை
யாழ். நல்லூர் நாவலர் வீதி
சீரடி சாயி மந்திரின் சப்பைரத உற்சவமும், தேர்த் திருவிழாவும்
* சப்பைரத உற்சவம் இன்று (17.09.2013) செவ்வாய்க்கிழமை
மாலை 5.30 மணி – வசந்த மண்டபப் பூஜை
மாலை 6.30 மணி – சப்பரத்தில் ஆரோகணித்தல்
(பவனி செல்லும் பாதை
- நாவலர் வீதி - கச்சேரி நல்லூர் வீதி -
நக்கா வீதி - கோவில் வீதி - ஆலயம்)
* தேர்த் திருவிழா நாளை (18.09.2013) புதன்கிழமை
மாலை 3.30 மணி – வசந்த மண்டபப் பூஜை
மாலை 4.10 மணி – தேரில் ஆரோகணித்தல்
(மருதடி வீதி - நக்கா வீதி - இராசாவின் தோட்ட வீதி - ஆலயம்)
* தீர்த்த உற்சவம் (19.09.2013) வியாழக்கிழமை மாலை 4 மணி
* அகில இலங்கையில் முதன் முறையாக சப்பைரத உற்சவம் பாபாவுக்கு நடைபெறுகிறது. கடந்த வருடம் தேர் நடைபெற்றது.
* பெண்கள் இவ்வாலயத்தில் சுவாமி காவ முடியும்.



சீரடி சாயி மந்திர்
314, நாவலர் வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.
T.P : 077 722 2568
பா. ராகவன் (ஸ்தாபகர் உபயகாரர்கள்)
(31835) (7.6.3)

1958 லிருந்து
பழுது பார்த்தல்



STILL & VIDEO
* அசல் உதிரிபாகங்கள்
தொ.பே : 011-2577877
(c/12016) (3.6)

OXFAM
Australia

Finance & Administration Assistant –North
Fixed Term – non renewable

- Job ref: OAU/VAV/SS002
- Initially based in Vavuniya

This post is to assist the Finance and Administration Officer in the regional office with financial and logistics management function specifically provide management information to comply with agency standards & ensure that controls and systems are in place.

*Experience Required*: The successful candidate should be an AAT passed finalist/or equivalent with minimum 3 years work experience in the same sector. Should have a working knowledge of English and good command of Tamil. Sinhala language will be an advantage. Possess good computer literacy, particularly in the use of MS Office, computerized accounts packages and outlook e-mail.

This position will initially be based in Vavuniya. Applicants should be flexible and willing to travel and work in & out of other locations in the North and other field offices in the country. Initially for three (Oct-Dec 2013) months and thereafter a 6 months (Jan-June 2014) contract will be offered to successful candidates and no possibility of extension.

**How to apply:** Please contact jobs.lk@oxfam.org.au to obtain job description. You may also collect the relevant information at North program office at No. 45/10, Jaffna Road, Vavuniya Ph: 024 2222322. You are required to email the CV with covering letter addressing the relevant selection criteria, references and contact telephone numbers to recruitment.lk@oxfam.org.au or Human Resource Coordinator, Oxfam Australia, Sri Lanka Field Office, 15, Rohini Road, Colombo 6, on or before **22 September 2013**.

***Only shortlisted applicants will be contacted***

**Oxfam Australia is working for a just world without poverty.**

(32515)(3.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள்

### உங்களுக்கு எப்படி?

**மேடம்:** முன்கோபம், பதற்றம் விலகும். எடுத்த காரியங்களை முடிக்கமுடியாமல் அவதிப்பட்ட நிலை மாறும். அயல் வீட்டாரின் அன்புத்தொல்லைகள் விலகும்.

**இடபம்:** மனதில் பட்டதை பளிச்சென்று பேசி அனைவரையும் ஆச்சரியப்படுத்துவீர்கள். ஆடம் பரச்செலவுகளைக் குறைப்பீர்கள். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். வெளிவட்டாரத்தொடர்பு அதிகரிக்கும்.

**மிதுனம்:** நினைத்த வேகத்தில் சில வேலைகளை முடிக்க முடியாமல் தடை, தாமதங்கள் ஏற்படும். சொன்ன சொல்லைக் காப்பாற்ற வேண்டுமே என்ற பயம் வரும். யாரை நம்புவது என்கிற மனக்குழப்பத்துக்கு ஆளாவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் உங்கள் பெயர் கெடாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

**கடகம்:** உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக் கப்படுவீர்கள். அயல் வீட்டாரின் அன்புத் தொல்லைகள் விலகும்.

**சிங்கம்:** அடிமனதில் இருந்த பயம் விலகும். துணிச்சலுடன் சில முடிவுகளை எடுப்பீர்கள். அலைச்சல் தந்த வேலைகளை உடனே முடிப்பீர்கள். வெளிவட்டாரம் மகிழ்ச்சி தரும்.

**கன்னி:** உங்களின் குறிக்கோளை எட்டிப் பிடிக்க முயற்சிப்பீர்கள். அரசியல்வாதிகளின் சந்திப்பு கிடைக்கும். வேற்று மதத்தினரால் உதவி கிடைக்கும்.

**நாளை**

புரட்டாதி-02 புதன்கிழமை 18.09.2013
திதி: சதுர்த்தசி மு.இ. 07.07 வரை
நட்சத்திரம்: சதயம் மு.இ.08.18 வரை
சுபநேரம்: 04.33 - 06.03 வரை
இராகுகாலம்: 12.03 - 01.33 வரை

**துலாம்:** அதிரடித் திட்டங்களைத் தீட்டுவீர்கள். உங்களைத் தேடிவந்து சிலர் உதவி கேட்பார்கள். ஆன்மிகவாதிகளின் சந்திப்பு நிகழும். உத்தி யோகத்தில் மதிக்கப்படுவீர்கள். சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். வெளியூர் பயணங்களால் ஆதாயம் உண்டு.

**விருச்சிகம்:** அதிகாரபூர்வமாகச் செயற்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். ஆன்மீகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். உத்தியோகத்தில் மேலதி காரியின் பாராட்டைப் பெறுவீர்கள். ஆடம்பரச் செலவுகளைத் தவிர்ப்பீர்கள்.

**தனுசு:** பளிச்சென்று பேசி எல்லோரையும் கவருவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். பிரபலங்களின் சந்திப்பு நிகழும். அரச காரியங்களில் அனுகூலமான நிலை காணப்படும்.

**மகரம்:** இனந்தெரியாத சின்ன சின்ன கவலைகள் வந்துப் போகும். உங்கள் மீது சிலர் வீண்பழி சுமத்துவார்கள். உங்களை நீங்களே குறைத்து மதிப்பிடாதீர்கள். உத்தியோகத்தில் சின்னச் சின்ன இடர்பாடுகளைச் சமாளிக்க வேண்டியிருக்கும்.

**கும்பம்:** தடைகளைத் தாண்டி முன்னேறு வீர்கள். எதிர்பாராத் திடீர் பயணங்களால் அலைச்சல் அதிகரிக்கும். உறவினர், நண் பர்களுடன் மனத்தாங்கல் வரும். உத்தியோகத் தில் மேலதிகாரியுடன் மோதல்கள் ஏற்படலாம்.

**மீனம்:** தைரியமான முடிவுகளை எடுத்து வெற்றி காண்பீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப் படுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களுக்கு மத்தியில் மதிக்கப்படுவீர்கள். நண்பர்களின் சந்திப்பு நிகழும்.

# சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 5 | | | | | | | |
| | 4 | 2 | | 5 | 1 | | | 3 |
| 3 | | 7 | | | 4 | | 6 | 8 |
| | 8 | | 1 | 6 | | | | |
| 7 | 6 | | 2 | | 3 | | 8 | 4 |
| | | | | 4 | 8 | | 5 | |
| 2 | 9 | | 5 | | | 8 | | 7 |
| 6 | | | 4 | 1 | | 9 | 3 | |
| | | | | | | | 2 | 1 |


### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 6 | 5 | 9 | 3 | 1 | 7 | 8 | 2 |
| 7 | 2 | 8 | 4 | 6 | 5 | 9 | 3 | 1 |
| 9 | 3 | 1 | 2 | 8 | 7 | 6 | 4 | 5 |
| 1 | 5 | 6 | 3 | 9 | 2 | 4 | 7 | 8 |
| 2 | 9 | 4 | 7 | 5 | 8 | 1 | 6 | 3 |
| 8 | 7 | 3 | 1 | 4 | 6 | 5 | 2 | 9 |
| 5 | 1 | 2 | 8 | 7 | 4 | 3 | 9 | 6 |
| 6 | 4 | 9 | 5 | 2 | 3 | 8 | 1 | 7 |
| 3 | 8 | 7 | 6 | 1 | 9 | 2 | 5 | 4 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண் களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண் டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலி லும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள் ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என் பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவ லாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# மரண அறிவித்தல்

## இராசரத்தினம் கோகுலன் [கோபு]



ஆதிமைலிட்டியைப் பிறப்பிடமாகவும், வவுனியாவில் வசித்து வந்தவரும் பிரான்சை வதிவிடமாகவும் கொண்ட இராசரத்தினம் கோகுலன் (14.09.2013) சனிக்கிழமை இந்தியாவில் காலமானார்.

அன்னார் இராசரத்தினம் (A.K.R. வாகன உரிமையாளர்)-இராஜேஸ்வரி தம்பதியரின் அன்புப் புதல்வனும், இராகுலன் (பாபு-பிரான்ஸ்), தமிழினி (ஜேர்மனி), வேணிலன் (வேணு-பிரான்ஸ்), நிரோசினி (வவுனியா) ஆகியோரின் பாசமிகு சகோ தரனும், சிவசுதன் (சுதன்-பிரான்ஸ்), சிவதீபன் (தீபன்- பிரான்ஸ்), சிவாஜினி (பவி-பிரான்ஸ்), சாரங்கன் (பிரான்ஸ்), சுஜன் (யாழ்ப் பாணம்), சுவபவானி, பார்த்தீபன், ஜீவகலா, கோமதி, ஜெகன், பானுமதி, யசிந்தன், சுகந்தினி, ஜேந்தினி, சுதர்சன், நிஷாந்தினி, பவனீதன், கோபிகா ஆகியோரின் உடன்பிறவா சகோதரனும், சுப்பிரமணியம், சிவலிங்கம், நடராஜா, சின்னமணி, துரைசிங்கம் (கிளியர்-சிங்கம் மில் உரிமையாளர்), காலஞ்சென்ற ஜெகதீஸ்வரி மற்றும் வசந்தராணி (பாப்பா), அம்பிகைபாலன் ஆகியோரின் பெறாமகனும், குமாரதாஸ் (குமார்-சுவிஸ்), காலஞ்சென்ற சிவதாஸ் மற்றும் கமலாம்பிகை (சுவிஸ்) ஆகியோரின் மருமகனும், தவராணி (பிரான்ஸ்), காயத்திரி (காயா-பிரான்ஸ்), நீவிகா(பிரான்ஸ்), கேசவன் (பிரபு-ஜேர்மனி), இராஜேஸ்வரன்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், அஸ்வின், அக்ஷயன், அனுஷ்கா, யனுஷா (மிலா) ஆகியோரின் அன்பு சித்தப்பா வும், அஸ்விதா, ஆரூஸ், ஆகாஸ், ஆரூஜன், அகர்ணன் ஆகியோரின் அன்பு மாமனாரும், அபிநயன், அதிசயன் ஆகியோரின் அன்பு மச்சானும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இந்தியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ஐயனார் வீதி,**
**மல்லாகம்.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**0091 994 166 7124**

(31845) (7.6.3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அச்சுவேலி வைத்தியசாலையில் இருபாலாருக்குமான விடுதி அவசியம்

## உலக வங்கியின் இலங்கை வதிவிடப் பிரதிநிதியிடம் கோரிக்கை

அச்சுவேலி, செப்.17
அச்சுவேலி பிரதேச வைத்திய சாலைக்கு ஆண்-பெண்களுக்கான புதிய மாடிக் கட்டட விடுதித் தொகுதியை அமைத்துத் தருமாறு உலக வங்கியின் இலங்கை வதிவிடப் பிரதிநிதி பிரான்சிஸ் குளோறிடாலிடம் வைத்தியசாலை நலன்புரிச் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

" வைத்தியசாலையில் தற் போது பாவனையில் உள்ள ஆண்-பெண்களுக்கான வைத் திய விடுதி 70 வருடங்களுக்கு முற்பட்டது.

அச்சுவேலி பிரதேச வைத்திய சாலை நலன்புரிச் சங்கத்தின் போஷகரும் வலி.கிழக்கு பிரதேச செயலருமான எம்.பிரதீபனின் ஏற்பாட்டில் உலக வங்கியின் இலங்கை வதிவிடப் பிரதிநிதி பிரதேச வைத்தியசாலைக்கு நேரடியாகப் பயணம் செய்து வைத்திய சாலையின் வள வசதிகளை நேரடியாகப் பார்வையிட்டு விவரங்களைக் கேட்டறிந்தார்.

வைத்தியசாலையில் தற் போது பாவனையில் உள்ள ஆண்-பெண்களுக்கான வைத்திய விடுதி 70 வருடங்களுக்கு முற்பட்டது. பழைமை அடைந்து நோயாளரின் பாவனைக்கு ஏற்றவகையில் இல்லை. இதனை கருத்தில் கொண்டு வைத்திய சாலைக்கு நோயாளர் விடுதித் தொகுதி அமைத்துத் தருமாறு கோரிக்கை விடுத்தனர். (வ-11)

# நாட்டுக்கு இலங்கையர்களை அழைத்துவர விசேட திட்டம்

கொழும்பு, செப்.17
இந்தியாவில் தங்கியுள்ள இலங்கையர்களை மீண்டும் நாட்டுக்கு அழைத்துவருவதற்கான விசேட திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று இந்தியாவுக்கான இலங்கைத் தூதர் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.
மீண்டும் இலங்கைக்கு வருகை தருவதற்கு விரும்பும் இலங்கையர்களுக்கு சென்னையிலுள்ள பிரதித் தூதர் அலுவலகத்தின் ஊடாக அனைத்து வசதிகளும் செய்துகொடுக்கப்படும் என்று இந்தியாவுக்கான இலங்கைத் தூதர் பிரசாத் காரியவசம் தெரிவித்தார்.
இந்தியாவிலுள்ள இலங்கையர்கள் நாடு திரும்புவதில் எவ்வித பிரச்சினைகளும் காணப்படவில்லை என்று அவர் சுட்டிக்காட்டினார்.
இந்த நடவடிக்கைக்கு ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான தூதரகம் நிதியுதவி வழங்கவுள்ளது என்று அவர் கூறினார். (ச)

# ஊழியருக்கு ஒன்றரை நாள் விடுமுறை வழுங்கல் கட்டாயம்

## தொழில் திணைக்கள பிரதி ஆணையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப்.17
வர்த்தக நிலையங்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களில் பணி புரியும் ஊழியர்களுக்கு வாரத்தில் ஒன்றரை நாள் விடுமுறை வழங்கப்பட வேண்டியது கட்டாயமாகும். இது தொழில் சட்டத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது என்று வட மாகாண தொழில் திணைக்கள பிரதி ஆணையாளர் கே.கனகேஸ்வரன் தெரிவித்தார்.
தொழில் திணைக்களத்தால் நடைமுறைப்படுத்தப்படும் ஊழியர்களுக்கான விடுமுறை தொடர்பாக கேட்டபோது அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-
வர்த்தக நிலையங்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களில் பணி புரியும் ஊழியர்களுக்கு தொழில் தருநர்கள் தமது நிறுவனங்களின் வசதிக்கு ஏற்ப வாரத்தில் ஒன்றரை நாள் விடுமுறையை வழங்க வேண்டியது சட்டமாகும். ஞாயிற்றுக் கிழமைகளில் மட்டும் தான் விடுமுறை வழங்கப்பட வேண்டியது அவசியம் இல்லை. தொழில் தருநர்கள் தமது தொழில் நிலையங்களில் வேலைத் திட்டங்களுக்கு ஏற்ப சாதகமாக ஊழியர்களுக்கு விடுமுறை வழங்கலாம். இந்த விதிமுறை அதிகமாக நடை முறையில் உள்ளது.
ஊழியர்களும் தமது தேவைக்கு ஏற்ப வாரத்தில் ஒன்றரை நாள் விடுமுறையைப் பெற்றுக் கொள்ள முடியும். விடுமுறை தினங்களில் பணி புரியும் ஊழியர்களுக்கு மேலதிகமாக சம்பளக் கொடுப்பனவுகள் தொழில் தருனர்கள் வழங்க வேண்டும்- என்றார். (வ-14)

## கோட்டைரயில் நிலையத்தில் கமெரா

பயணிகளின் பாதுகாப்புக்காக கொழும்பு, கோட்டை ரயில் நிலையத்தில் பாதுகாப்பு கமெராக்களைப் பொருத்த ரயில் திணைக்களம் தீர்மானித்துள்ளது. இந்தப் பாதுகாப்பு கமெராக்கள் அடுத்த மாதத்துக்குள் பொருத்தப்படவுள்ளன. அதனூடாக ரயில் நிலையத்தில் நடைபெறும் அனைத்து நடவடிக்கைகளையும் ரயில் கட்டுப்பாட்டு அறையின் அதிகாரிகள் கண்காணிப்பர் (ச)

## முன்பள்ளி மாணவருக்கு மாறுவேடப் போட்டி

நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட முன்பள்ளி மாணவர்களுக்கான மாறுவேடப் போட்டி எதிர் வரும் ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதி கோண்டாவில் பொது நூலகத்தில் நடைபெறவுள்ளது. ஆர்வமுடைய முன் பள்ளிகளின் ஆசிரியர்கள் பங்குபற்றும் மாணவர்கள் தொடர்பான விவரங்களை நூலகத்தில் பதிவு செய்யலாம். (வ-14)


# மரண அறிவித்தல்

## செல்லப்பா நல்லையா



உரும்பிராய் வடக்கை பிறப்பிடமாவும் பலாலி கிழக்கில் வசித்தவரும் தற்போது டச்சு றோட் உடுவில் மேற்கில் வசித்தவருமாகிய செல்லப்பா நல்லையா நேற்று (16.09.2103) திங்கட் கிழமை காலமாகிவிட்டார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா- தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற தங்கமுத்துவின் பாசமிகு கணவரும் செல்லம், தங்கம் ஆகியோரின் அன்புத் தந்தையும் தில்லைத்தாண்டவர் (தில்லை), நனபாலசிங்கம் ஆகியோரின மாமனாரும் சிவபாலசுப்பிரமணியம் மங்களேஸ்வரன், திலீபன், ராஜேஸ்வரி, சிற்சபேசன், கலியுகவரதன், வளர்மதி, வரதராஜன் ஆகியயோரின் பேரனும் கீர்த்திகா, திலக்சிகா, சாருஜன், துஷாந்த், கஜந்த் பவஷாயினி, சந்தோஷ், வர்ஷாந்த், அபிசாயினி, தனுப்பிரியன், அபிசனா ஆகியோரின் பூட்டனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.09.2013) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு உடுவில் மேற்கில் அவரது வதிவிடத்தில் நடைபெற்று பூதவுடல் பூவோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படவுள்ளது.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.
தகவல்:-மருமகன்.
தில்லைத்தாண்டவர் (தில்லை)
டச்சுறோட், உடுவில் மேற்கு
சுன்னாகம்.

# மரண அறிவித்தல்

## வீ.பொ.சுப்பிரமணியம் சிவகுமார்



மீசாலை மேற்கு, காளிகோயில் வீதியைப் பிறப்பிட மாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வீ.பொ. சுப்பிர மணியம் சிவகுமார் நேற்று(16.09.2013) திங்கட் கிழமை காலமானார்.
அன்னார் வீ.பொ. சுப்பிரமணியம்-காசிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், அரியமலரின்(தேவி) அன்புக் கணவரும், சதீஸ்குமார், விஜிதகுமார் (பிரான்ஸ்), சகிலா(கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிறிரஞ்சனா, நிறோ, சிவகுமார் ஆகியோரின் அன்பு மாமனும், சுலக்சன், ஜெனார்த்தனி, கிரிஷாந், வினோதினி, கிஷாந்தினி(நிரு) ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற புனிதவதி(மணியம்மா), மல்லிகாதேவி, றஞ்சினிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(17.09.2013) செவ்வாய்க் கிழமை மு.ப. 11.00மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.
தகவல்:
மீசாலை மேற்கு,
காளிகோயில்
வீதி, மீசாலை.
குடும்பத்தினர்.
077 6171550

## யாழ் மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்

# கண்ணீர் காணிக்கை



எமது சங்கத்தின் நல்லூர்க் கிளை அங்கத்தவரும் கணபதி பேக்கரி உரிமையாளரும் ஆகிய திருமதி வசந்தகுமாரி தவேந்திரநாதன் அவர்களின் அன்புக் கணவரும் நல்லூர்க் கிளை அங்கத்தவரும் சதா பேக்கரி உரிமையாளருமாகிய கோபாலசுந்தரம் இராஜேஸ்வரி (சாந்தா) அவர்களின் அன்புச் சகோதரருமாகிய

### செல்லக்குட்டி தவேந்திரநாதன்

(கணபதி பேக்கரி உரிமையாளர்)

அவர்களின் திடீர் இழப்பால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கு கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தி பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
559, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(12448)
(17.16.14)
தலைவர், செயலாளர், அங்கத்தவர்கள்,
பணியாளர்கள்.

# 31 ஆம் நாள் நினைவலைகள்

மண்ணில்
09 . 09 . 1956



விண்ணில்
18 . 08 . 2013

அமரர்

## சீனியப்பா செல்லத்துரை இளமுருகன்

மாலைப் பொழுதில் இதயத்தில் இறுக்கமாக வந்த செய்தி!
மனமதில் தைரியமின்றி உண்மையை உணரவும் நாதியின்றி!
மரணத்தை கண்டுநாம் மௌனித்த கணங்கள் அவை!
இளமுருகன் என்று வாழ்ந்திட்ட எம் தெய்வமே!— எம்
இனிமைகளை இருளாக்கி விட்டு இறைபதம் கண்டும்!
எம்முடன் வாழ்ந்திடும் தந்தையே! உள்ளத்து உதிரமே!
உங்கள் ஆத்ம சாந்திக்காய் பிரார்த்திக்கும்.
மில்லேன், சண்டிலிப்பாய் மேற்கு
சண்டிலிப்பாய்
சீ 12470
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## கந்தையா நடராசா



பிடாரி கோவிலடி கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், வவுனியா இறம்பைக் குளத்தை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா நடராசா நேற்று (16.09.2013) திங்கட்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா- பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், விஜயகுமாரின் அன்புச் சகோதரனும், நாகம் மாவின் அன்பு மைத்துனரும், மகேஸ் குமார், உசாமகேஸ், மகேஸ்கண்ணா, சிவராஜினி, ரமணன், சர்மிலா, ரஜனிகாந்த், சசிகாந், வைலஜா, கிந்துஜா ஆகியோரின் அன்புச் பெரியப் பாவும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரிமைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.
இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.
447/5, கொறவப்பொத்தானை வீதி,
இறம்பைக்குளம்,
வவுனியா.
தகவல்:- குடும்பத்தினர்

# 45ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக்கிரியை அழைப்பும்



கடந்த 04.08.2013 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த

## அமரர் அருண்மைத்துரை அனுஸ்ரா

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று(17.09.2013) செவ்வாய்க்கிழமை பிப. ஒரு மணியளவில் எமது இல்லத்தில் நடை பெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம். இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும். மேலும் அன்னாரின் மரணச்சடங்கில் பங்கு பற்றி ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும், தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், மேலும் பல வழிகளில் உதவி செய்த அனைத்து உள்ளங்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.
சர்வோதய வீதி,
ஆவரங்கால் மேற்கு,
புத்தூர்.
(31784)(17.16.14)
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வட மாகாண சபைத்தேர்தல் - 2013
சுயேச்சைக் குழு- 6
வடமராட்சி மண்ணின்
மைந்தன்
அன்ரனிப்பிள்ளை அந்தோனிஸ்
யோகராசா (யோகன்)

உங்களுக்காக நாங்கள்
எங்களுக்காக நீங்கள்

3

இவர் யார்? இவர் யார்? இவர் யார்?

இவர் யார்?

01) இவர் மக்கள் சேவையை இம்மண்ணில் தொடர்ந்தவர்.
02) உள்ளூர் சமூக அமைப்புகளுடன் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களுடனும் புலம்பெயர் தமிழ்ச் சமூகத்துடனும் தொடர்புகளை வலுப்படுத்தியவர்.
03) யுத்தத்தினால் பாதிக்பட்ட சிறுவர்கள் பெண்கள் ஆகியோரின் கல்விமேம்பாட்டிற்கும் வாழ்வாதரத்திற்கும் பணியாற்றி வருபவர்.
04) யுத்தத்தின்போதும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட போதும் மக்களை நேரடியாகச் சென்று சந்தித்து வேண்டிய உடனடி உதவிகளைச் செய்தவர்.
05) யுத்த காலத்தில் யாழ்ப்பாணத்துக்கு கூட்டுறவுத்துறை மூலம் உணவு விநியோகத்திற்கு வழிவகை செய்து பேருதவி செய்தவர்.
06) உங்களுக்குத் தெரிந்தவர், உங்களைத் தெரிந்தவர் இவர் நமது வீட்டுச் சின்னதில்

சிந்தனையாளர்களே! இவர் யார்?
என்பதனையும் அவருடைய வேட்பாளர்
இலக்கத் தையும் இன்று மட்டும் 077 0571350
க்கு S.M.S. செய்து பரிசில்களை

இவர் யார் என்பதனை நாளைய உதயனில்

இவர் யார்? இவர் யார்? இவர் யார்?

# 2000 பொலிஸாருக்கு 2014 இல் இடமாற்றம்

கொழும்பு,செப்.17
2000 பொலிஸ் உத்தியோகத்தர்கள் இடமாற்றம் செய்யப்படவுள்ளனர்.
பொலிஸ் நிலையங்களில் நீண்ட காலமாகக் கடமையாற்றிய சிரேஷ்ட மற்றும் கனிஷ்ட அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் இவ்வாறு இட மாற்றம் செய்யப்படவுள்ளனர்.
சில பொலிஸ் உத்தியோகத்தர்கள் நீண்ட காலமாக ஒரே இடத்தில் கடமையாற்றியுள்ளனர்.



நீண்ட காலமாக ஒரே இடத்தில் கடமையாற்றிய உத்தியோகத்தர்கள், அதிகாரிகள் ஒழுக்க மீறல்களில் ஈடுபட்டுள்ளதாக குற்றம் சுமத்தப் பட்டுள்ளது.
இவ்வாறு தொடர்ச்சியாக ஒரே இடத்தில் கடமையாற்றிவரும் அதிகாரிகளும் உத்தியோகத்தர்களும் அடுத்த ஆண்டு ஜனவரி மாதத்தில் இடமாற்றம் செய்யப்படவுள்ளனர்.
நாட்டின் அனைத்துப் பொலிஸ் நிலையங்களிலும் கடமையாற்றிவரும் பொலிஸ் உத்தியோகத்தர்களே இவ்வாறு இடமாற்றம் செய்யப்படவுள்ளனர். (ச)

வட மாகாண சபைத் தேர்தல் - 2013,
முல்லைத்தீவு மாவட்டம்



8

சுந்தரம் மகேந்திரன்
(காணாமற்போனோரைக் தேடிக் கண்டறியும் குழுவின் செயலாளர்)


காணமற் போனோரை தேடிக் கண்டறியும் போராட்டத்தை தொடர்ந்து நடத்த ஆதரவுதாரீர்

6



பரிமளராசா சுதர்சன்
(காணாமற்போனோரைக் தேடிக் கண்டறியும் குழுவின் முல்லை மாவட்ட இணைப்பாளர்)

வட மாகாண சபைத் தேர்தல்-2013
சுயேச்சைக் குழு- 6



சலுகைகளுக்காக உரிமைகளை விலை பேசாத சுயஇலாப அரசியல் நோக்க மற்ற உங்கள் தெரிவு

14

மாணிக்க சோதி அபிமன்னசிங்கம்
(மல்லாகம் ரவி)

உங்கள் வாக்கு உங்கள் தெரிவு சுயேச்சைக்குழு - 6

## மாகாணசபைத் தேர்தல்:

### வாக்களிப்போருக்கு லீவு வழங்காவிட்டால் நடவடிக்கை

கொழும்பு,செப்.17
மத்திய, வடக்கு, மற்றும் வட மேல் மாகாண சபைத் தேர்தல்களில் வாக்களிப்போருக்கான விடுமுறைகளை உரிய முறையில் வழங்காது விடுதல் சட்டப்படி தவறாகும் என்று தொழில மைச்சர் காமினி லொக்குகே தெரிவித்தார்.
இதுகுறித்து வாக்காளர்கள் தொழில் புரியுமிடத்திலிருந்து வாக்களிப்பு நிலையத்துக்குள்ள தூரத்தை அடிப்படையாகக் கொண்டு அரச மற்றும் தனியார் தொழில் தருனர்கள் சம்பளத்துடன் கூடிய விடுமுறையைப் பெற்றுக் கொடுக்க வேண்டும்.
அவ்வாறு வாக்களிப்போரின் உரிமையைப் பெற்றுக் கொடுக்கத் தவறும் தொழில் தருனர்களுக்கு எதிராக தேர்தல்கள் ஆணையாளரால் வழக்குத் தாக்கல் செய்யப்படும் என்று அவர் கூறினார்.
வாக்காளர்களின் வாக்குரி மையைக் கருத்திற் கொண்டு சம்பளத்துடன் கூடிய விசேட விடுமுறையை அரச மற்றும் தனியார் தொழில் தருனர்கள் வழங்க முன்வர வேண்டும் என்று தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய ஏற்கனவே வேண்டுகோள் விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)




Why Choose BCAS for Law?

> இலங்கையில் ஒரு lawyer ஆக தொழில் புரிவதற்கு ஓர் அரிய சந்தர்ப்பம்.
> 3 வருட LLB (Hons) கற்கை நெறியை யாழ்ப்பாணத்திலேயே பூர்த்தி செய்ய முடியும்.
> இலங்கை சட்டக் கல்லூரி, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (UGC) இனால் அங்கீகரிக்கப்பட்டது.
> இலங்கை சட்டக் கல்லூரிக்கு Law college entrance exam இன்றி அனுமதி பெற்றுக்கொள்ளமுடியும்.
> Attorney படிப்பதற்கு BCAS Campus மேலதிக பயிற்சி வகுப்புக்களை நாடாத்துகின்றது.
> வயதெல்லை இன்றி அனைவரும் கலந்து கொள்ள முடியும்.

Macro Ads

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

For further details :
16, Point Pedro Road, Jaffna, Sri Lanka.
021 2219910 / 0777 102131
www.bcas.lk
Colombo : 077 482 9765 | Kandy : 081 222 4731
Batticaloa : 077 766 6432 | Kurunegala : 077 387 4747

வடமாகாண சபைத்தேர்தல் - 2013
யாழ் மாவட்டம்
உங்களின் உரிமைக்கான குரல்



"இளம் சமூக சேவையாளரும், கட்டடப்பட வரைஞருமான இவரை மாகாண சபைக்குத் தெரிவு செய்து எம் மண்ணை வளமாக்குவோம்"

சத்தியகுமாரன் போல் தர்சாந்
(Dip.in Civil Engineering)
பூட்டு சின்னம் 14
யாழ் மக்கள் இளைஞர் அணி

வேலையாள்கள் தேவை

சைவ உணவகம் ஒன்றுக்கு
★ சமையலாளர்
★ றொட்டி தயாரிப்பாளர் தேவை
சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்
தொடர்பு:- 077 5241182, 077 9084800
31783.17.14.15

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
உடற்கல்வி டிப்ளோமா பரீட்சைகள்
முதலாம் வருட மாணவர்கள் (பதினோராம் அணி)
இரண்டாம் வருட மாணவர்கள் (பத்தாம் அணி)
மேற்படி பரீட்சைகள் கீழ்க்காணும் வகையில்
2ஆம் வருட செயன்முறைப்பரீட்சை 07.10.2013 தொடக்கம் 23.10.2013 வரை
1ஆம் வருட எழுத்துப் பரீட்சை 23.10.2013 தொடக்கம் 05.11.2013 வரை
2ஆம் வருட எழுத்துப் பரீட்சை 06.11.2013 தொடக்கம் 18.11.2013 வரை
விரிவான பரீட்சை நேர அட்டவணையை பல்கலைக்கழக இணையதளத்தில் பார்வையிடலாம்.
பதிவாளர்.
சி/12466.14.17.16

# தம்புள்ளையில் 3 விபத்துக்களில் நான்கு பேர் சாவு



கொழும்பு,செப்.17
தம்புள்ளையில் இடம்பெற்ற மூன்று விபத்துக்களில் நால்வர் உயிரிழந் துள்ளதுடன் 36 பேர் படுகாயம டைந்துள்ளனர்.
இந்த விபத்துகள் ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.
தம்புள்ள நகரத்தில் மோட்டார் சைக்கி ளொன்று லொறியுடன் மோதி விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த மூவர் உயிரிழந்துள்ளனர்.
கொழும்பு-தெஹியத்தகண்டி வீதியில் பெலவேஹற எனுமிடத்தில் தனியார் பஸ்ஸொன்று விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் 28 பேர் படுகாயமடைந்துள்ளனர்.
இதேவேளை, தம்புள்ள, திருகோண மலை வீதியில் மிரிஸ்கோணியாவ எனுமிடத்தில் இடம்பெற்ற வான் விபத்தில் எட்டுப் பயணிகள் படுகாய மடைந்துள்ளனர்.
படுகாயமடைந்தவர்கள் தம்புள்ள வைத்திய சாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரமான தேர்தலுக்கு காடையர்களால் அச்சுறுத்தல்

## மன்னார் ஆயர் தூதுவரிடம் முறையீடு

யாழ்ப்பாணம், செப்.17

பாதுகாப்புப் படைகளும் அவர்களுடன் சேர்ந்து இயங்குபவர்களாலும் ஏற்படுத்தப்பட்டுள்ள அச்சுறுத்தல் நிலைமை காரணமாக, வடக்கு மாகாண சபைத் தேர்தல் சுதந்திரமாக நடக்குமா என்ற அச்சம் ஏற்பட்டுள்ளதாக நெதர்லாந்து தூதுவரிடம் தெரிவித்துள்ளார் மன்னார் மாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை.

வடக்குக்கு பயணம் மேற்கொண்டுள்ள நெதர்லாந்துத் தூதுவர், மன்னார் ஆயரை அவரது இல்லத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பில் பேசப்பட்ட விடயங்கள் தொடர்பில் மன்னார் ஆயர் தெரிவித்ததாவது:

தேர்தல் காலத்தில் பாதுகாப்பு படையினரை முகாம்களில் முடக்க வேண்டும் என்று கோரிக்கை முன்வைக்கப்பட்ட போதும், அதனை அரசோ, இராணுவத் தளபதியோ கணக்கில் எடுக்கவில்லை. இதனால் இன்று படைகளாலும் படைகளுடன் சேர்ந்து இயங்குபவர்களாலும் சுதந்திரமான தேர்தல் நடைபெறுமா என்ற சந்தேகம் தோன்றியுள்ளது.

இவற்றை நிறுத்தவேண்டிய பொலிஸார் கைகட்டி வாய்பொத்தி நிற்கின்றனர். பாதுகாப்புக் கொடுக்க வேண்டிய அவர்கள் அரச கட்சிக்கு வேலை செய்கின்றனர்.

தமிழ் மக்களை சுதந்திரமாக வாக்களிப்பதற்குரிய ஒழுங்குகள் செய்யப்பட வேண்டும். அதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இவற்றை தூதுவரிடம் தெளிவாக எடுத்துக் கூறினேன் - என்றார். (த-5)

# கடத்தப்பட்ட வாகனம் பிரசாரத்தில்

கலகேடிஹேனே பிரதேசத்தில் வைத்து கடந்த மார்ச் மாதம் கடத்தப்பட்ட வாகனம் தேர்தல் பிரசாரத்துக்குப் பயன்படுத்தப் பட்டபோது நேற்று திங்கட்கிழமை கைப்பற்றப்பட்டதாக நிட்டம்புவப் பொலிஸார் தெரிவித்தனர். போலி இலக்கத்துடனேயே இந்த வாகனம் மத்திய மாகாண சபைக்கான தேர்தல் பிரசாரத்துக்குப் பயன்படுத்தப் பட்டுள்ளது.

பொலிஸாரைக் கண்டுகொண்ட வாகனச் சாரதி அந்த வாகனத்தை மிகவேகமாகத் திருப்பிக்கொண்டு தப்பிச்சென்றுள்ளார். எனினும், ஒன்றரை மணி நேரத்துக்குப் பின்னர் அந்த வாகனத்தைத் தாம் கைப்பற்றியதாக நிட்டம்புவ பொலிஸார் தெரிவித்தனர்.

# தமிழரைத் துக்கத்தில் தள்ளுகிறார் சம்பந்தன்

## வருந்துகிறார் வீரவன்ஸ



சம்பந்தன் என்பவர் வயதான நபர். இன்றைக்கோ நாளைக்கோ என்று உள்ளார். ஆனால் நாட்டில் இனவாதத்தை ஏற்படுத்தி தமிழ் மக்களுக்கு மீண்டும் துக்கத்தை உரித்தாக்குவது அவருடைய தேவையாக உள்ளது என்று அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

வடக்கில் அதிகாரத்தைக் கைப்பற்றிக்கொள்ளப் புலிகளுக்கு ஆதரவான தமிழர்களுக்குக் கூட்டமைப்பினர் தற்காலிக அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொடுக்கும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர் என்றும் அவர் குற்றம்சாட்டியுள்ளார். இது குறித்துத் தேர்தல்கள் ஆணையாளருக்கு முறைப்பாடு செய்யாமை இன்றைய ஊடக சந்திப்பின் மூலம் அவர் தெரிந்து கொள்வார் என்பதனாலேயே எனவும் விமல் குறிப்பிட்டார்.

மாகாண சபைத் தேர்தலுக்கு அரசே தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிடாதுள்ள நிலையில் கூட்டமைப்பு தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிட்டு சுயாட்சி கோருகின்றது என்றார் வீரவன்ஸ.

விக்னேஸ்வரன் தமிழ் மக்களின் விருப்பத்தின் பேரில் நியமிக்கப்படவில்லை. நவநீதம்பிள்ளையும் இவ[illegible]டைய குழுவில் உள்ளார். வெள்ளமுள்ளிவாய்க்காலில் பாதிக்கப்பட்ட மக்கள் குறித்து விசேட கவனம் செலுத்தப்படும் என நவநீதம்பிள்ளை கூறியுள்ளதாகத் தமிழ் பத்திரிகை ஒன்றில் செய்தி வெளிவந்துள்ளது.

வடக்கில் கூட்டமைப்பு ஆட்சி அமைத்து நிபந்தனை விதிக்கும் போது 13ஆவது திருத்தம் குறித்து அரசில் உள்ள சிலர் தீர்மானம் எடுப்பர் என்று விமல் மேலும் குறிப்பிட்டார். (த)

# கூட்டமைப்பின் விஞ்ஞாபனம்; அரசு முறையிடவே இல்லை

கொழும்பு,செப் 17

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் அறிக்கை அரசமைப்புக்கு முரணானது என்று, ஜனாதிபதி உள்ளிட்ட ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவர்கள் தேர்தல் மேடைகளில் பரப்புரை செய்து வருகின்ற போதிலும், இது தொடர்பாகத் தேர்தல் ஆணையாளரிடம் எந்த முறைப்பாடும் செய்யப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் அறிக்கை தொடர்பாகவோ, கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளர் சி.வி. விக்னேஸ்வரன் வெளியிட்ட கருத்துகள் தொடர்பாகவோ, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி குறிப்பிடத்தக்க எந்த முறைப்பாட்டையும் தெரிவிக்கவில்லை என்று தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராக, ராவண பலய அமைப்பு மட்டும் தான் முறைப்பாடு செய்துள்ளது. அரசியல் கட்சிகள் தேர்தல் சட்டங்களை மீறாத வகையில் பரப்புரைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார். (த)

# குடும்பஸ்தரின் சடலம் மீட்பு; சந்தேகத்தில் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், செப்.17

நாரந்தனையில் சடலமாக மீட்கப்பட்டவர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்று சந்தேகம் தெரிவிக்கப்பட்ட நிலையில் அந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரை எதிர்வரும் 27 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நாரந்தனை மேற்கு, ஊர் காவற்றுறையைச் சேர்ந்த ஜேசுராஜா றொபின்சன் (வயது-26) என்பவர் கடந்த சில நாள்களுக்கு முன்னர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டார். இவர் ஒரு குழந்தையின் தந்தை.

சடலத்தில் காணப்பட்ட அடிகாயங்கள் மற்றும் பல ஆதாரங்களின் அடிப்படையில் அவர் கொலை செய்யப்பட்ட பின்னர் தூக்கில் போடப்பட்டிருக்கலாம் என்று சந்தேகம் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற குற்றச்சாட்டில் அதே இடத்தைச் சேர்ந்த பிரதீபன் என்பவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். அவரை விளக்கமறியலில் வைக்கு மாறு நீதிவான் ஆர்.எஸ்.மகேந்திரராஜா உத்தரவிட்டுள்ளார்.

சந்தேக நபர்களாகக் குறைந்தது இரண்டு பேர் வரை தொடர்புபட்டிருக்கலாம் என்று தெரிவிக்கப்பட்ட நிலையில் ஒருவரே தற்போது கைது செய்யப்பட்டுள்ளார். (த-4)

# வாஸுக்கு விளக்கமறியல் நீடிப்பு

கொழும்பு செப் 17

முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் வாஸ் குணவர்த்தனவுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள மற்றுமொரு வழக்கில் அவருக்குப் பிணை வழங்கப்பட்டுள்ளது. எனினும் அவரது விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

களனி பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் ஹசித்த மடவல கொலைச் சந்தேகநபர்களை விடுவிக்க, அவர்களிடம் லஞ்சம் பெற்றதாகக் கூறப்பட்டு அவருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கிலேயே அவருக்குப் பிணை வழங்கப்பட்டுள்ளது.

அமைச்சர் மேர்வின் சில்வாவின் முன்னாள் செயலாளரான சரத் குமார எதிரிசிங்க என்றழைக்கப்படும் சிங்கப்பூர் சரத்துக்கு மரண அச்சுறுத்தல் விடுத்து அவரிடம் 30 இலட்சம் ரூபா கப்பம் கோரியதாகவும் அதில் 15 இலட்சத்தைப் பெற்றுக் கொண்டதாகவுமே அவருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்கு மஹர நீதிவான் தர்ஷிகா விமலசிறி முன்னிலையே நேற்றுத் திங்கட்கிழமை விசாரணைக்கு எடுத்துகொள்ளப்பட்டது.

இதன்போது முன்னிலையாகியிருந்த குற்றப்புலாய்வுப் பிரிவு அதிகாரிகள் அவருக்கு எதிராக விசாரணை நிறைவடையவில்லை என்பதனால் அவருக்குப் பிணை வழங்கவேண்டாமெனக் கோரினர். அதிகாரிகளின் கோரிக்கையை நிராகரித்த நீதவான் அவருக்குப் பிணை வழங்கினார்.

ஐந்து இலட்சம் ரூபா பெறுமதியான மூன்று சரீரப் பிணைகளிலேயே அவரை விடுவிக்குமாறு பணித்தார் நீதிவான்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## தபால் மூலம்

களில் இடம்பெற்றது. பின்னர் 12ஆம், 13ஆம் மற்றும் 14ஆம் திகதிகளிலும் வாக்களிக்கச் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டது. எனினும் வாக்களிக்கத் தவறியவர்களுக்கு மீண்டும் ஒரு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. (த)

## கூட்டமைப்பே

மற்றும் தூதரக அரசியல் விவகாரச் செயலாளர் மீனி லங்கோ ஆகியோர் நேற்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தனர்.

இவர்கள் நேற்று மாலை யாழ். ஆயரை அவரது இல்லத்தில் சந்தித்துப் பேசினர்.

இந்தச் சந்திப்புக் குறித்து யாழ். ஆயர் தெரிவித்தமை வருமாறு:

நெதர்லாந்து அரசின் நிதியுதவியில் புனரமைப்புச் செய்யப்பட்டு வரும் யாழ். கோட்டையின் நிர்மாணப் பணிகளுக்காக தூதுவருக்கு நன்றி தெரிவித்தேன். இதனை அரசிடம் ஒப்படைக்காமல் யாழ்.மாநகர சபையிடம் ஒப்படைத்தால், எல்லா மக்களும் சென்று வரக் கூடியதாக இருக்கும் என்று கூறினேன்.

நடைபெறவுள்ள வட மாகாண சபைத் தேர்தல் சுமுகமாக நடைபெற வேண்டும் என்றே எல்லோரும் விரும்புகின்றனர் என அவர்களிடம் தெரிவித்தேன். இதன்போது வட மாகாண சபைத் தேர்தலில் எந்தக் கட்சி வெல்லும் என்று நெதர்லாந்துத்தூதுவர் என்னிடம் கேட்டார்.

அதற்கு நான், முன்னரும் தமிழ் மக்களின் கட்சியே தேர்தலில் வெற்றிபெற்றது. அவ்வாறு தான் நடைபெற வேண்டும் என்று தமிழ் மக்கள் விரும்புகின்றனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே வெல்லும் என்று கூறினேன்.

மக்கள் வாக்களிக்க வேண்டும் என்ற உற்சாகத்துடன் இருக்கின்றனர். இந்தத் தேர்தல் இராணுவத்தினரின் தலையீடு இல்லாமல் நடைபெற வேண்டும் என்றும் வலியுறுத்தினேன்.

இங்கு சுமுகமாக தேர்தல் நடைபெற வேண்டும். என்றே தாங்களும் விரும்புவதாகத் தூதுவர் என்னிடம் தெரிவித்தார் - என்றார்.

நெதர்லாந்து தூதுவர் நாளை வரை யாழ்ப்பாணத்தில் தங்கியிருப்பார் என்று தெரிவிக்கப்பட்டது. (த-5)

## வேட்பாளர் கைது

பட்டிருந்த கூட்டமைப்பின் வவுனியா மாவட்ட வேட்பாளர் சந்திரகுலசிங்கம், அவரது ஆதரவாளர்களுமே இவ்வாறு கைது செய்யப்பட்டனர். (த-422-400)

## தமிழ்த்

ளது. அந்தஅறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

போர் முடிவுக்கு வந்து 4 ஆண்டுகள் கடந்துள்ள நிலையிலும் இனப்பிரச்சினைக்குத் தீர்க்கமான முடிவுகளோ முன்மொழிவுகளோ இரு தரப்பிடமிருந்தும் கிடைக்கவில்லை.

அபிவிருத்தியால் மக்களின் மனங்களை மாற்றலாம் என்று ஆளும் தரப்பு சிந்திக்கின்றது. ஆனாலும் ஒன்றை மட்டும் உணர வேண்டும். பழைய புத்தகத்துக்கு புதிய உறைகளைப் போட்டுவிட்டு அதனை கறையான் புற்றுக்கு அருகில் வைப்பதைப் போன்றதே இலங்கை அரசின் அபிவிருத்தியின் நோக்கம்.

சகோதரத்துவ அடிப்படையில் வாழ வேண்டும் என்று அறிக்கை விடும் அரசுதான் இனவாதத்தையும் கக்கிக் கொண்டிருக்கின்றது.

தமிழ் பேசும் மக்களுக்குத் தேவையானது சலுகைகளோ சன்மானங்களோ அல்ல. மரபு வழியாக தம் உயிரோடும் உடலோடும் பிரண்டு உருண்ட சொந்த மண்ணில் எந்த வித அச்சுறுத்தல்களும் இன்றி நிம்மதியாகவும் தன்னிறைவாகவும் வாழ்வதற்கான உரிமையையே அவர்கள் காலங் காலமாக வேண்டி நிற்கின்றனர். இதனைப் புரிந்து கொள்ளாமல் தமிழ் மக்களின் மனங்களை வெல்லலாம் என்று இலங்கை அரசு தொடர்ந்தும் எதிர்பார்ப்பது கவலைக்குரியது.

சர்வதேச அழுத்தத்தால் நடத்தப்படும் வட மாகாண சபைத் தேர்தலில், தமிழ் பேசும் மக்களின் வாக்குகளை சிதறடிப்பதற்காக எதுவித அரசியல் வரலாற்று அறிவுமற்ற நபர்களை பல்வேறு சுயேச்சை குழுக்களாகக் களம் இறக்கி அற்ப சொற்ப சலுகைகளையும் வாக்குறுதிகளையும் தொடர்ந்தும் வழங்கி வருவது தமிழ் மக்களை மேலும் ஏமாற்றும் செயலாகும்.

இலங்கைத் தீவுக்குள் அச்சுறுத்தலற்ற வாழ்க்கையை ஒவ்வொரு சிறுபான்மையினமும் அனுபவிக்கின்றதா என்பதை இந்த முறை தேர்தல்தான் உலகுக்கு உணர்த்தப் போகின்றது.

தமிழ் மக்களாகிய நாம் முழுமையான வாக்குப் பதிவுகளை மேற்கொள்வது காலத்தின் கட்டாயமாகும். எனவே காலத்தையும் சூழ்நிலையையும், தேவையினையும் உணர்ந்து தமிழ் பேசும் மக்களின் தனித்துவ[illegible] நாட்டக் கூடிய - தமிழ்த் தேசியத்திற்காகப் போராடுவோருக்கே உங்கள் வாக்குகளை வழங்க வேண்டும் - என்றுள்ளது. (த-5)

## வேட்பாளர்

என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே குழு ஒன்றினால் இப்போது அடித்துக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

வள்ளிபுனம் கனிஷ்ட உயர்தர வித்தியாலயத்துக்கு முன்பாகவுள்ள ஆளுங்கட்சி வேட்பாளர் இராஜ கருணாவின் தேர்தல் அலுவலகத்துக்கு முன்னாலேயே இந்தக் கொலை நிகழ்ந்துள்ளது.

கட்சி ஒன்றின் ஆதரவாளர்கள் சிலரே இந்த இளம் குடும்பஸ்தரை அடித்துக் கொலை செய்துவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர் எனப் பொதுமக்கள் தெரிவித்தனர்.

சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (த-6-400-426)

## அரச ஊழியர்

ராலும் நிறுத்த முடியாது எனவும் தெரிவித்தார்.

இது தொடர்பில் தேர்தல் ஆணையாளரால் ஏற்கனவே திணைக்களத் தலைவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கடமை நேரங்களில் அரச ஊழியர்களோ, அதிகாரிகளோ அலுவலகங்களைவிட்டு வெளியில் செல்லக்கூடாது. அவர்கள் வெளியில் சென்று மக்கள் சந்திப்புக்களில் ஈடுபடுவதோ அல்லது தேர்தல் பரப்புரை நடவடிக்கைகளில் ஈடுபடுவதோ இனங்காணப்பட்டால் அவர்கள் மீது உடனடியாக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மேலும், அரச அதிகாரிகள் எந்தவொரு அரசியல் அழுத்தங்களுக்கும் அடி பணிந்து கடமையாற்ற வேண்டியதில்லை. அரச கொள்கைப் பிரமாணங் களின் படி அரச அதிகாரிகள் எந்தச் சந்தர்ப்பத்திலும் வேலையிலிருந்து நிறுத்தப்படமுடியாது என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

மேலும் மக்களுக்கு அரசின் கொள்கைக்கு அமைவாக வழங்கப்பட்டு வருகின்ற வரப்பிரசாதங்கள், சேவைகள் தொடர்ந்து வழங்கப்படும். இந்த வரப்பிரசாதங்கள் நிறுத்தப்படும் என்று விடுக்கப்படுகின்ற அச்சுறுத்தலுக்கு மக்கள் இணங்கிச் செயற்பட வேண்டிய அவசியமில்லை. அதனால் மக்கள் அத்தகைய அச்சுறுத்தல்களுக்கு அடி பணிய வேண்டாம் என்று தேர்தல்கள் ஆணையாளர் மக்களைக் கேட்டுக்கொண்டுள்ளார். (ஒ-5)

## நீதிமன்றை

தார். 1000 மில்லியன் ரூபா நஷ்ட ஈடு கோரி அவர் தொடர்ந்த இந்த வழக்கு நேற்று விளக்கத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

விளக்கத்தின் போது முறைப்பாட்டாளரான அமைச்சர் டக்ளஸ் மன்றில் தோன்றியிருக்க வேண்டியது அவசியம் என்றபோதும் அவர் நேற்று நீதிமன்றுக்கு வரவில்லை.

இதனை நீதிமன்றத்துக்குச் சுட்டிக்காட்டிய உதயன் தரப்புச் சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் (நாடாளுமன்ற உறுப்பினர்) அரசமைப்பின் 87 ஆவது உறுப்புரிமை பிரிவு ஒன்றின் கீழ் விளக்கத்தின் போது மன்றில் முறைப்பாட்டாளர் தோன்றியிருக்கா விடின் அந்த வழக்கை நீதிமன்றம் தள்ளுபடி செய்ய வேண்டும் என வாதிட்டார்.

குறுக்கிட்ட அமைச்சர் டக்ளஸின் சட்டத்தரணி உடல்நலக் குறைவு காரணமாகவே அமைச்சர் மன்றுக்கு வரவில்லை என்று தெரிவித்தார்.

அவ்வாறாயின் அதற்குரிய மருத்துவ ஆதாரங்களை மன்றுக்குச் சமர்ப்பித்திருக்க வேண்டும் என சட்டத்தரணி சுமந்திரன் எதிர் வாதிட்டார். உரிய மருத்துவ ஆதாரங்களை மன்றின் முன் சமர்ப்பிப்பதாக சட்டத்தரணி மஜீத் உறுதியளித்தார்.

இரு தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி மருத்துவ ஆதாரங்களை மன்றின் முன் சமர்ப்பிக்கும் படி கூறியதுடன் வழக்கை விளக்கத்துக்காக டிசெம்பர் மாதம் 9ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். வழக்கு நடைபெற்றுக்கொண்டிருந்த சுமார் 10 மணியளவில் அமைச்சர் டக்ளஸ் யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி வளாகத்தில் தேகாரோக்கியத்துடன் வலம் வந்து கொண்டிருந்தார். காலை 9.30 மணிக்கே அவர் அந்த இடத்துக்கு வந்துவிட்டார் எனச் சாட்சிகள் பலர் உதயனிடம் தெரிவித்தனர்.


அமைச்சர் டலஸ் அழகப்பெரும, வட மாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி உள்ளிட்ட பிரமுகர்களுடன் அவர் யாழ்.பல்கலைக்கழகக் கல்லூரிக்கான அடிக்கல்லை நட்டு வைத்தார். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினரும் அமைச்சர் டக்ளஸின் நெருங்கிய சகாவுமான மு.சந்திரகுமாரும் நிகழ்வில் உடனிருந்தார்.

இதற்கான ஒளிப்பட, காணொலி ஆதாரங்களும் நூற்றுக்கணக்கான சாட்சிகளும் உதயன் வசம் உள்ளன. (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய பளுதூக்கல் போட்டியில் வடக்கு வரலாற்றுச் சாதனை

## 3 தங்கம்; 3 வெள்ளி; ஒரு வெண்கலப் பதக்கம்



யாழ்ப்பாணம், செப். 17

அகில இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான பளுதூக்கும் போட்டியில் வட மாகாணம் 2 தங்கம், 3 வெள்ளி, ஒரு வெண்கலம் என 7 பதக்கங்களைப் பெற்று வரலாற்றுச் சாதனை படைத்துள்ளது.

19 வயதுப்பிரிவு ஆண்களுக்கான பளுதூக்கும் போட்டியில் சென். ஜோன்ஸ் கல்லூரி மாணவன் வி.வினோத்குமார் 69 கிலோ கிராம் எடைப் பிரிவில் 200 கிலோ எடை யைத் தூக்கி முதலாமிடத்தைப் பெற்றுத் தங்கப் பதக்கம் வென்றார்.

இதே வயதுப்பிரிவில் அச்சுவேலி மத்தியகல்லூரி மாணவன் கு.டிசாந் 94 கிலோகிராம் எடைப்பிரிவில் 175 கிலோ எடையை தூக்கி தங்கப் பதக்கம் சுவீகரித்தார்.

இதே வயதுப்பிரிவில் சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி மாணவன் அ.உஷாந்தன் 105 கிலோகிராம் எடை பிரிவில் 175 . கிலோகிராம் எடையைத் தூக்கி இரண்டாமிடத்தைப் பெற்று வெள்ளிப்பதக்கம் வென்றார்.

இதே வயதுப் பிரிவில் சென். ஜோன்ஸ் கல்லூரி மாணவன் விக்டர் ஜோன் 105 கிலோகிராம் எடைப்பிரிவில் 133 கிலோ கிராம் எடையைத் தூக்கி மூன்றாமிடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கம் வென்றார்.

17 வயது ஆண்களுக்கான பளுதூக்கும் போட்டியில் யாழ். இந்துக்கல்லூரி மாணவன் 94 கிலோகிராம் எடைப் பிரிவில் 100 கிலோ எடையைத் தூக்கி இரண்டாமிடத்தைப் பெற்று வெள் ளிப்பதக்கம் பெற்றார்.

இதே வயதுப் பிரிவில் யாழ். மத்திய கல்லூரி மாணவன் டிலக்ஸ்குமார் 85 கிலோகிராம் எடைப்பிரிவில் 120 கிலோ கிராம் எடையைத் தூக்கி இரண்டாமிடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கம் பெற்றார்.

யாழ்ப்பாணம் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை வீராங்கனை பி.டினோஜா 17 வயதுப் பிரிவில் 64 கிலோ எடைப் பிரிவில் 108 கிலோ எடையைத் தூக்கி முதலாம் இடத்தைப் பெற்றுத் தங்கப் பதக்கத்தைப் பெற்றுக் கொண்டுள்ளார். (த-23-86)

## வென்றன

## டயமன்ஸ், ஹென்றிஸ்



யாழ்ப்பாணம், செப். 17

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை கழக மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டங்களில் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகம், இளவாலை யங்ஹென்றீசியன் விளையாட்டுக் கழகம் ஆகியவை வெற்றி பெற்றுள்ளன.

டயமன்ஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் கொலின்ஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் டயமன்ஸ் விளையாட்டுக் கழக அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இளவாலை யங் ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் இளவாலை யங் ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

## ஜூடோவில் பதக்கம்

வலி. வடக்கு செப். 17

அகில இலங்கைப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெறும் ஜூடோ போட்டியில் வடமாகாணம் ஒரு பதக்கத்தைப் பெற்றுக் கொண்டுள்ளது.

கம்பொல விக்கிரமபாகு மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற போட்டியில் 17 வயதுப் பிரிவினருக்கான 63 கிலோ எடைப் பிரிவில் கிளிநொச்சி இந்துக் கல்லூரியைச் சோந்த சா.தமிழ்மகள் மூன்றாம் இடத்தைப் பெற்று வெண்கலப்பதக்கத்தைப் பெற்றுள்ளதுடன் கிளிநொச்சி மாவட்டத்துக்கும் பாடசாலைக்கும் பெண்கள் சார்பில் புகழ் சோத்துள்ளார். (த-86)

# வள்ளுவன் வி.க. உதைபந்தில் வெற்றி பெற்ற அணிகள்



யாழ்ப்பாணம், செப்.17

மன்னார் மாவட்ட உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் மடுப் பிரதேச செயலகத்தின் அனுசரணையுடன் பெரியபண்டி விரிச்சான் முத்துக்கள் மூன்று புகழ் வள்ளுவர் விளையாட்டுக் கழகம் நடத்தும் 11 பேர் பங்கு பற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் கடந்த சனிக்கிழமை நேற்றும் ஞாயிற்றுக் கிழமையும் இடம்பெற்ற ஆட்டங்களின் முடிவுகள் வருமாறு-

பாலம்பிட்டி ஐக்கிய விளையாட்டுக்கழக அணிக்கும் சாந்திபுரம் வளரும் நட்சத்திர விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் பாலம்பிட்டி ஐக்கிய விளையாட்டுக்கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

மாந்தை சென்.லூட்ஸ் 'ஏ' அணிக்கும் வலைப்பாடு ஜெகமீட்பர் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆடத்தில் மாந்தை சென்.லூட்ஸ் 'ஏ' அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

மன்னார் கில்லறி 'ஏ' அணிக்கும் பெரியமடு மருதம் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் மன்னார் கில்லறி விளையாட்டுக்கழக அணி 5:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

பாலம்பிட்டி ஐக்கிய 'ஏ' அணிக்கும் மன்னார் ஐக்கிய விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் இரு அணியினரும் ஆட்ட நேர முடிவில் எதுவிதகோல்களையும் பெற்றுக் கொள்ளவில்லை. இதனால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

ஆட்டம் வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக 5 சமநிலை உதைகள் வழங்கப்பட்டன. அதில் பாலம்பிட்டி ஐக்கிய விளையாட்டுக்கழக அணி 4:2 என்றகோல் கணக்கில் வெற்றிபெற்றது.

பாலம்பிட்டி ஐக்கிய 'பி' அணிக்கும் இரணமாதாநகர் சென்.மேரிஸ் 'ஏ' அணிக்கும் இடையிலான ஆட்டம் இரு அணியினரும் ஆட்ட நேரமுடிவில் எதுவித கோல்களையும் பெறாததனால் ஆட்டத்தின் சமநிலையில் முடிவடைந்தது. ஆட்டம் வெற்றி தோல்வியை தீர்மானிப்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.

இதில் இரணமாதாநகர் சென்.மேரிஸ் விளையாட்டுகக்கழக அணி 5:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

பெரிய பண்டி விரிச்சான் வள்ளுவர் 'ஏ' அணிக்கும் கற்கடந்த குளம் சென்.ஜோசப் ஏஅணிக்கும் இடையிலான ஆட்டத்தில் பெரிய பண்டிவிரிச்சான் வள்ளுவர் 'ஏ' 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

வலைப்பாடு சென்.ஆன்ஸ் 'ஏ' அணிக்கும் சாந்தபுரம் வளரும் நட்சத்திர 'ஏ' அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் சாந்தபுரம் வளரும் நட்சத்திர விளையாட்டுக்கழகம் 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

மன்னார் பள்ளிமுனை சென்.லூட்சியா விளையாட்டுக்கழக அணிக்கும் மன்னார் சாவற்கட்டு இல்லறி 'பி' அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் மன்னார் பள்ளிமுனை சென்.லூட்சியா விளையாட்டுக்கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ங-23)

## லூட்சியா சம்பியன்

யாழ்ப்பாணம், செப்.17

மடு பிரதேச செயலகத்தின் அனுசரணையுடன் மன்னார் உதைபந்தாட்ட லீக்கின் ஆதரவுடன் பெரிய பண்டி விரிச்சான் முத்துக்கள் மூன்று புகழ் வள்ளுவர் விளையாட்டுக் கழகம் நடத்திய 11 பேர் பங்கு பற்றிய உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் பள்ளிமுனை சென் லூட்சியா விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்று சம்பியன் ஆனது.

**இறுதியாட்டத்தில் மன்னார் பள்ளி முனை சென். லூட்சியா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சாந்திபுரம் வளரும் நட்சத்திர விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.**

நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை பெரிய பண்டிவிரிச்சான் வள்ளுவர் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்ற இறுதியாட்டத்தில் மன்னார் பள்ளிமுனை சென். லூட்சியா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சாந்திபுரம் வளரும் நட்சத்திர விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இதில் மன்னார் பள்ளிமுனை சென்.லூட்சியா விளையாட்டுக் கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது. (த-23)

## பாடும்மீன் அசத்தல்



யாழ்ப்பாணம், செப்.17

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம் நடத்தும் 'யாழ்ப்பாண சமர்' உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் குருநகர் பாடும் மீன் விளையாட்டுக் கழக 'ஏ','பி' அணி வெற்றி பெற்றுள்ளது.

குருநகர் பாடும் மீன் 'பி' அணிக்கும், உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் குருநகர் பாடும் மீன் 'பி' அணி 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

குருநகர் பாடும் மீன் 'ஏ' அணிக்கும் கொற்றாவத்தை றேஞ்சஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் குருநகர் பாடும் மீன் 'ஏ' அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது. (த-23)



## இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம், செப்.17

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம் நடத்தும் யாழ்ப்பாண சமர் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

**பி.ப.3.45 மணி**

தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழகம் எதிர் நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழகம்.

**மாலை 4.45 மணி**

நவசக்தி விளையாட்டுக் கழகம் எதிர் வல்லை விளையாட்டுக் கழகம். (த-23)

# யங்கம்பன்ஸ், அன்ரனிஸ் ஆட்டங்களில் வெற்றி

பருத்தித்துறை, செப்.17

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நவசக்தி விளையாட்டுக் கழகம் தமது 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்டு வரும் உதைபந்தாட்டப் போட்டிகள் வதிரி பொம்மோஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றன.

இதில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற போட்டியில் திக்கம் யங்கம்பன்ஸ் 'ஏ' அணியை எதிர்த்து விண்மீன் 'பி' அணி மோதியது. ஆட்டம் தொடங்கியதிலிருந்து ஆதிக்கம் செலுத்திய யங்கம்பன்ஸ் 'ஏ' அணி வீரன் ரதன் 8 ஆவது 22 ஆவது நிமிடங்களிலும் 27 ஆவது நிமிடத்திலும் கோல்களைப் போட இடைவேளைக்கு முன்னர் 3:0என்ற கோல் கணக்கில் அந்த அணி முன்னிலை வகித்தது. இடைவேளையின் பின்னர் ஆட்டம் தொடங்கிய போதும் யங்கம்பன்ஸ் 'ஏ' அணி வீரன் ரதன் 32 ஆவது நிமிடத்தில் மேலும் கோலைப் போட்டார். 33 ஆவது நிமிடத்தில் விண்மீன் 'பி' அணி வீரர் கிருபா கோல் போட 35 ஆவது நிமிடத்தில் யங்கம்பன்ஸ் 'ஏ' அணி வீரர் பிரகாசும் 37 ஆவது நிமிடத்தில் விண்மீன் 'பி' அணி வீரர் இந்திரனும் 39 ஆவது நிமிடத்தில் யங்கம்பன்ஸ் 'ஏ' அணி வீரர் பிரகாசும் மாறி மாறி கோலைப் போட இறுதியில் யங்கம்பன்ஸ் ஏ அணி 6:2 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது.

அந்த அணி அடுத்த போட்டியில் கலட்டி ஐக்கிய அணியை எதிர்த்து மணற்காடு சென். அன்ரனிஸ் அணி மோதியது. ஆட்டம் தொடங்கியதிலிருந்து இரு அணிகளும் மிக விறுவிறுப்பாக மோத 18 ஆவது நிமிடத்தில் கலட்டி ஐக்கிய அணி வீரர் பிரஜீவன் ஒரு கோலைப்போட்டார் அதன் பின்னர் பலத்த போராட்டத்தின் பின்னர் 30 ஆவது நிமிடத்தில் சென்அன்ரனிஸ் வீரர் றெஜினோல்ட் ஒரு கோலைப் போட இடைவேளைக்கு முன்னர் 1:1 என்ற கோல் கணக்கில் சமனிலை வகித்தது. இடைவேளையின் பின்னர் ஆட்ட வியுகத்தை மாற்றிய சென் அன்ரனிஸ் வீரர்கள் தமக்கு கிடைத்த வாய்ப்பை சரியாகப் பயன்படுத்தினர். 35 ஆவது நிமிடத்தில் றெஜினோல்ட் ஒரு கோல் போட்டார். இதனால் ஆட்டம் விறுவிறுப்படைந்த போதும் இரு அணிகளாலும் கோல் எதனையும் போட முடியவில்லை இதனால் ஆட்ட நிறைவில் 2:1 என்ற கோல் கணக்கில் மணற்காடு சென். அன்ரனிஸ் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றது. (த-422)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுவராஜ் அதிரடிச் சதம்

இந்தியாவுக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்தியத் தீவுகள் ஏ அணிக்கும், இந்திய ஏ அணிக்குமிடையிலான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரின் முதலாவது போட்டியில் இந்திய ஏ அணி வெற்றிபெற்றுள்ளது. யுவராஜ் சிங்கின் சிறப்பான சதத்தின் உதவியுடன் இந்த வெற்றி பெறப்பட்டது.

பெங்களூர் எம்.சின்னசுவாமி மைதானத்தில் இடம்பெற்ற இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத் தீவுகள் ஏ அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது. இந்தப் போட்டி 42 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட போட்டியாக மாற்றப்பட்டு இடம்பெற்றிருந்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய ஏ அணி 42 பந்துப் பரிமாற்றங்களில் 4 இலக்குகளை இழந்து 312 ஓட்டங்களைக் குவித்தது.

8 ஓட்டங்களுக்கு முதலாவது இலக்கை இழந்த அவ்வணி, 11.4 பந்துப்பரிமாற்றங்களில் நிறைவில் 2 இலக்குகளை இழ ந்து 47 ஓட்டங்களுடன் தடுமாறியது. 3ஆவது இலக்குக்காக 100 ஓட்டங்கள் பகிரப்பட, அவ்வணி 30.1 பந்துப் பரிமாற்றங்களில் 3 இலக்குகளை இழந்து 147 ஓட்டங்களுடன் காணப்பட்டது. அடுத்த 71 பந்துகளில் 165 ஓட்டங்கள் குவிக்கப்பட்டிருந்தன.

துடுப்பாட்டத்தில் இந்திய ஏ அணி சார்பாக யுவராஜ் சிங் 89 பந்துகளில் 8 நான்கு ஓட்டங்கள், 7 ஆறு ஓட்டங்கள் உள்ளடங்கலாக 123 ஓட்டங்களைக் குவித்தார். யூசுப் பதான் 32 பந்துகளில் 4 நான்கு ஓட்டங்கள், 6 ஆறு ஓட்டங்கள் உள்ளடங்கலாக ஆட்டமிழக்காது 70 ஓட்டங்களைப் பெற்றதோடு, மந்தீப் சிங் 78 பந்துகளில் 67 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் மேற்கிந்தியத் தீவுகள் ஏ அணி சார்பாக மிகுவெல் கமின்ஸ், அன்ட்ரே றசல், நிக்கித்தா மில்லர், குருமா போனர் ஆகியோர் தலா ஒரு இலக்கைக் கைப்பற்றினர்.



313 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் ஏ அணி, 39.1 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 235 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 77 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. துடுப்பாட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் ஏ அணி சார்பாக ஆஷ்லி நேர்ஸ் 50 பந்துகளில் 57 ஓட்டங்களையும், நர்சிங் டியோநரைன் 63 பந்துகளில் 57 ஓட்டங்களையும், அன்ட்ரே ஃபிளெற்சர் 33 பந்துகளில் 29 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் இந்திய ஏ அணி சார்பாக சுமித் நார்வல், வினய் குமார், றாகுல் சர்மா, யூசுப் பதான் ஆகியோர் தலா 2 இலக்குகளையும், ஜெய்தேவ் உன்முகத்சந் ஓர் இலக்கையும் கைப்பற்றினர் .

(த)

# டில்லி உத்தேச அணியில் சேவாக், கம்பீர்

சால்வே சாலஞ்சர் கிண்ணத் தொடருக்கான டில்லி உத்தேச அணியில், ஆரம்ப வீரர்களான சேவக்,கவுதம் கம்பீர் இடம் பெற்றுள்ளனர்.

உள்ளூர் கிரிக்கெட் தொடர்களில் ஒன்றான, என்.கே.பி., சால்வே சாலஞ்சர் கிண்ணத் தொடர் இந்தூரில் நடக்கிறது. இதில், இந்தியா புளூ, இந்தியா ரெட் மற்றும் டில்லி அணிகள் பங்கேற்கின்றன. இந்தச் சுற்றுத்தொடர் எதிர்வரும் 26ஆம் திகதி முதல் 29ஆம் திகதி வரை நடைபெறும்.

இத்தொடரில் பங்கேற்கும் டில்லி அணிக்கான 28 பேர் கொண்ட உத்தேச அணி நேற்று அறிவிக்கப்பட்டது. இதில், சமீபகாலமாக இந்திய அணியில் இடமின்றி தவிக்கும் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களான சேவக், கம்பீர் இடம் பெற்றுள்ளனர். இவர்களை தவிர, ஷிகர் தவான், விராத் கோஹ்லி, உன்முக்த் சந்த், இஷாந்த் சர்மா, ஆஷஸ் நெஹ்றா ஆகியோரும் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

(த)



# 2018 வரை

## ரொனால்டோவின் ஒப்பந்தம்

போர்த்துக்கல் அணியின் நட்சத்திர வீரர் கிறிஸ்ரியானோ ரொனால்டோ தற்போது ரியல் மட்ரிட் அணி சார்பில் விளையாடி வருகிறார்.

இவரது ஒப்பந்தம் 2015இல் முடிவடைகிறது. இதனை 2018 ஆண்டு வரை நீடித்துள்ளனர். எவ்வளவு தொகை அதிகமாக கொடுக்கப்பட்டது என்பதை, அணி நிர்வாகம் தெரிவிக்கவில்லை. ரொனால்டோ ஆண்டுக்கு 142 ரூபா கோடி வருமானம் பெறுவார் எனத் தெரிகிறது. தவிர, ஐரோப்பிய நாடுகளில் அதிகம் சம்பாதிக்கும் உதைபந்தாட்ட வீரர் என்ற பெருமை பெறுவார். பார்சிலோனா அணியின் மெஸ்சியை விட 8 கோடி ரூபா அதிகம் பெறுவார்.

(த)



# பாகிஸ்தான் சரிவு

சிம்பாப்வே அணியிடம் தோற்ற தால், டெஸ்ட் தரவரிசைப் பட்டியலில் பாகிஸ்தான் அணி சரிவைச் சந்தித்துள்ளது. சிம்பாப்வே அணியுடனான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் அணி பரிதாபமாக தோற்றது. இதனையடுத்து சர்வதேச கிரிக்கெட் சபையின் டெஸ்ட் தர வரிசைப் பட்டியலில் 4ஆவது இடத்தில் இருந்த பாகிஸ்தான், 6ஆவது இடத்துக்குத் தள்ளப்பட்டுள்ளது.

கடந்த 2007ஆம் ஆண்டுக்கு பிறகு தரவரிசையில் மீண்டும் இடம் பிடித்துள்ள சிம்பாப்வே அணி, பங்களாதேஷைப் பின்னுக்குத் தள்ளி 9ஆவது இடத்தைப் பிடித்துள்ளது.

தென்னாரிக்க அணி 135 புள்ளிகளுடன் தொடர்ந்து முதலிடத்திலும், இங்கிலாந்து(116), இந்தியா(116) அடுத்தடுத்த இடங்களிலும் உள்ளன.

(த)




# இங்கிலாந்து பிறீமியர் லீக் முடிவுகள்




இடம்பெற்றுவரும் இங்கிலாந்து பிறீமியர் லீக் உதைபந்தாட்டத் தொடரின் கடந்த வார இறுதிக்கான போட்டி கள் சுவாரசியமாக நடந்து முடிந்துள்ளன. இந்தப் போட்டிகளில் மன்செஸ்ரர் யுனைட்டட், நியூகாசில் யுனைட் டட், ஆர்சனல், ரொட்டென் ஹம் ஹொட்ஸ் பர்ஸ், எவே ர்ட்டன் அணிகள் வெற்றி பெற்றன.

கௌதம்டன் கழகத்துக்கும், வெஸ்ட் ஹாம் யுனைட்டட் அணிக்குமிடையிலான போட்டி கோல்கள் பெறப்படாது 0 - 0 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

மன்செஸ்ரர் யுனைட்டட் அணிக்கும், கிறிஸ்ரல் பலஸ் அணிக்குமிடையிலான போட்டியில் மன்செஸ்ரர் யுனைட்டட் அணி 2 - 0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. கிறிஸ்ரல் பலஸ் அணியின் ககிஷோ டிக்க'கோய் 45 ஆவது நிமிடத்தில் சிவப்பு அட்டை காண்பிக்கப்பட்டு வெளியேற்றப்பட் டிருந்தார்.

அதே நிமிடத்தில் பெனால்ட்டி வாய்ப்பை றொபின் வான் பேர்சியும், 81ஆவது நிமிடத்தில் வெய்ன் றூனியும் கோல்களைப் பெற்று மன்செஸ்ரர் யுனைட்டட் அணி க்கு வெற்றியைப் பெற்றுக் கொடுத்தனர்.

அஸ்ரன் வில்லா அணிக் கும், நியூகாசில் யுனைட்டட் அணிக்குமிடையிலான போட்டியில் நியூகாசில் யுனைட்டட் அணி 2 - 1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. நியூகாசில் சார்பாக 33ஆவது நிமிடத்தில் ஹற் தெம் பென் ஆர்பா. 70ஆவது நிமிடத்தில் யோவான் கௌப்றான் இருவரும் தல ஒரு கோலையும். 67ஆவது நிமிடத்தில் கிறிஸ்ரியன் பென் தெக்கே ஒரு கோலையும் பெற்றனர்.

புல்ஹாம் அணிக்கும், வெஸ ட் ப்ரோம்விச் அணிக்குமிடையிலான போட்டி 1 - 1 என்ற கோல் கணக்கில் முடி வடைந்தது. புல்ஹாம் சார்பாக 22ஆவது நிமிடத்தில் ஸ்டீவ் சிட்வெல் ஒரு கோலையும், வெஸ்ட் ப்ரோ ம்விச் சார்பாக கரத் மக் ஒளலே 90ஆவது நிமிடத் தில் ஒரு கோலையும் பெற்றுக் கொடுத்தனர்.

ஹள் சிற்றி, கார்டிப் சிற்றி அணிகளுக்கிடையிலான போட்டி 1 - 1 என்ற கோல் கணக்கில் முடிவடைந்தது. ஹள் சிற்றி சார்பாக 40 ஆவது நிமிடத்தில் கோர்ட்டிஸ் டேவிஸ் ஒரு கோலையும், கார்டிஃப் சிட்டி சார்பாக 59 ஆவது நிமிடத்தில் பீற்றர் விற்றிகம் ஒரு கோலையும் பெற்றனர்.

ஸ்ரோக் சிற்றி அணிக்கும், மன்செஸ்டர் சிற்றி அணிக்குமிடையிலான போட்டி கோலேதும் பெறப்படாது சமநிலையில் முடிவடைந் தது.

> ஹள் சிற்றி சார்பாக 40ஆவது நிமிடத்தில் கோர்ட்டிஸ் டேவிஸ் ஒரு கோலையும், கார்டிஃப் சிட்டி சார்பாக 59 ஆவது நிமிடத்தில் பீற்றர் விற்றிகம் ஒரு கோலையும் பெற்றனர்.

ஆர்சனல் அணிக்கும், சண்டர்லான்ட் அணிக்குமிடையிலான போட்டியில் ஆர்சனல் அணி 3 - 1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. ஆர்சனல் சார்பாக 11ஆவது நிமிடத்தில் ஒலிவர் ஜிரோட், 60ஆவது, 76ஆ வது நிமிடங்களில் ஆறொன் றாம்சேயும், சண்டர்லான்ட் அணி சார்பாக 49ஆவது நிமிடத்தில் கிறெய்க் கார்ட்னெரும் கோல் களைப் பெற்றனர்.

ரொட்டென்ஹம் ஹொட்ஸ் பர்ஸ் அணிக்கும், நோர்விச் சிற்றி அணிக்குமிடையிலான போட்டியில் ரொட்டென் ஹம் ஹொட்ஸ் பர்ஸ் அணி 2 - 0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. அவ்வணி சார்பாக 28ஆவது, 49ஆ வது நிமிடங்களில் ஜில்பி சிகுர்ட் ஸொன் கோல்களைப் பெற்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீசாந்துக்காக வருத்தம்



சூதாட்டத்தில் ஈடுபட்ட குற்றத்துக்காக ஸ்ரீசாந்துக்கு வாழ்நாள் தடை விதித்ததற்குத் தான் வருத்தப்படுவதாகக் கங்குலி தெரிவித்துள்ளார்.
கடந்த 6ஆவது ஐ.பி. எல். போட்டியில் சூதாட்ட விவகாரம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. இதில் ஸ்ரீசாந்த் மற்றும் அங்கீத் சவானுக்கு ஆயுட்காலத் தடை விதிக்கப்பட்டது.
இதேபோல சித்தார்த் திரிவேதிக்கு ஒரு ஆண்டும், ராஜஸ்தான் அணியின் முன்னாள் வீரர் அமித்சிங்குக்கு 5 ஆண்டும் தடை விதிக்கப்பட்டது.
இந்நிலையில் ஆயுள் காலத்தடை விதிக்கப்பட்ட ஸ்ரீசாந்துக்காக வருத்தப்படுகிறேன் என இந்திய அணியின் முன்னாள் அணித்தலைவர் கங்குலி கருத்து தெரிவித்துள்ளார்.
இது குறித்து அவர் கூறுகையில், ஸ்ரீசாந்த் சூதாட்டத்தில் ஈடுபட்டு இருந்தால், ஆயுள் கால தடை விதிக்கப்பட்டது சரியான முடிவுதான். எனினும் இதற்காக நான் மிகவும் வருத்தப்படு கிறேன்-என்றார்.
இதற்கிடையே தனக்கு ஆயுள்கால தடை விதிக்கப்பட்டதை எதிர்த்து ஸ்ரீசாந்த் வழக்கு தொடரப் போவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. (த)

# மிஸ்பாவை நீக்கவேண்டும்




பாகிஸ்தான் கிரிக்கெட் அணி ஹராரேயில் நடந்த டெஸ்டில் சிம்பாப்வே அணியிடம் தோற்றது. கடைசியாக பாகிஸ்தான் அணி சிம்பாப்வேயிடம் 1998ஆம் ஆண்டு தோற்று இருந்தது.
பலவீனமான சிம்பாப்வே அணியிடம் பாகிஸ்தான் தோற்றதால் அணித்தலைவர் மிஸ்பா-உல்-ஹக் கடும் விமர்சனத்துக்கு உள்ளாகி இருக்கிறார்.
அணித்தலைவர் பதவியில் இருந்து அவரை நீக்க வேண்டும் என்று முன்னாள் அணித்தலைவரும், தொலைக்காட்சி வர்ணனையாளருமான ரமீஸ் ராஜா கூறியுள்ளார்.
இது குறித்து அவர் கூறுகையில், 39 வயதான மிஸ்பாவின் செயல்பாடில் திருப்தி இல்லை. அணியை வழி நடத்தக்கூடிய புதியவர் தேவை. இதனால் மிஸ்பாவை அணித்தலைவர் பதவியில் இருந்து நீக்க வேண்டும். இதுவே அதற்கு சரியான நேரம். என்னை பொறுத்தவரை மிஸ்பாவின் கிரிக்கெட் வாழ்க்கை முடிந்துவிட்டதாக கருதுகிறேன் என்றும் தென்னாபிரிக்கப் பயணத்துக்குப் புதிய அணித்தலைவரைத் தெரிவு செய்ய வேண்டும் எனவும் கூறியுள்ளார்.
மற்றொரு முன்னாள் அணித்தலைவர் அமீர் சோகைல் கூறுகையில், பாகிஸ்தான் கிரிக்கெட் அமைப்பை முற்றிலும் மாற்றி அமைக்க வேண்டும். உள்ளூர் போட்டியில் இருந்து சிறந்த வீரர்களை உருவாக்க பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியம் தவறிவிட்டது என்றார்.
முன்னாள் வேகப்பந்து வீரர் அக்தர் கூறுகையில், பயிற்சியாளர் பதவியில் இருந்து வாட்மோரை நீக்க வேண்டும். சிம்பாப்வே அணியிடம் தோற்றதற்கு பாகிஸ்தான் அணியின் மோசமான துடுப்பாட்டமே காரணம் என்றும் அணியின் இந்த மோசமான நிலைக்கு பாகிஸ்தான் கிரிக்கெட் சபையே காரணம் எனவும் கூறினார்.

## மெண்டிஸ், ஹேரத் இருவர் மீதும் நம்பிக்கை



சம்பியன்ஸ் லீக் 20/20 தொடரில் பங்குபற்றும் கந்துரட்ட அணியின் சுழற்பந்து வீச்சாளர்களான அஜந்த மெண்டிஸ், ரங்கன ஹேரத் இருவரும் அவ்வணிக்கு மிகப்பலமாகக் காணப்படுவதாக அவ்வணியின் தலைவர் லஹிரு திரிமன்ன தெரிவித்துள்ளார். சம்பியன்ஸ் லீக் 20/20 தொடருக்காக இந்தியாவுக்குச் சென்றடைந்துள்ள நிலையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
சம்பியன்ஸ் லீக் 20/20 தொடரின் தகுதிகாண் போட்டி களில் பங்குபற்றவுள்ள கந்துரட்ட அணி, தகுதிகாண் போட்டிகளில் முதலிரு இடங்களைப் பெற்றால் சம்பியன்ஸ் லீக் தொடருக்காகத் தகுதிபெறும்.
இந்நிலையில் கருத்துத் தெரிவித்த அவர், இலங்கையின் தட்ப, வெட்ப நிலைகளும், இந்தியாவின் தட்ப வெப்ப நிலைகளும் ஒரு மாதிரியாகக் காணப்படுவதால் இந்தியாவில் போட்டிகளில் பங்குபற்றுவது தங்களுக்குச் சாதகமாக அமையும் எனக் குறிப்பிட்டார்.
அஜந்த மெண்டிஸ், ரங்கன ஹேரத் போன்ற சிறப்பான சுழற்பந்து வீச்சாளர்கள் அணியில் காணப்படுவது தங்களுக்கு வெற்றியைப் பெற்றுக்கொள்வதற்கான அதிக வாய்ப்புக்களை வழங்குவதாக அவர் தெரிவித்தார்.
வேகப்பந்து வீச்சில் நுவான் குலசேகர, டில்ஹார லொக்குஹெட்டிகே இருவரும் காணப்படுவது அணிக்குச் சிறப்பானது என்ற போதிலும், இத்தொடரில் தங்களது வெற்றிக்காக அஜந்த மெண்டிஸ், ரங்கன ஹேரத் இருவரையும் நம்பியிருப்பதாக அவர் தெரிவித்தார்.
குமார் சங்கக்காரவின் ஐ.பி.எல் அணியான சண் றைசர்ஸ் ஹைதராபாத் அணி சம்பியன்ஸ் லீக் 20/20 தொடரின் தகுதிகாண் சுற்றிற்குத் தகுதி பெற்றுள்ள போதிலும், கந்துரட்ட அணி சார்பாகவே அவர் இத்தொடரில் பங்குபற்றவுள்ள நிலையில், அது தங்கள் அணிக்கு மிகவும் சாதகமானது எனக் குறிப்பிட்ட லஹிரு திரிமன்ன, சண் றைசர்ஸ் அணி சம்பந்தமான விடயங்களை குமார் சங்கக்கார பகிர்ந்து கொண்டதாகவும் தெரிவித்தார்.

★ இத்தாலி சட்டரீதியாகச் செல்ல ஆலோசனை
★ நோர்வே, ஜேர்மனி, சுவிஸ் சட்டரீதியான நுழைவிற்கு துரித ஆலோசனை
★ டென்மார்க்கில் படிக்க, 250,000/= வரை உழைக்க ஆலோசனை
★ உணவு, இருப்பிடம், ரிக்கற் இலவசம்.
★ கொலண்டில் படிக்க 200,000/= வரை உழைக்க ஆலோசனை
★ உணவு, இருப்பிடம், ரிக்கற் இலவசம்.
★ மலேசியாவில் படிக்க, 65000/= வரை உழைக்க சட்ட ஆலோசனை
★ வெறும் 300000/= மட்டும் போதுமானது.

திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்
175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
021 221 9016, 021 568 9090



(31828)(4.6.3)

After A/Level's..
இம் மாத பதிவுகளுக்கு எங்களுடன் இணைந்து Pendrive ஒன்றினை இலவசமாக பெற்றுக்கொள்ளுங்கள்
New batches
18. 09. 2013
21. 09. 2013
@ 9.00 am
ESOFT Diplomas have an International Recognation
DiTEC Diploma in Information Technology — International + ESOFT Certificates — 4 Months
DiWE Diploma in Web Engineering — International + ESOFT Certificates — 6 Months
DiSE Diploma in Software Engineering — International + ESOFT Certificates — 6 Months
DiBM Diploma in Business Management — International + ESOFT Certificates — 4 Months
DiCA Diploma in Computerized Accounting — International + ESOFT Certificates — 4 Months
DiE Diploma in English — Grammar | Spoken | Comprehension — International + ESOFT Certificates — 4 Months
edexcel Assured
Dual Certificates



ESOFT
Shaping Lives, Creating Futures.
இடமிருந்து
ESOFT METRO CAMPUS - JAFFNA
No 137, K K S Road, Jaffna | Tel :021 222 4142
HOTLINE : 077 309 9 308
Nelliady — 151, Jaffna Rd — 021 226 4940
Kilinochchi — 01, Kanagapuram Rd, — 021 228 5444
Jaffna 2nd Branch — 17/1 Brown Rd, Jaffna — 021 750 1120

கடை வாடகைக்கு
யாழ். நாவலர் வீதியிலும் கச்சேரி-நல்லூர் வீதியிலும் இரண்டு கடைகள் வாடகைக்கு உண்டு.
31783 தொடர்பு: 0718474325




உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உயர்ந்த சம்பளத்துடனான வேலைவாய்ப்பை இலக்காக கொண்ட பயிற்சிப்பட்டறை
Web Desiging, Multimedia, Networking
பங்குபற்ற விரும்புவோர் உங்களது <NAME> WS <Course> என type செய்து 772 395 895க்கு sms செய்யவும். மேலதிக விபரங்கள் யாழ். பல்கலைக்கழகத்திற்கு அண்மையில் உள்ள MCS வளாகத்தில்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 17.09.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# வட மாகாண சபைத் தேர்தல் 2013



**கடந்த 30வருடங்களாக உரிமைப் போராட்டத்திற்குப் பங்களித்து தொடர்ந்தும் பணியாற்றிவரும் மக்களின் அன்பிற்குரிய வேட்பாளர்கள்**




*சூழலியலாளர்*
**பொ. ஐங்கரநேசன்**
Msc,PGDJMC



*அரசியல் சிந்தனையாளர்*
**கலாநிதி க. சர்வேஸ்வரன்**
B.A Hons (Pol Sc), M.A., Ph.D விரிவுரையாளர்



*தலைவர், வ.மா.க.தொ.கூ.ச*
**ந.வி. சுப்பிரமணியம்**



இலங்கைத் தமிழரசுக் கட்சி

X 24 16

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

## வடக்கு மாகாணசபைத் தேர்தல் 2013

ஆயதக் கலாச்சாரத்திற்கு முற்றுப்புள்ளி வைத்து மக்களுக்குச் சிறந்த சேவை செய்திட ஆதரிப்போம்



X 11

குமாரு
**சர்வானந்தன்**

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி

## வடக்கு மாகாணசபைத் தேர்தல் 2013

மனித உரிமைகள் பாதுகாவலர்
'சட்டத்தைப் பேண குரல் கொடுப்பவர்



X 18

சட்டத்தரணி முடியப்பு
**றெமிடியஸ்**

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

TNA Tamil National Alliance
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேர்தல் பரப்புரை

## மாபெரும் பொதுக்கூட்டம்

இடம் : பருத்தித்துறைக் கடற்கரை மைதானம் (நடராஜா அரங்கு)
காலம் : நாளை (18.09.2013) புதன்கிழமை பி.ப 4.00 மணி
தலைவர்: தேசமானிய சபா ரவீந்திரன் J.P.U.M
(சட்டத்தரணியும், நகரபிதாவும் )

எமது கட்சியின் கௌரவ நாடாளுமன்ற உறுப்பினர்களும், யாழ் மாவட்டத்தின் எமது அணியின் அனைத்து வேட்பாளர்களும் கலந்து கொண்டு கருத்துரைகள் வழங்கவுள்ளார்கள்.

யாழ் முன்னணி இசைக்கலைஞர்களின் இசைநிகழ்வும் இடம்பெறும்.

அனைவரும் அலைகடலெனத் திரண்டு வாருங்கள்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

## தேர்தல் விதி மீறிய 125 பேர் கைது

மூன்று மாகாண சபைகளுக்கும் எதிர் வரும் 21 ஆம் திகதி தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் இது வரை தேர்தல் விதி மீறல்களில் ஈடுபட்ட 125 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் அறிவித்துள்ளனர்.

சுவரொட்டிகளை ஒட்டுதல், கைகலப்பில் ஈடுபடல், மற்றும் சட்டத்துக்கு புறம்பான தேர்தல் பரப்புரையில் ஈடுபடுதல் போன்ற குற்றச் சாட்டுக்களின் பேரில் இவர்கள் கைதாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இதேவேளை பொலிஸ் நிலையங்களில் தேர்தல் விதிகளை மீறியதான 154 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை தேர்தகள் செயலகத்தில், விதிமீறல்கள் தொடர்பில் 427 முறைப் பாடுகள் பதிவாகியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது (ஐ)

## வட மாகாண சபைத் தேர்தல் 2013
யாழ். மாவட்டம்



தேர்தல் மழைக்கு முளைத்த காளான்களல்ல நாம்.
காலந்தோறும் எம் மக்கள் துயர்துடைத்து வாழ்ந்தவர்கள்.
- எம்மக்கள்
வறுமை இருளதனை வேருடன் சாய்க்க
- ஒருமுறை
சந்தர்ப்பம் தாருங்கள் நாம் சாதனைகள் படைப்போம்!

**சூசைமுத்து அலெக்ஸ்சாண்டர்(சாள்ஸ்)**

உரிமை சிறக்க
சேவை சிறக்க
EPDP ஈழ மக்கள் ஜனநாயக கட்சி
X 8

## வடமாகாணசபைத் தேர்தல் 2013
கிளிநொச்சி மாவட்டம்

வடமாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும்
**ஒரேயொரு விவசாயி**
கௌரவ நாடாளுமன்ற உறுப்பினர்
சுரேஷ் பிரேமச்சந்திரனின் தெரிவு





விவசாயிகளின் தோழன்
**பூ. தர்மகுலசிங்கம்**
(சவுதி)

இலங்கைத் தமிழரசுக் கட்சி
X 6
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

## வடக்கு மாகாணசபைத் தேர்தல் 2013

காடைத்தனத்தை அநீதியை ஒழிக்க,
சாந்தி,சமாதானத்தைப் பாதுகாக்க
ஆதரிப்போம்



X 2

சிவக்கொழுந்து
**அகிலதாஸ்**

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி

## வடக்கு மாகாணசபைத் தேர்தல் 2013

இனங்களை ஒன்றிணைத்திட
சமாதானத்தை நிலை நாட்டிட
ஆதரியுங்கள்



X 4

அண்ணன்
**சிராஸ்**

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org